சுடரொளி வாசகர்களுக்கு இனிய பொங்கல் வாழ்த்துகள்

# இலண்டன் சுடரொளி

**CHUDEROLI** JAN - FEB தை - மாசி **2007**

## முதலாம் உலகத் தமிழ் வாசகர் மாநாட்டுச் சிறப்பிதழ்






சுடரொளியை வாசிக்கின்ற மலேசியப் பொதுப் பணித்துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு

£ 1.00

# A-Lanka Travel Ltd

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

## Worldwide Travel Agent

wimal@a-lankatravel.co.uk
www.a-lankatravel.co.uk

**Special Rates for**
**Colombo £330 + tax,**
**Madras £410 + tax,**
**Canada £199 + tax,**
**Singapore and Europe**




**உலகின் எப்பாகத்திற்கும் மலிவான விலையில் விமானச்**
**சீட்டுக்கள் வாங்கிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்**

**Main Agent in UK for Aero Lanka & Lion Air**

Wimal@a-lankatravel.co.uk www.a-lankatravel.co.uk

இலண்டன் வாழ் நம்பிள்ளைகள் எம் உறவுகளைக் கண்டு மகிழ்வதற்கும்
நல்லூர்க்குமரனைத் தரிசிப்பதற்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்




அவசர உடன் டிக்கட்களுக்கு
அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி / நிரஞ்சன் /
ரஜீவன் / கலா
Nik / Peter / Ruth ;

# சுடரொளி
# CHUDEROLI

*கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்*

*சுடர் 4* *ஒளி 15* *தை-மாசி 2007*



***கௌரவ ஆசிரியர் :***
*திரு. சி. சரவணபவன் (சிற்பி),* M.A.,

***ஆசிரியர்கள் :***
*திரு. பொன் பாலசுந்தரம்*
*திரு. ஐ.தி. சம்பந்தன்*

***ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :***
*திரு. மயில் மனோகரன்*
*திரு. எஸ். கருணானந்தராசா*
*திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்*

***நிர்வாகம் :***
*திருமதி. செல்வதி சம்பந்தன்,* B.A,(Hons)

***வடிவமைப்பு :***
*உலகத் தமிழர் பதிப்பகம்*

***கணினி :***
*திருமதி. சரோஜா இலட்சுமணன்*



***வெளியீடு :***
Chuderoli Publication Society,
15, Rutlland Road, London E7 8PQ
United Kingdom
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com

***தமிழகப் பிரதிநிதி :***
*திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,*
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 55180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com
utpmathi@yahoo.co.in

***மலேசியப் பிரதிநிதி :***
*திரு. ஈழவேங்கையனார்*
E-mail : rescue247tamilworld@yahoo.com

Annual Subscription (six issues)

| | | |
|---|---|---|
| UK | : | £ 12 |
| Europe | : | £ 15 |
| India | : | Rs. 200 |
| Sri Lanka | : | Rs. 400 |
| All other countries | : | £ 20 |

படைப்பின் கருத்துகளுக்குப் படைப்பாளரே பொறுப்பு


## இந்த இதழில்


1. நாடக எழுத்தாளர் எஸ்.எஸ். துரை 2
2. எமது நோக்கு : ஈழத்தில் தனி அரசு உருவாக ஆதரவு தாரீர்! 3
3. வையகம் போற்றும் வைகுந்தவாசன் 5
4. தமிழ் தந்த தாதாக்கள் 6
5. காமத்துப்பால் அறஇலக்கியமா?-க.ப. அறவாணன் 11
6. தமிழகம் எனது இரண்டாவது தாயகம்-ஜு ஜுவான் 13
7. ஈழத்து நாடக மேதை வைரமுத்து 18
8. தமிழ் இயக்கம் : உண்ணாவிரதப் போராட்டம் 25
9. இதோ ஒரு சாதனைத் தமிழர் 29
10. மலேசியத் தமிழ் நூல்களைப் பதிவுசெய்தல்-என்.செல்வராஜா 34
11. பொ. கருணாகரமூர்த்தி-படைப்பாளிகளின் நம்பிக்கை நட்சத்திரம் 38
12. தமிழ் மொழியின் உயர் பெரும் சிறப்பு 49
13. திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!! 51
14. தி.க. சந்திரசேகரனின் கதை நேரம் 56


தமிழீழத் தத்துவாசிரியர்

## கலாநிதி அன்ரன்பாலசிங்கம் அவர்கள்
### இவ்விதழில் கௌரவிக்கப்படுகிறார்



கடந்த மூன்று தசாப்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு அளப்பரிய பங்காற்றிவரும் கலாநிதி அன்ரன் பால சிங்கம் தொடர்ச்சியாக ஒரே அமைப்பிலிருந்து தமது முழுமை யான பங்களிப்பை இதய சுத்தியுடன் அளித்து வந்த பெருமகன். தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தோடு இணைந்து தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் விசுவாசியாகச் செயற்பட்ட நம்பிக்கைக்குரிய வர். ஒரு சிறந்த ஆலோசகர், தத்துவ ஞானி. தமது அரசியல் திறனையும் இராஜ தந்திரத்தையும் தமிழீழ விடுதலைக்குப் பயன்படுத்திய ஈழத்தமிழ் அறிஞர்.

ஒரு வெளிநாட்டுப் பெண்மணியைத் தமது துணைவியாகக் கொண்டி ருந்தபோதிலும் அவரையும் விடுதலைப் போராட்டத்தின் பங்காளியாக்கி ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் குடும்பமாக விளங்கி னார். இயக்க வெளியீடுகள், தமிழீழப் போராட்ட வரலாறுகளை அவ்வப்போது எழுதி ஆவணப்படுத்திய இருவரையும் தமிழினம் என்றும் மறவாது.

அண்மையில் வெளியான War and Peace சுதந்திர வேட்கை ஆகிய நூல்கள் ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றை விரிவாக எடுத்துக் கூறுகிறது.

இதுவரையும் இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நடத்தி வந்த பேச்சுவார்த்தையில் எதிர்த்தரப்பினர் வெல்ல முடியாதளவு வல்லமையும் ஆளுமை யும் கொண்டவராக இவர் விளங்கினார். அரசியல் ஆழமும் இராஜதந்திரமும் இவரது திறமையும் இணைந்து சர்வதேசச் சமூகத்தின் ஆதர வினை விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுக் கொடுத்தது.

கொழும்பிலிருந்து இலண்டனுக்கு வருகை தந்திருந்த ''உதயன்'', ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகையின் ஆசிரியர் திரு. வித்தியாகரன் கலாநிதி அன்ரன் பால சிங்கம் அவர்களுடன் கலந்துரையாடியிருந்தார். அவருடன் உரையாடியபோது ''இன்று தமிழீழ விடுதலைக்குச் சர்வதேசச் சமூகத்தின் ஆதரவைத் தட்டியெழுப்பக் கூடிய வல்லமை படைத்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் போன்றவரைக் கண்டு பிடிப்பது கடினம்''. தேசியத் தலைவர் பிரபாகரன் காலத்தில் விடுதலை கிடைக்கு மென்று உறுதியாகக் கூறினார் என்றார். நோயுற்ற நிலையிலும் ஈழத்தமிழர்களுக்கு, இத்தகைய ஒருவர் வாழும் போது கௌரவிக்கப்பட வேண்டும். இந்த நோக்கில் இங்கு கௌரவிக்கப்படுகின்றார்.

இச்செய்தி எமது அச்சகத்திற்கு மின்அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட சில மணி நேரத்தின் பின்னர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மறைந்தார் என்ற செய்தி யறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். அவர் உயிருடன் இருக்கும்போது தயாரிக்கப் பட்ட அவருக்கு கௌரவம் அளிக்கும் செய்தியை அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் செய்தியாக வெளியிடுகின்றோம்.

ஐ.தி. சம்பந்தன், ஆசிரியர் குழு சார்பாக.

# நாடக எழுத்தாளர் திரு. எஸ்.எஸ். துரையின் நாடக நூல்கள் வெளியீட்டு விழா

11-11-2006 இல் இலண்டன் முத்துமாரியம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற போது இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் காப்பாளர் வைத்திய கலாநிதி சிவஞானப்பிரகாசம் அவர்கள் ஆற்றிய உரை.

நாடக வளர்ச்சிக்குப் புத்துயிரளித்த பெருமைக் குரிய தலைவர் தாஸீசியஸ் அவர்களே, மேடையில் வீற்றிருக்கும் அறிஞர்களே, சபையோர்களே, உங்கள் எல்லோருக்கும் என் அன்பான வணக்கம்.

எமது பாரம்பரியம் நிறைந்த இயல், இசை, நாடகம் என்னும் முக்கலைகளையும் வளர்த்து வந்த, வளர்த்து வரும் பெருமைக்குரியவர்கள் நாங்கள். நாடகக் கலை வளரவும் அது நிரந்தரமாக எம்முடன் சங்கமமாகி வாழ்ந்து வரவும் தன்னை அர்ப்பணித்திருக்கும் திரு. எஸ்.எஸ். துரை அவர்களின் நான்கு வானொலி நாடகப் படைப்புகளின் வெளியீட்டில் இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் சார்பில் உரையாற்றுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் வாழ வேண்டும், எழுத்தாளர்களுடைய படைப்புகள் மக்கள் மத்தியில் பரவவேண்டுமென்ற ஆதங்கத்துடன் தான் சுடரொளி வெளியீட்டுக் கழகம் தனது பணியைச் செய்து வருகிறது. இது கழகம் மேற் கொண்ட 17 ஆவது வெளியீடாகும். உலகளாவிய நிலையில் இன்று பரந்து வாழும் தமிழ் எழுத்தாளர் களுடைய படைப்புகளுக்கு உலகத் தலைநகரில் அரங் கேற்றம் நடைபெறவேண்டுமென்ற அவாவுடன் இப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு அம்சம் தான் இன்று இந்த மண்டபத்தில் நடைபெறும் திரு. துரை அவர்களின் வானொலி நாடகங்களின் வெளியீடாகும். கனடாவில் வாழும் எழுத்தாளர் ஒருவரின் படைப்புகளுக்கு இலண்டனில் வெளியீட்டு விழா வைப்பது பெருமைக்குரியதாகும்.

நான் திரு. தாஸீசியஸ் அவர்களைப் போல ஒரு நாடகமேதையில்லை. திரு. துரை அவர்களைப் போல் படைப்பாளியாகவுமில்லை. என்னை இத்துறை யில் ஒரு இரசிகனாகத்தான் கணித்துள்ளேன். உண்மை யில் இரசிகர்கள் தான் நாடகங்களின் முக்கிய பங்காளி கள். அவர்களினால் தான் கலைகள் வளர்கின்றன. நானும் அப்படியான ஒரு பங்காளியாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்.

நாடகக் கலை ஈழமக்களுடன் காலாதி காலமாக வாழ்ந்தும் வளர்ந்தும் வந்திருக்கிறது. இராமாயணம், பாரதப்போர், அரிச்சந்திரப்புராணம், நல்லதங்காள் கதை ஆகியவற்றை எல்லாம் பேணிப் பாதுகாத்து வளர்த்த பெருமைக்குரியவர்கள் எமது பரம்பரையினர். இராமாயணத்தைப் பற்றியும் மகாபாரதத்தைப் பற்றியும் அறியாதவர்கள் எமது நாட்டிலில்லை என்றே கூறலாம். அரிச்சந்திர புராண மயான காண்டம் மேடையேறிய போது கதறிக் கண்ணீர் விட்டனர் மக்கள். அவ்வள விற்கு உன்னத படைப்புகளாக நாடகங்கள் விளங்கின.

இப்படியாக நாடகம் வளர அவற்றை எழுதி வானொலி மூலம் மேடையேற்ற முன்னிற்பவர்களில் ஒருவராகவே திரு. துரை அவர்களை நான் பார்க் கிறேன். இதிகாச, சரித்திர நாடகங்களைத் தொடர்ந்து சமூக நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. ஆனால் இன்று மக்களின் உள்ளுணர்வுகளையும் உணர்ச்சிகளை யும் உறவுகளையும் நாடகங்கள் மூலம் பிரதிபலிக்கச் செய்ய வேண்டிய கால கட்டத்தில் நாமிருக்கிறோம். அந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் திரு. துரை அவர்களின் வானொலி நாடகங்கள் அமைந் திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இவரது நாடகங்களை மேடையேற்றும் கண் ணோடு பார்க்கக் கூடிய கலையரசு சொர்ணலிங்கம், நாடக மேதை வயிரமுத்து, சண்முகநாதன் போன்ற வர்கள் இன்று நம் மத்தியில் இல்லாமலிருப்பது வருத்த மளிக்கிறது. இப்படியான இடைவெளிகளை நிரவல் செய்வதற்கு தாஸீசியஸ், பாலேந்திரா ஆகியவர்கள் எடுத்துவரும் முயற்சிகளுக்கு மக்கள் பக்கபலமாக இருக்க வேண்டும்.

ஈழத்தில் உணர்ச்சி நாடகங்கள் பட்டிதொட்டிகள் எங்கும் மேடையேற்ற வேண்டும். மக்கள் தமது இன்னல் களை மறந்து ஒரு சிறிதளவு நேரமாவது மகிழ்ச்சி யடைய வழிகாண்பது எமது கடமையாகும். ஆனால் இன்றைய சூழல் அதற்குச் சாதகமாக இல்லையென் பதும் தெரிகிறது. எனினும் மக்களின் மனநிம்மதிக்கான வழிகாண்பது அவசியம். பழைய காலத்துத் தெருக் கூத்துக்கள் போல இவை நிறைவேற்றப்பட்டால் கூட நல்லதென நினைக்கிறேன்.

நாடகங்களை மேடையேற்றுவதிலும் அதற்கான உத்திகளைக் கையாள்வதிலும் மக்களுக்கான படைப்பு களைத் தயார் செய்வதிலும் திறமைசாலிகளாக விளங் கும் பலர் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் கட்டாயமாக ஒரு நல்ல முடிவுக்கு வருவார்களென நம்புகிறேன்.

எனக்கு இச்சந்தர்ப்பத்தைத் தந்த உங்கள் எல்லோருக்கும் நன்றி.

நாடக வளர்ச்சிப்பணியில் தம்மை அர்ப்பணித் திருக்கும் திரு. துரை அவர்களின் பணி தொடரவும், அவர் இத்துறையில் புகழ்பெற்று வாழவும் எனது வாழ்த்துக்கள்.



# எமது நோக்கு

## ஈழத்தில் சுதந்திரத் தனிஅரசு உருவாக ஆதரவு தாரீர்!

ஈழத்தமிழர்கள் கடந்த 57 ஆண்டுகளாக தாம் இழந்த ராஜ்ஜியத்தை மீட்பதற்காக நீண்ட போராட்டம் நடத்தி வருவதை சர்வதேசம் நன்கு அறியும்.

ஆங்கிலேயர் இலங்கையை 150 ஆண்டுகாலம் ஆட்சி புரிந்தபோது தங்களின் நிருவாக வசதிக்காக இலங்கையிலிருந்த மூன்று இராஜ்ஜியங்களையும் ஒன்றுபடுத்தி ஒரு நிருவாகக்கட்டமைப்பின் கீழ் கொண்டுவந்தனர். தமிழ் இராஜ்ஜியம் அதாவது வடகிழக்கு தமிழர் தாயகமும் அந்த நிருவாகத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

பிரித்தானிய அரசு 1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய போது முழு இலங்கையும் சிங்களப் பெரும்பான்மை இனத்தவரின் அதிகாரத்திற்குள் வழங்கிவிட்டுச் சென்றனர். இரத்தம் சிந்தாது பெற்ற சுதந்திரத்தைச் சிங்களத் தலைவர்கள் துர்பிரயோகம் செய்ய முற்பட்டனர்.

கோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சில் வழங்கப்பட்ட சுதந்திரம் பெரும்பான்மை சிங்கள இனத்திற்குப் பெறுவதற்காகச் சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களுக்கு ஆசை வார்த்தை கூறி, தங்களுக்குச் சாதகமான முறையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டனர். ஆன்றிருந்த விவேகம் மிக்க தமிழ்த் தலைவர்களையும் ஏமாற்றிவிட்டனர்.

ஆட்சி அதிகாரத்தை ஏற்ற சிங்கள அரசு 1949 லிருந்து இலங்கைவாழ் தமிழர்களின் உரிமைகளைப் பறித்து அடிமைகளாக்கிப் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றியது. 1949 ன் இந்திய பாகிஸ்தானிய பிரஷா உரிமைச்சட்டம், சிங்களம் மட்டும் சட்டம், மூன்று புதிய அரசியல் சட்டங்கள் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசத்தில் சிங்கள மக்களின் குடியேறுவதற்கான சட்டம், தமிழர் கல்வியைத் தரப்படுத்தல் மூலம் மட்டுப்படுத்தல் சட்டம், தமிழ் உரிமைப் போராட்டத்தை முறியடிக்கவும் தமிழ் இளைஞர்களைக் கொல்லவும் சித்திரவதை செய்யும் பயங்கரவாதத் தடைச்சட்டம், பாடசாலைகளைத் தேசியமயமாக்கித் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு உலைவைத்த சட்டம், இவ்வாறு பல்வேறு கொடிய சட்டங்களினால் ஈழம் வாழ் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கப்பட்ட போது தமிழர்கள் பொங்கி எழுந்து அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் கடந்த 50 வருடங்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

1983 இல் ஆரம்பமாகிய முழுமையான ஆயுதப் போராட்டத்தினால் இதுவரையும் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் உயிர் இழந்ததோடு, 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இந்தப் போராட்டத்தினால் தமிழர் தாயகப் பகுதியில் 60 வீதமான பிரதேசத்தை இன்று விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். நிருவாகத்தையும் நடத்தி வருகின்றனர்.

யாழ்குடா நாட்டின் பெரும்பகுதியை ஆனையிறவு வீழ்ச்சியின் பின் விடுதலைப் புலிகள் கைப்பற்ற இருந்த நேரத்தில் இந்திய அரசின் தலையீட்டால் கைவிடப்பட்டது. இந்தப் பிரதேசத்தை மீளப்பெறுவதற்கு இந்திய அரசு உதவ வேண்டிய தார்மீக கடமைப்பாடு உண்டு. விடுதலைப்புலிகள் இராணுவப்பலத்தையும் ஈட்டிய சாதனைகளையும் கருத்தில் கொண்டு 2002 ஆம் ஆண்டில் சிங்கள அரசு விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து நாட்டில் ஒரு சமாதானநிலையை உருவாக்கினார்.

ஆனால் அந்த ஒப்பந்தத்திலுள்ளபடி தமிழர் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்பு வேலைகளோ, உயர் பாதுகாப்பு வலையத்திலிருந்து சிங்கள இராணுவம் வெளியேறுவதோ நடைபெறவில்லை. சமாதான ஒப்பந்தம் செய்து நான்கு வருடங்கள் நிறைவடைந்தும் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஏற்படவில்லை.

காலத்தை வீணடித்து சர்வதேச நாடுகளின் நிதியுதவியைப் பெற்று சிங்களதேசத்தை அபிவிருத்தி செய்தார்களே தவிர தமிழர் தாயகத்தை வறண்ட பிரதேசமாக்கியதோடு மக்களைப் பட்டினிச் சாவில் மடிவதற்குமான நிலையை சிங்கள அரசு அரங்கேற்றியுள்ளது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் மூன்று சிங்களத் தலைவர்கள் ரணில், சந்திரிகா, மகிந்தா ஆகியோர் ஆட்சியைக் கைப்பற்றினர். கடைசியாக ஆட்சியைக் கைப்பற்றிய மகிந்த தடித்த சிங்களப் பேரினவாதி. அவரது ஒரு வருட ஆட்சியில் 2000 மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆள்கடத்தல், கற்பழித்தல், அரசு சார்பற்ற தொண்டர்களைக் கொலை செய்தல், தமிழர் பகுதிக்கான மனிதாபிமான உதவிகளை வழங்க மறுத்தல், ஏ9 பாதையை மூடி வடபகுதியிலுள்ள 6 இலட்சம் மக்கள் பட்டினிச்சாவில் மடியச் செய்து வரும் கொடுமை, கிழக்கு மாகாணத்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்து வாழ்ந்து வரும் இடங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் செய்து மக்களைக் கொன்று குவித்தல், அவர்களுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் ராணுவம் தடுத்து

நிறுத்தி பழிவாங்குதல், தமிழர் தாயக மக்களுக்கு மருத்துவ வசதி சுகாதார வசதிகள் வழங்க மறுத்தல் போன்ற கொடூர சிங்கள ஆட்சியின் கீழ் வாழ்ந்து வரும் மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உண்டு.

இதை நன்கு உணர்ந்த விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது மாவீரன் உரையில் குறிப்பிட்டுள்ள விடயம் தமிழர்களுக்குச் சுதந்திர அரசு ஒன்றை அமைப்பது தான் ஒரே வழி என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளார்.

சர்வதேச சமூகத்தினரால் வேறு எவராலும் ஈழத் தமிழர்களின் அடிப்படை சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்பது தெட்டத் தெளிவாகி விட்டது. எனவே இப்பொழுது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள 60 வீதமான பிறதேசத்துடன் மேலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தமிழர் தாயகத்தை மீட்டெடுத்து ஒரு சுதந்திரப் பிரகடனம் விரைவில் மேற் கொள்ளப்பட வேண்டிய நிலையைச் சிங்கள அரசு உருவாக்கியுள்ளது.

இந்த மிக முக்கியமான கட்டத்தில் உலகமெல்லாம் பரந்து வாழும் 9 கோடி தமிழர்களுக்குப் பாரிய பணியுண்டு. எல்லாத் தமிழர்களும் ஒன்றுபட்டு தனி அரசுப்பிரகடனத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

அவர்கள் வாழ்ந்து வரும் நாடுகளில் அரசாங்கத்தைத் தனிஅரசை அங்கீகரிக்குமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும். ஒரு தாயகமண்ணும் இல்லாத யூதர்கள் எவ்வாறு 'இஸ்ரவேல்' என்ற ஒரு நாட்டை உருவாக்க உலகெல்லாம் பரந்து வாழ்ந்த யூதர்கள் சர்வதேச நாடுகளுக்கு அழுத்தத்தைக் கொடுத்து பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளைக் கொண்டு அங்கீகரிக்க நிவைத்தார்களோ, அதே போன்று யூதர்கள் போன்ற வல்லமையும் திறமையும் அறிவாற்றலுமிக்க தமிழர்கள் உலகமெலாம் பரந்து வாழ்கிறார்கள்.

உலகத் தமிழர்கள் எல்லோரும் ஒன்று பட்டு ஈழத்தனியரசை அங்கீகரிக்க குரல் கொடுங்கள் என்று பொங்கல் திருநாளில் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது.

## உலகத் தமிழ் வாசகர் மாநாடு வெற்றிப்பெற
## சுடரொளி ஆசிரியர் குழுவும் காப்பாளர்களும் வாழ்த்துகிறார்கள்

தமிழ்மொழி, தமிழியம், தமிழியல் போன்ற துறைகளில் முதலாவது மாநாடுகளை நடத்துவதில் முன்னணி வகுத்துவரும் மலேசியா வாழ் தமிழர்கள் முதலாவது உலகத் தமிழ் வாசகர் மாநாட்டையும் இலண்டன் சுடரொளியின் சார்பில் நடத்த ஏற்பாடு செய்துவருவது எமக்கெல்லாம் அளவிலா மகிழ்ச்சியை அளித்துள்ளது.

முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை மலேசியாவில் நடத்திய வணபிதா தனிநாயகம் அடிகளார் மலேசிய நாட்டுத் தமிழ் மக்களின் தமிழுணர்வையும் தமிழ்ப்பற்றையும் வியந்து பாராட்டினார்.

மலேசியா வாழ் தமிழ்மக்கள் மட்டுமன்றி, ஏனைய இனத்தவர்களும் மலேசிய அரசாங்கமும் இது போன்ற மாநாடுகளுக்கு ஆதரவு நல்குவது மலேசியா நாட்டின் பாராட்டுதலுக்குரிய பண்பாகும்.

இதுவரையும் நடைபெற்ற பல தமிழ்சார்ந்த மாநாடுகள் வெற்றியாக நடைபெற்றுள்ளன. மலேசியா வாழ் தமிழ்மக்கள் தமிழையும் தமிழ்க்கலையையும் தமிழ் எழுத்தாளர்களையும் வளர்ப்பதில் காட்டி வரும் ஆர்வம் மெச்சத்தக்கது.

மலேசியாவில் பல எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் பல படைப்புகளை வெளிக் கொணர்ந்து உள்ளனர். இந்நூல்களில் கரைபுரண்டோடும் தமிழ் வசனங்கள், கருத்துகள் தமிழீழ எழுத்தாளர்களின் தமிழ் நடைக்கு ஏற்றதாகவும் காணப்படுவது தூயதமிழ் நடைகளை மலேசிய எழுத்தாளர்கள் பேணி வருகின்றனர் என்பதற்கு எடுத்துக்காட்டு.

இம்மாநாட்டுச் சிறப்பிதழாக வெளிவரும் சுடரொளி இதழில் மலேசியா தொடர்பான செய்திகள் கூடுதலாக இடம் பெற்றுள்ளன.

மலேசியாவில் பெருந்தொகையான தமிழ் நூல்கள் வெளிவந்திருப்பதை அறிந்துள்ள நூலகவியலாளர் திரு. என். செல்வராசா அவர்கள் மலேசியா எழுத்தாளர்களின் நூல் தகவல்களைக் கொண்ட ''நூல் தேட்டம்'' தொகுப்பைத் தயாரித்து வருவது அறிந்து பெருமை அடைகின்றோம். இந்நூல் தேட்டத்தில் மலேசியா எழுத்தாளர்களின் 1000 நூல்கள் பற்றியத் தகவல்கள் இடம்பெறும் என அறிகின்றோம். இத்தகைய பெருந்தொகையான படைப்புகள் உள்ள நாட்டில் நடைபெறும் உலகத் தமிழ்வாசகர் மாநாட்டில் பெருந்தொகையானோர் பங்குகொண்டு ச் சிறப்பிப்பார் கள் என்பதில் ஐயமில்லை. கடந்த நான்கு ஆண்டு களாகத் தொடர்ந்து வெளிவரும் சுடரொளி ஒரு சர்வதேச கலை. இலக்கிய, சமூக, அரசியல் வெளியீடாக, பரிமாணம் பெற்றுள்ளது. மலேசிய நாட்டு வாசகர்கள் அளித்துவரும் ஆதரவு எமக்கு உந்துசக்தியாக விளங்குகிறது.

இம்மாநாட்டைச் சிறப்புடன் நடத்திக் கடந்த பல மாதங்களாக அயராது உழைத்து வரும் யுனெஸ்கோ மன்றப் பணிப்பாளர் திருஈழவேங்கையனார் அவர்களுக்கும், சுடரொளியின் தமிழகப் பிரதிநிதி இரா. மதிவாணன் அவர்களுக்கும் அவர்களது குழுவினருக்கும் சுடரொளியின் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம். மாநாடு வெற்றியுடன் நடைபெற எமது வாழ்த்துக்கள்.

அன்புடன்
**ஐ.தி. சம்பந்தன்,**
நிருவாக ஆசிரியர் இலண்டன் சுடரொளி

# வையகம் போற்றும் வைகுந்தவாசன்

மறைந்த சட்டத்தரணி வைகுந்தவாசன் 1982 இல் நிறைவேற்றிய தமிழீழப் பிரகடனமும் தமிழ்த் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் தனிஅரசு அமைப்பதற்கான அறைகூவலும் இப்போது நினைவுகூரத்தக்கது.

இலங்கை அரசியலில் நீடித்த இடதுசாரியாக 1950 இல் வளர்ச்சியடைந்திருந்த திரு. வைகுந்தவாசன் ஒரு சகலவாதியாக, பத்திரிகை ஆசிரியராக, அரசியல் வாதியாக, சட்டத்தரணியாக, நீதிபதியாகப் பலதுறை களில் கால் பதித்து வாழ்ந்து வந்தார்.

இலங்கையில் மாக்ஸீசவாதிகளாக விளங்கிய பிற்றர் செனமன், டாக்டர் விக்கிரமசிங்கள, டாக்டர் என்.எம், பெரேரோ, டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வ ஆகியோருடன் இணைந்து இடதுசாரி இயக்கத்தில் தீவிரமாக உழைத்து வந்தவர்.

இனம் மத வேறுபாடின்றித் தொழிலாளர் வர்க்கத்திற்காக உழைத்து வந்த திரு. வைகுந்தவாசன் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் ஆதரவைப் பெற்ற வராகக் கொடி கட்டிப்பறந்த ஒரு தமிழன். மாமனிதன் அமரர் ரவிராஜ் அவர்களுக்குத் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே இன்று எத்தகைய செல்வாக்கு இருக் கிறதோ அதேபோன்று அன்று திரு. வைகுந்தவாசன் அவர்களுக்கும் மூவின மக்களிடையேயும் மிகுந்த செல் வாக்கிருந்தது.

சிங்களத்தலைவர்களிடையே இனவாத அரசியல் தலைதூக்கியதால், இடதுசாரித்தலைவர்களிடையேயும் சிங்கள இனவாதம் புகுந்தபடியால், இனரீதியான உணர்வு, வர்க்க ஒற்றுமை தேசிய சிங்களத்தலைவர் களின் நிலைப்பாட்டை மாற்றியது. 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா கொண்டு வந்த ‘சிங்களம் மட்டும்’ சட்டம் சிங்கள மக்களை இனரீதியான பாங்குக்குத் திசை திருப்பியது.

நாட்டின் வளர்ச்சிக்காகவும், வர்க்க ஒற்றுமைக் காகவும் தோளோடு தோள் கொடுத்துப் போராடி வந்த தமிழ்த் தொழிற்சங்கவாதிகளான திரு. சே.சி. நித்தி யானந்தா, திரு. வைகுந்தவாசன், திரு. ஆசீர்வாதம் போன்ற பல தமிழர்கள் தம் வழிக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தந்தை செல்வா சென்ற அரசியல் வழிக்கு இடது சாரி இயங்கங்களை நம்பிய பல தமிழர்கள் திரும்பி வந்தனர். அவர்களிடையே தமிழுணர்வும் தமிழ்த் தேசிய மும் புரையோடத் தொடங்கியது. தடித்த இடதுசாரியாக வாழ்ந்து வந்த திரு. வைகுந்தவாசன் சிங்களத்தலைவர் கள் இனவாதத்தை உதறித் தள்ளிவிட்டு தமிழ்த் தேசியத் திற்கு தம்மை அர்ப்பணிக்க முன்வந்த ஒரு இடதுசாரித் தமிழன்.

1960லிருந்து தமது அர்ப்பணிப்பை ஈழத்தமிழர் களின் இன்னல்களையக் குரல் கொடுக்க முற்பட்டவர். இடதுசாரிகளின் சிறிமாவோ அம்மையார் அரசியல் இணைந்து தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து என்ற கொள்கைக்கு சாவுமணி அடித்த பின்னர் பல தமிழர்கள் தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்ப திசை மாறினார்கள். அவர்களில் ஒருவராக விளங்கிய வையகம் போற்றும் திரு. வைகுந்தவாசன் அவர்கள் தமது 84 ஆவது வயதில் மறைந்து இரு ஆண்டுகள் ஆகின்றன. அன்னாரது 2ஆவது ஆண்டு நினைவு தினம் 26-12-2006 ஆகும்.

இந்நாளில் அவரது வாழ்நாளில் இடதுசாரி இயக்கமும் தமிழன் என்ற முறையில் தமிழ்த் தேசியத் திற்கும் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு ஆற்றிய பணிகள் மிகச் சாமர்த்தியமானது.

உலகத்தமிழர்கள் என்றுமே மறக்க முடியாத ஒரு சாதனை. 1978 அக்டோபர் 5 ஆம் திகதி ஐக்கிய நாடு கள் சபையில் திடீரெனப் புகுந்து ஈழத்தமிழர்களின் தமிழீழக் குரலை ஒலித்துச் சர்வதேசச் சமூகத்தைச் சிந்திக்க வைத்தார்.

தமிழீழம் பற்றிய அனைத்துலகப் பிரசாரம் தீவிர மாக நடைபெற்றது. அடங்காத் தமிழன் திரு. சி. சுந்தர லிங்கம் இலங்கைப் பாராளுமன்றத்தில் திடீரென நடத்திய பல நிகழ்வுகள் இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் பதியப்பட்டது போல் உலகநாடுகள் சபை யில் திடீரெனப் புகுந்து வரலாறு படைத்தவர் திரு. வைகுந்த வாசன்.

எங்கு வாழ்ந்தாலும் ஈழத்தமிழர்களின் தேசி யத்தை நேசித்துப் பணியாற்றி வந்தவர்களை நாமும் நினைவு கூர வேண்டியது அவசியமாகும். பிரித்தானிய நாட்டில் சிவயோகம் அறக்கட்டளை ஈழத்தமிழர்களின் விடுதலைக்கு உழைத்த பல தமிழர்களை கௌரவிக்கும் ஒரு நற்பணி செய்து வருகிறது. ரூற்றிங் முத்து மாரி அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள சிவயோகம் கலையரங்கத்தில் பல தமிழ்ப் பெரியார்கள் நினைவு கூரும் முகமாக அவர்களின் திருவுருவப் படங்கள் வைத்துக் கௌரவம் செய்யப்பட்டிருக்கிறது. அப்பெருந் தலைவர்களின் வரிசையில் அமரர் திரு. வைகுந்த வாசன் அவர்களும் இடம் பெற்றுள்ளார். தமிழ்ப் பற்றாளர் திரு. சிங்கரத்தினம் ஒரு ஆலயத்தை நிருவகித்தாலும் தமிழ்ப் பெரியார்களைக் கௌரவிக்கும் பண்பினை நாம் பாராட்ட வேண்டும்.

தமிழீழத்தையும் தமிழ்த்தேசியத்தையும் தன் அடிப்படை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வந்த திரு. வைகுந்தவாசன் அவர்கள் இலண்டனின் வாழ்ந்த காலத்தில் தமிழீழ மக்களின் விடுதலைக்குத் தனிமனித னாகப் பல போராட்டங்கள் நடத்தி வந்துள்ளார். அதில் 1982 இல் அவர் மேற்கொண்ட தமிழீழப் பிரகடனம் மிக முக்கியமான ஒன்றாகும்.

தமிழ்த்தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 27-11-2006 அன்று ஆற்றிய உரையில் குறிப்பிட்ட தமிழர் தனி அரசு அமைப்பதற்கு உலக நாடுகளின் ஆதரவைக் கோரியிருக்கும் இச்சந்தர்ப் பத்தில் திரு. வைகுந்தவாசன் அவர்கள் இலண்டன் தமிழ் இணைப்புக்குழு மூலம் மேற்கொண்ட தீர்மானம் மிக முக்கியமான அடித்தளமாக அமைந்தது. ✱

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய

# தமிழ் தந்த தாதாக்கள்

## ஈழம் உபகரித்த மூன்றாவது சோதிட நூல்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் மேற்குப் பகுதியில் அராலி என்னும் ஊர், சைவத் தமிழ்ப் பண்ணைகளுள் ஒன்று அந்தணர் இருப்பிடங்களும் வைசியர் வாழ்மனைகளும், உழவர் உவந்த மருதநிலப் பரப்புகளும், கடல்தரு திரவியங்கருதி வாழ்ந்தோர் நிலங்களும் அங்கே நெருக்கமாக இருந்தன.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் தந்தஞானியார் சின்னச் சாத்திரியார் என்பார்கள் சோதிடர், வைத்தியம், அறிந்த சித்தர்களாயிருந்தார்கள். அங்கே இராமலிங்கர் என்னும் சோதிடரும், முத்துக்குமாரப்புலவர் என்னும் முத்தமிழ்வித்தகரும், விசுவநாதர் என்னும் சோதிட நிபுணரும், பெரும் பெயர்பெற்றவர்களாவர்.

ஈழநாட்டின் முதலில் தோன்றிய சோதிடநூல் சர சோதி மாலை. அடுத்து வந்தது செகராசசேகரமாலை. இந்த இரண்டு நூல்களையும் கருத்தூன்றிக் கற்றவர் இராமலிங்கர் என்பார். அவர் திரிகாலங்களையும் நன்கறிந்தவராதலால் அவரை எல்லோரும் முனிவர் எனவே வழங்கி வந்தார்கள்.

### முதலில் எழுந்த வாக்கிய பஞ்சாங்கம்

இராமலிங்கர் தம் நுண்கலை விருத்தியால் காலக் கணிதம், வானசாத்திரம் முதலிய துறைகளில் வல்லவரானார். அவர் இளமைக் காலத்திலேயே இத்துறையில் நாட்டமுடையவராய்த் தமது பதினெட்டாம் ஆண்டுப் பிராயத்தில் 1667ஆம் ஆண்டில் வாக்கிய பஞ்சாங்கம் ஒன்றைக் கணித்துப் பலருக்கும் பயன்படச் செய்தார். இராமலிங்கரின் நாட்டமும், விவேகமும் அவ்வளவில் அமையவில்லை. அவர் மேலும் தமது துறைகளில் வெகுவாக ஈடுபட்டுவந்த காலத்தில் தமிழ்ப் புலமையுண்டாகிப் பழமொழிப் புலமையுண்டாகிப் பழமொழிப் பிரபந்தம் என்றொரு நூலையும் செய்தார்.

தாம் நன்றாக ஆராய்ந்து கற்றுவந்த சரசோதி மாலை செகராசசேகரமாலை என்னும் சோதிட நூல்களில் விரித்துக் கூறப்பெறாத சில விடயங்களைத் தாம் வேறொரு பாணியிற் கூறவிரும்பித் தம் புலமை கைகொடுக்க விருத்தப்பாவில் சந்தான தீபிகை என்னும் நூலைச் செய்தார். இலக்கியமல்லாத இந்த நூல், அழகு தமிழில் அமைந்தமையால் இதனையும் தமிழ்நூல் வரிசையிற் கொள்வர்.

### சந்தானம் ஒரு பேறு

சந்தான தீபிகை இல்வாழ்வில் சந்தானத்தின் இன்றியமையாமையைக் கூறுவதோடு, பிள்ளைகளால் உண்டாகும் பயன், பேறு, புகழ் முதலியவற்றையும் முறையாகக் கூறும். ஆண்பிள்ளை சந்ததிக்குப் புகழ் தருவதோடு, பிதிர்காரியம் செய்யவும் உதவுவான் என்றும், பெண் கன்னிதானமாகக் கொடுக்கப்பெறும் போது, பெருந்தருமச் செயலுக்கு உதவுவாள் என்றும் கூறுவர்.

திருமணஞ்செய்தல் உடலுக்காகவன்று என்றும், இருமைப் பயன் பெறவென்றும் அது ஒரு கடமை என்றும், தருமம் என்றும், ஆச்சிரம நெறி என்றும் கூறுவர். பிள்ளைகளைத் தவஞ்செய்து பெறுதல் வேண்டும் என்று நீதிகூறத் தொடங்கும் நூல்; பன்னிரு பாவங்கள், அவற்றின் பயன்கள் என்பனவற்றையும் கூறும்.

பிள்ளைச் செல்வம் இல்லாதவரின் இயல்பு. குறைபாடுடைய பிள்ளையைப் பெறுதல், ஒரேயொரு பிள்ளையைப் பெறுதல், நல்ல பிள்ளைகள் வாய்த்தல், கெட்ட பிள்ளைகள் பிறத்தல், பிள்ளைகளுக்குண்டாகும் நோய்கள், சிறு வயதில் அகால மரணமடைதல் முதலியன யாவும் சந்தான தீபிகையில் முறையாக வந்துள்ளன.

### நற் கருமங்களுக்கு நாள்கூறும் தீபிகை

இன்று நாம் நற்கருமங்கள் செய்வதற்குரிய நாள்களைப் பஞ்சாங்கத்தில் பார்த்தறிகிறோம், நாள் பார்த்து, நாழிகை கவனித்து, நற்கருமஞ் செய்யும் விதியும் பழக்கமும் நம்மிடத்தில் நன்றாக ஊறிவிட்டன. இவை யாவும் ஒரு பழைய மரபில் வந்தவை. அந்த மரபு வழக்கம் சந்தான தீபிகையில் நன்றாக விளக்கப் பெற்றுள்ளது.

மக்கள் வாழ்வில் குழந்தைப்பிராயம் முதல் செய்ய வேண்டிய நற்கருமங்கள் பலவுள. மயிர்நீத்தல், காதுகுத்துதல், ஐம்படைத்தாலி என்னும் பஞ்சாயுதம் தொங்கவிடுதல், ஏடு தொடங்குதல் என்னும் வித்தியாரம்பம் செய்தல் முதலியன குழந்தைகளுக்கு விதிக்கப்பெற்றன.

இனி வேளாண்மையே நாகரிகமான தொழிலானதால் அதற்கான கருமங்கள் செய்வதற்கான காலம், நாள், நாழிகை முதலியவற்றை வரையறை செய்து, ஏர் மங்கலம், குடில் வைத்தல், விதைத்தல், அறுவடை செய்தல் முதலிய தொழில்களைச் நற்கருமங்களாகக் கூறும்.

வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்ற நூலாயினும் சந்தான தீபிகை தமிழ் மூலத்திலெழுந்த வண்ணம் அமைவாகவுள்ளது. இந்நூல் 122 பாடங்களைக் கொண்டது என்றும், 713ஆம் ஆண்டு தை மாதத்தில் உருவானதென்றும் இதிலுள்ள பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது. அது நந்தன வருடம் மகாத்திங்கள், வியாழன், பூசம் என்றெல்லாம் வரும் பாடலாகும்.

இலங்கையில் முதல் முதல் வாக்கிய பஞ்சாங்கம் கணித்த சந்திரசேகரர் மைந்தர் இராமலிங்கர் பெருமை பெரிது. இவரின் சந்தான தீபிகை 1868ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அச்சிடப்பெற்றது. பின்னர் யாழ்ப்பாணத்தில் பொழிப்புரையுடன் வெளியிடப் பெற்றுவந்தது. அது கொக்குவில் சோதிடபரிபாலனஞ் செய்வோரிடம் உள்ளது.

# சிவராத்திரி புராணம் தந்த செந்தமிழ்ப் புலவர்

சிவபூமியாகிய இலங்கையில் எழுந்த நூல்களுள் புராண வரிசை பெரிது. பிற்காலப் புராணங்களுள் தலையெடுத்த தல புராணங்களுள் முதற் புராணம் இலங்கையிலேயே தமிழரசர் காலத்தில் எழுந்ததாகும். மத்திய காலத்தையடுத்து எழுந்த புராணங்கள் பல, வேதவாக்கியப் பொருளை வலியுறுத்துவனவாகாமல், வெவ்வேறு போக்குடையனவாக, விளையாட்டாகக் கிண்டல், நையாண்டி தழுவியன வாய்ச் சமூக சீர்திருத்தம் கோரியும் எழுந்துள்ளன.

வசை புராணங்களின் வேறாய்த் திருக்கோயில்கள் சம்பந்தமானவையாக ஆசாரம், அநுட்டானம், விரதம் சம்பந்தமாகவும், புராணங்கள் எழுந்துள்ளன. எல்லாமாகப் புராண வரிசையில் நூற்றுக்கும் அதிகமாக உள்ளன என அறியும்போது இலங்கைத் தமிழரின் உபகரிப்பு எத்துணைத் தூரம் உயர்ந்துள்ளது என உணரக்கூடியதாயுள்ளது. இத்தகைய நூல்களின் ஏட்டுருவம் இலண்டனில் நடைபெற்ற பொருட்காட்சி ஒன்றிற் சிறப்பிடம் வகித்தமை வரலாற்றுப் பெருமைக்குரியதாய் உள்ளது. ஏடுகளைத் தேடி இலண்டனுக்கு அனுப்பி வைத்தவர் வைமன் கதிரைவேற்பிள்ளை என்னும் நீதிபதியாவார்; அவர் அண்மையில் முத்திரையில் உலாவந்த வித்தகர். கௌரவ பாலசிங்கம் அவர்களின் தந்தையும், நூற்றாண்டுவிழாச் சிறப்புக் கண்ட சைவ வித்தியா விருத்திச் சங்க கௌரவ சு. இராசரத்தினம் அவர்களின் தாய் மாமனுமாவர்.

## சிவன் மகிமை கூறும் சிவராத்திரி புராணம்

மத்திய காலத்தில் எங்கள் நாட்டிற் புகுந்து மாசுபடுத்திய மிலேச்சர்களின் கெடுபிடிகளுக்குப் பின் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் தமிழிசையும், சைவமும், ஓரளவுக்கு மறுமலர்ச்சி கண்டு முன்னேறின. அந்த முன்னேறக் காலத்தில் எங்கள் நாட்டின் சைவக் கலாசாரம் ஓரளவுக்குத் தலையெடுத்தது. வாழையிலையில் ஆசாரமாக உண்பதே தண்டனைக்குரிய செயலாக நிலவிய காலத்திலேதான் நம்மவர் உண்ட இலைகளை வெளியில் வீசாமல் கொட்டில்கள், குடில்களில் சொருகி மறைத்து வைத்தனர்.

மனம் பொறிவழி போகாமல் தடுப்பதற்கு உணவைக் குறைத்தேனும் விடுத்தேனும் ஆசார சீலமாக அநுட்டிக்கும் விரதங்கள் சிவ விரதஞ் சிறந்தது என்றும், சிவவிரதங்களுள் சிவராத்திரி விரதம் சிறந்தது என்றும் கூறுவர். சிவராத்திரி விரதத்தின் சிறப்பைக் காண்பதற்கு நம் நாட்டவர் ஒரு முறை திருக்கேதீசுரம் சென்று பார்த்தல் வேண்டும். கருங்கல் மனத்தையும் கசிந்துருகச் செய்யும் பக்திப் பரவசத்தையும், அடியவர் களின் அரோகரா அன்புக் குரலையும் கண்டும், கேட்டும் தம்மை மறந்து நிற்பவர் பல்லாயிரவர்,

சிவராத்திரி புராணம் தந்த செந்தமிழ் வாணர் சிறந்த அந்தணர் வரதபண்டிதர் என்பவராவர். அவர் வரத கவிராயர் எனவும் வழங்கியவர். அவரது ஆக்க பூர்வமான படைப்புகள் பல. அவர் செந்தமிழ் வடமொழியறிந்த கூரிய சிந்தனையாளர் எனச் சான்று பகரும்.

புனித நகரான காசியிலிருந்து வந்து யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்திலே குடியேறிய பிராமணர் குடும்பத்தில் அரங்கநாதர் என்னும் பெரியாரின் மைந்தராய் வரத பண்டிதர் வரன் முறையாகக் கற்றுயர்ந்த கவியாயிருந்தவர். அவர் சைவத்தமிழ் வளர்ச்சியின் பொருட்டுச் செய்த உபகரிப்பு உயர்ந்தது. அவர் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் என்னும் அரிய புராணங்கள் இரண்டும், அமுதாகரம் என்னும் வைத்தியநூல் ஒன்றும், பிள்ளையார் கதை என்னும் அகவல் நூலும், குருநாதசுவாமி கிள்ளைவிடு தூது என்னும் பக்திப் பிரபந்தமும் இன்னும் பல தனிப்பாடல்களும் செய்தவர். தம் காலத்துத் தமிழ்ப் புலவர்கள் செய்த தரமான நூல்களுக்குக் காய்தல் உவத்தலின்றிச் சிறப்புப் பாயிரங்கள் செம்மையாகப் பாடிக்கொடுத்தவர்.

வரத பண்டிதர் அருணந்தி சிவாச்சாரியாரைப் போலச் சகல வாகம பண்டிதராயிருந்தார் என்பது அவர் செய்த நூல்களின் தரத்தாலறியக் கிடக்கின்றது. அவர் வேதங்கள், உபவேதங்கள், அறங்கள், ஆகமங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் வல்ல சிவப்பிராமணராய்ச் சீலம் நிறைந்த செம்மையாளராய் வாழ்ந்தவர்.

அவர் அச்சுவேலியில் திருமணஞ் செய்து பெருஞ் செல்வாக்கோடு அங்கே வாழ்ந்தாராகையால் அவர் வாழ்ந்த காணி புலவனார் வளவு எனப் பெயர் பெறுவதாயிற்று. அக் காலத்தில் அச்சுவேலியில் அறிவாற்றல் ஆசாரம் நிறைந்த பிராமணர்கள் வாழ்ந்தார்கள் என்று ஒல்லாந்த வரலாற்றுப் பெரியவரான பல்தேயஸ் பாதிரியார் அருமையாக எழுதியுள்ளார்.

## திசை திருப்பிய சிதம்பர தரிசனம்

வரத பண்டிதர் சுன்னாகத்தில் வாழ்ந்த காலத்தில் பல முறை தமிழ்நாடு சென்று சிதம்பர தரிசனஞ் செய்து வந்துள்ளார். சிதம்பரத்து வேதியர் சிலர் வரத பண்டிதரின் அறிவாற்றலை அறிந்து அவரைக் கொண்டு சிவ ராத்திரி விரதத்தின் மகிமையைப் புராணமாகப் பாடுவிக்க விரும்பினர். இந்த வேண்டுகோளை மறுக்க முடியாத வரத பண்டிதர் சிவராத்திரி புராணத்தைச் சிந்தை நிறைவோடு பக்திப் பெருக்கிற் பாடினார். சிதம்பரத்துப் பிராமணர் வேண்டுகோளைத் தம் புராணத்துச் சிறப்புப் பாயிரத்திலே தந்துள்ளார்.

*கந்தமலர்ப் பொழில் புடைசூழ்*
*தில்லைவனத்து அறிஞர் திருக்கடைக்கண் நோக்கி*
*முந்தவுரைத் தனர்பலரு மாயினுநீ*
*யாகமநூல் மொழி வழாமற்*
*பந்த மறுத்திடு சிவராத் திரிவிரத*
*சரிதைதனைப் பாடுகென்னச்*
*செந்தமிழில் உயர்விருத்தப் பாவதனால்*
*திரட்டி யொன்றாச் செப்பலுற்றேன்.*

புராணம் பாடுவோர் புராணப் பிரசங்கஞ் செய்வோர் நைமிசாரணிய முனிவர்கள் கேட்பச் சூதமுனிவர் கதை கூறுவதாகப் பாடுவதும் பிரசங்கஞ் செய்வதும் வழக்கம். அந்த வகையிலேயே இந்தக் கதையை இயல் பாகக் கேட்டவர்கள் யாவர் என்றும், அவர்கள் பெற்ற பயன்கள் யாவை என்றும் புலவர் வரிசைப்படுத்திப் பாடியுள்ளார். கேட்போர் படிப்போரை அந்த வழிக்கு ஆற்றுப்படுத்துகின்றார்.

கறையானுக்கும் முறிவுதறிவுகளுக்கும் தப்பியொட்டிய சிவராத்திரி புராண ஏடு பிற்காலத்தவருக்கு 691 செய்யுள்களைக் கொடுத்தது. இவை கடவுள் வாழ்த்து, தற்சிறப்புப் பாயிரம் முதலியவற்றோடு ஆரம்பிக்கின்றன. நூலமைப்பில் உள்ள பிரிவுகள் சருக்கங்கள் எனப் பெயர் பெற்றுள்ளன. சிவராத்திரி உற்பதச் சருக்கம், சிவராத்திரி மான்மியச் சருக்கம், சுகுமாரச் சருக்கம், அங்குலச் சருக்கம், சௌமினிச் சருக்கம், கன்மாடபாதச் சருக்கம், விபரிசச் சருக்கம், குபேரச் சருக்கம், சாலிகோத்திரச் சருக்கம் என்பன புராணத்தின் பெரும் பிரிவுகளாகும். இப்பிரிவுகள் தோறும் இடம் பெறும் பெரியவர்கள் சிவராத்திரி விரதம் அனுட்டித்துப் பெறும் பேறு பெற்றவர்களாவர்.

சிவராத்திரி உற்சவத்தைப் பாடும்போது புலவர் சிவபெருமானை நினைவூட்டும் வனத்தில் இயல்பைச் சிவனோடு ஒப்பக் கருதிப் பாவனையிற் பக்தியோடு பரவசப்பட்டுப் பாடுவார்.

*"துன்று கொன்றையாற் பசுங்கொடி*
*விரவலால் சுரு தீ*
*யென்று மேவலால் கடுவிடப்*
*பணிகள் எய்துதலால்*
*கன்று மானுகண் குறைதலால்*
*கதிர் மணிக் கனக*
*மன்று ளாடிய பரம்பர*
*நிகர்க்கும் அவ்வனமே"*

வரத பண்டிதர் வரன்முறை பிசகாமல் வரகவிப் புலமையோடு பாடிய சிவராத்திரி புராணத்துக்கு நல்லூர்ச் சின்னத் தம்பிப் புலவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். இன்னும் மயில் வாகனப் புலவரும் இதனை நன்கு மதித்துப் பாடியுள்ளார்.

இதனை 1878ஆம் ஆண்டில் இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வைத்தியலிங்கன் அவர்கள் அச்சேற்றியுள்ளார். அதன்பின் 1893ஆம் ஆண்டில் வெளிவந்த பதிப்பைப் பாராட்டி சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பாடியுள்ளார்கள்.

(தொடரும்)

# ஏ.ஜெ. கனகரட்னா

*(இலண்டனில் இருந்து இயங்கும் ஐ.பீ.சீ. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச ஒலிபரப்பில் ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரித்தானிய நேரம் காலை 07.00 முதல் 10.00 வரை ஒலிபரப்பப்படும் ''காலைக்கலசம்'' நிகழ்ச்சியில், ''இலக்கியத் தகவல் திரட்டு'' என்ற பகுதி காலை 7.15 முதல் 8.00 மணி வரை சுமார் 15-20 நிமிடங்கள் ஒலிபரப்பாகின்றது. நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களால் தொகுத்து வழங்கப்படும் இந்த வாராந்த நிகழ்ச்சியின் எழுத்துப்பிரதி இதுவாகும்.)*

பிரபல இலக்கியவாதியும், திறனாய்வாளரும், பத்திரிகையாளரும், மொழிபெயர்ப்பாளருமான அலோசியஸ் ஜெயராஜ் கனகரட்னா (ஏ.ஜே. கனாரட்னா) கடந்த 10-10-2006 அன்று தனது 74ஆவது வயதில் கொழும்பில் நீண்டகால சுகவீனத்தின் பின்னர்க் காலமானார். இவர் ஏ.ஜே. கனகரட்னா என்றும், ஏ.ஜே. என்றும் இலக்கிய வட்டத்தினரால் அன்புடன் அழைக்கப்பட்டவர்.

தனது தனிவாழ்வைப் பிரம்மச்சரியத்திலே கழித்த இவர் தனது சமூக வாழ்வை இலக்கியத் துறைக்கே முழுமையாக அர்ப்பணித்தவர். 1960களில் முற்போக்கு அணிக்கு ஆதரவாக நின்று ஈழத்து இலக்கியச் செல்நெறியில் மார்க்சிச நோக்கினை வலியுறுத்தியவர்களுள் ஏ.ஜே.யும் ஒருவராவார். தமது கருத்தியல் எதிரிகளையும் அரவணைத்து அவர்களது கருத்துச் சுதந்திரத்துக்கு ஆதரவாக இருந்த காரணத்தால் இவருக்கு இலக்கிய உலகில் சகல மட்டங்களிலும், வட்டங்களிலும் பரவலான நட்பு எல்லாவிடங்களிலும் இருந்துவந்தது.

70களில் வெளியிடப்பட்ட இவரது நூலான மத்து, இரண்டாவது பதிப்பாக 2000ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டபோது, இவருடன் முன்னர்க் கருத்தியல் முரண்பாடுகொண்டிருந்தவர்களுள் ஒருவரான எஸ். பொவினாலேயே தனது மித்ர வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்டது என்பதிலிருந்து இதை விளங்கிக்கொள்ள முடிகின்றது. எஸ்போவே இவரது மற்றொரு நூலான செங்காவலர் தலைவர் யேசுநாதர் என்ற நூலையும் வெளியிட்டிருந்தார் என்பதையும் இங்கு குறிப்பிடல் பொருத்தமாகும்.

எல்லாளன் சமாதியும் சில நோக்குகள் என்ற இவரது நூல் அலன் ஸ்விஞ்வுட் எழுதிய நாவலும் புரட்சியும் என்ற நூலினதும், கேரி சோல் மொர்சன் எழுதிய சோஷலிச யதார்த்தவாதமும் இலக்கியக் கோட்பாடும் என்ற நூலினதும் உருவம், உள்ளடக்கம் ஆகியன பற்றிய நூலாகும்.

ஈழத்தில் வாழும் சிறந்த கவிஞர்களுள் ஒருவரான மு. பொன்னம்பலம் அவர்களின் பொறிக்குள் அகப்பட்ட தேசம் என்ற கவிதைத் தொகுப்பினையும் ஆங்கிலத்தில் முழுமையாக மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். ஏ.ஜே.யின் மொழிபெயர்ப்புப் பணி எண்ணிலடங்கா. இதுவரை எவரும் அவற்றைத் தொகுத்தாகவும் தெரியவில்லை. தனது ஆவணப் பதிவுகளை ஒழுங்காகப் பராமரித்து வைக்காத காரணத்தால் இவரது படைப்பிலக்கிய வாழ்வைப் பதிவுக்குள்ளாக்குவது எதிர்காலத்தில் சிக்கலானதாகும். அவருடைய அவரது வாழ்நாட் காலத்தில்கூட இருந்தவர்களும், அவர்களுடன் வழிநடந்தவர்களும் சமகாலத்திலேயே அதைச் செய்துமுடிக்கவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

ஏ.ஜே. எழுபதுகளை ஒட்டிய காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 15 ஆண்டுகள் வரை ஆங்கிலப் போதனாசிரியராகப் பணியாற்றியிருந்தார். பத்திரிகைத் துறை ஈடுபாட்டின் காரணமாக, கொழும்பிலிருந்து வெளிவந்த சிலோன் டெய்லி நியூஸ் ஆசிரியர் குழுவிலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த கோப்பரேற்றர் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றிய அனுபவங்களுடன், பின்னாளில் யாழ்ப்பாணத்தில் காமினி நவரட்னவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த சட்டர்டே ரிவியு வாரப் பத்திரிகையின் இணை ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னாளில் யாழ்ப்பாணத்தில் வெளியாகிய திசை வாரப் பத்திரிகையிலும் இவர் யேசுராஜா, பத்மநாப ஐயர் ஆகியோருடன் இணைந்து முக்கியப் பங்காற்றியிருந்தார். ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகள் இந்திய வாசகர்களை எட்டும் வகையில் இந்தியாவில் வெளிவந்த The little magazine என்ற சஞ்சிகையிலும் பல ஆங்கிலக் கட்டுரைகளை எழுதியிருந்தார். எமது எழுத்தாளர்களின் தமிழ்ப் படைப்புகளைப் பிறமொழி வாசகர்களின் கைகளில் எவ்வித சுயலாபமுமின்றிக் கொண்டு சேர்த்தவர் இவர்.

உலக இலக்கியங்களில் பரிச்சயம் பெற்ற தீவிர வாசிப்பாளரான ஏ.ஜே. கனகரத்னாவின் பல படைப்புகள் உலக இலக்கியங்களைத் தமிழ் வாசகர்களுக்கு வழங்குவதாகவும், தமிழ்ப் படைப்பாளிகளையும் படைப்புகளையும், ஆங்கில மொழிவாயிலாக உலக வாசகர்களின் பார்வைக்கு வழங்குவதாகவும் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இலக்கிய யாகத்தைத் தனியொருவராக நின்று நடத்திவந்த ஒரு முதிய இளைஞனின் வாழ்வு 2006இன் இறுதிக் கூற்றில் முடிவுக்கு வந்தாலும், அவரது படைப்புகள் இன்னும் நீண்ட காலம் அழியாத கோலங்களாக இளமையுடன் தீவிர இலக்கியவாதிகளின் மனத்தில் ஏ.ஜே. என்ற பெயருடன் நிலைத்திருக்கவே செய்யும். *

# ஈழத் தமிழர் படுகொலையை நிறுத்தாவிட்டால்

# உலக மனித உரிமைப் போராட்டமாக வெடிக்கும்

### திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி எச்சரிக்கை

ஈழத் தமிழர் படுகொலையை நிறுத்தா விட்டால் உலக மனித உரிமைப் போராட்டமாக வெடிக்கும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி எச்சரித்துள்ளார்.

ஈழத் தமிழர்கள் தினந்தோறும் சிங்கள இராணுவப் படையினரால் சுட்டுக்கொல்லப்படுவதைக் கண்டித்தும், ஈழத் தமிழர்கள் பட்டினியால் சாக வேண்டும் என்ற சிங்கள அரசின் கொலைவெறி செயலைக் கண்டித்தும், ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காப்பாற்றிடவும் திராவிடர் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தமிழகம் முழுவதும் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் எழுச்சியோடு நடைபெற்றது.

தஞ்சை நகரில் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களது தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

சிங்கள அரசின் கொடுமைகளைக் கண்டித்தும், ஈழத் தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் திராவிடர் கழகத் தோழர்கள், தோழியர்கள் ஆவேசத்துடன் ஆர்ப்பாட்ட முழக்கங்களை முழங்கினர். ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கிய திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் ஆற்றிய முக்கிய உரை வருமாறு :

இலங்கையில் இதற்கு முன்பு இருந்த சந்திரிகா ஆட்சியைவிட இப்பொழுது இலங்கை அதிபராக இருக்கின்ற ராஜபக்சே ஆட்சி மிக மோசமான ஒரு கொடுமையான ஆட்சியாக, தமிழர்களைக் கொல்வதிலேயே குறியாக இருக்கின்ற ஆட்சியாக இருந்து கொண்டு வருகின்றது.



இதற்கு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால் அண்மையில் செஞ்சோலையில் இளஞ்சிறார்களைச் சிங்கள இராணுவம் படுகொலை செய்ததை அனைவரும் அறிவார்கள். அதே போல ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் அகதி முகாம்கள்மீது சிங்கள இராணுவம் ரொக்கெட் குண்டுகளை வீசிப் படுகொலை நடத்திய கொடூரச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அது மட்டுமல்ல போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க வந்த நோர்வே தூதரகத்தைச் சார்ந்த அதிகாரிகள் மீதே சிங்கள இராணுவத்தினர் குண்டுவீசித் தாக்கியிருக்கிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு தமிழர் எம்.பி., பரராஜசிங்கத்தைச் சிங்களவர்கள் படுகொலை செய்து அங்குப் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தினர். அதே போலச் சில நாள்களுக்கு முன்பு தமிழ் எம்.பி. நடராஜா ரவிராஜ் சிங்களவர்களால் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களும் மத்திய அரசும், இலங்கையில் ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட வேண்டும். அங்கு அமைதியான ஒரு சூழல் ஏற்பட வழி காண வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் கலைஞர். அவர்களின் உதவியோடுதான் மத்திய அரசு நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இந்த நேரத்தில் மத்திய அரசுக்கு வேண்டுகோளாக வைக்கின்றோம். இலங்கை அதிபர் ராஜபக்சே இந்தியாவிற்கு வரக்கூடாது. அப்படி வந்தால் இலங்கையில் ஈழத் தமிழர்களைக் கொன்று குவிப்பதைக் கூறி அவரை எச்சரித்து அனுப்ப வேண்டும். சிங்கள அரசு தமிழர்கள் மீது நடத்தி வருகின்ற கொலைவெறித் தாக்குதலைத் தடுத்து நிறுத்தும் வகையில் மத்திய அரசின் நடவடிக்கை இருக்க வேண்டும்.

இங்கே பல்வேறு கட்சித் தலைவர்கள் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்வதைக் கண்டித்து, சிங்கள அரசைக் கண்டித்துப் போராட்டம் நடத்திக்கொண்டு வருகின்றார்கள். ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை ஒரே குரலில் எதிரொலிக்கிறார்கள்.

இந்திய அரசு உணவுப் பொருள்களை அனுப்பினால் அதனைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாகத்தான் அனுப்பவேண்டும். அதை வேறு விதமாக அனுப்பினால் தமிழர்களைக் கொல்லக் கூடியவர்களுக்கே அந்த உணவுப் பொருள்கள் சென்றடையும். நேரடியாக அந்த உணவுப் பொருள்கள் தமிழர்களுக்குப் போய்ச் சேராது.

இது ஒரு கட்சியினுடைய பிரச்சினை அல்ல. ஒரு நாட்டினுடைய பிரச்சினையல்ல. இது மனித உரிமைப் போராட்டமாகும். இந்தப் போராட்டம் முடிவல்ல. இது ஒரு தொடக்கம். அடுத்தக் கட்ட போராட்டம் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களை யும், அனைத்து அமைப்புகளைச் சார்ந்தவர்களையும் ஒத்தக் கருத்துள்ளவர்களையும் கலந்து பேசி தீவிரமான தொரு முடிவெடுப்போம்.

மத்திய அரசு மக்கள் போராட்டமாக வெடிக்கு முன் இதற்கு ஒரு முடிவெடுத்துத் தமிழினப் படு கொலைக்கு முற்றுப் புள்ளிவைத்துத் தடுத்து நிறுத்த வேண்டும். மத்திய அரசு இலங்கை அரசைத் தட்டி வைக்கவேண்டும். ஈழத் தமிழர்கள் மீது சிங்கள அரசு குண்டுமாரி பொழிவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.


இலங்கை அரசுக்கு மத்திய அரசு எந்த ஒத்துழைப்பும் தரக்கூடாது. இதுவரை மத்திய அரசு இலங்கை அரசுக்குக் கொடுத்து வந்த அனைத்து ஒத்து ழைப்பையும் திரும்பப் பெற வேண்டும். இலங்கைத் தமிழக எம்.பி.க்கள் எங்களைச் சந்தித்தார்கள். தமிழகத் தலைவர்களை எல்லாம் சந்தித்து, இலங்கையில் ஈழத் தமிழர்கள் கொடுமையாகக் கொல்லப்படுகின்ற செய்தி களையும், அதைத் தடுத்து நிறுத்த உதவுங்கள் என்றும் கூறினார்கள். அந்த இலங்கைத் தமிழ் எம்.பி.க்கள் பிரதமரை சந்திக்க விரும்பினார்கள். ஆனால், அவர் களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், இப் பொழுது வரும் இலங்கை அதிபர் ராஜபக்சே இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு அனுமதி தந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே இது தவிர்க்கப்படவேண்டும். ராஜ பக்சே இந்தியாவுக்கு வரக்கூடாது.

எனவே இவற்றுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க ஈழத் தமிழர்களுடைய படுகொலையைத் தடுத்து நிறுத்த உலக தமிழர்கள் அனைவரையும் கலந்து பேசி இது ஒரு மனிதகுல உரிமைப் போராட்டமாக வெடிக்கும் சூழ்நிலை ஏற்படும்.

இவ்வாறு தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள் எச்சரிக்கை விடுத்து உரையாற்றினார். *

## தமிழ்க் கலாச்சாரச் சிறப்புடன் இலண்டனில் நடைபெற்ற தமிழ்த் திருமணங்கள்

திருக்கேதீஸ்வர திருப்பணிகளில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஈடுபட்டுவரும் 95 வயதினை எய்திய சைவப்பெரியாரின் முன்னிலையில் அவரது அன்புப்பேரன் சரவணா அவர்களுக்கும் இலண்டன் முருகன் ஆலயத்தின் ஆரம்பகால அறங்காவலராக இருந்தவரும் திரு. அன்பானந்தன் திருமதி அன்பானந்தன் அவர்களின் அன்புமகள் வாணிக்கும் திருமணம் இலண்டன் எக்ஸல் மண்டபத்தில் சைவாசார முறைப்படி சிறப்புடன் நடந்தேறியது.



இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குருக்கள் கயிலை நாகநாதசிவம் அவர்கள் திருமண நிகழ்வுகளைச் சிறப்புடன் நடத்திவைத்தார். பெருந்தொகையானோர் வருகைதந்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இலண்டனில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தாலும் சைவாசாரமும் தமிழ்க் கலாசாரமும் பேணப்படுவது பாராட்டத்தக்கது. புதிய தம்பதிகளும் தமிழ்க் கலாச்சாரம் பேணி வாழ வாழ்த்துகிறோம்.

தமிழினி என்ற பெயருக்கேற்ப திருக்குமரன் தமிழினி தம்பதிகளின் திருமணம் சைவாசாரம் தமிழ்க் கலாச்சாரம் திருமணத் தத்துவ விளக்கத்துடன் இலண்ட னில் நடைபெற்ற மற்றுமோர் திருமணமாகும். இத் திருமணம் ரூற்றிங் முத்துமாரி அம்மன் கோவில் சிவயோகம் மண்டபத்தில் நடைபெற்றது.

திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்த தமிழினி குலேந்திரன் குடும்பத்தினர் திருமண விழாவில் இடம் பெறும் நிகழ்வுகளின் தத்துவங்களைத் திருமண விழா விற்கு வருபவர்கள் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக அது தொடர்பான வெளியீட்டைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வழங்கியிருந்தனர். தமிழர் அல்லாதோரும் அவ்விட யங்களை ஆங்கிலத்தில் வாசித்துத் தமிழர் திருமணத் தின் மகத்துவத்தை அறிந்து பாராட்டினார்கள். தமிழர் களின் தமிழ்க் கலாச்சாரத்தின் தத்துவத்தைத் தமிழர் களும் தமிழர் அல்லாதவர்களும் அறிந்துகொள்ள இத் திருமணவிழாவில் விளங்கிய பிரசுரம் பயன்பாடாகவிருந்தது.



பத்திரிகைத் துறையில் அனுபவம் கொண்ட திரு. தமிழினி குலேந்திரன் சரியான தைச் சரியான நேரத்தில் செய்தது இத்திருமண விழாவின் சிறப்பம்ச மாகும். புதுமணத் தம்பதிகளும் தமிழ் கலாச் சாரத்தைப் பேணும் கைங்கரியங் களை மேற்கொண்டு நீடூழி வாழ வாழ்த்து கிறோம்.

# காமத்துப்பால் அற இலக்கியப் பகுதி ஆகுமா?

முனைவர் க.ப. அறவாணன்
முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

தமிழ் அற இலக்கியத் தொகுப்பில், திருக்குறள் காமத்துப்பாலையும், நாலடியார் காம நுதலியலையும், அறஇலக்கியப் பகுதிகள் அல்லவோ எனும் கருத்தில் விலக்கிவிட்டு ஏனையவற்றுக்கு மட்டுமே உரை எழுதித் தொகுத்திருந்தேன். மெய்ப்பைப் பார்த்த ஆய்வாளர் களில் இருவர் அப்பகுதிகளுக்கு உரை விடுபட்டுள்ளது என்ற குறிப்பை எழுதியிருந்தனர். அவர்களுள் ஒருவர் என்னுடன் உரையாடும்போது, அப்பகுதிகள் ஏன் விடப் படுதல் வேண்டும்? என வினவினார். அப்பகுதிகளில், தலைவன்-தலைவி, களவு-கற்பு வாழ்க்கைகள் மட்டுமே கூறப் பெற்றுள்ளன. அறம், பொருளுக்கு அவை தொடர்புடையன அல்லவோ என்ற ஐயத்தால், காமம் தொடர்புடைய பகுதிகளுக்கு உரை எழுதாது விட்டேன் என்று விடை அளித்தேன். எனினும், அவர்தம் ஐய வினா என் உள்ளத்துக்குள் சுழன்றுகொண்டே இருந்தது. காமம், அற இலக்கியத்தோடு தொடர்பில்லாதது என்றால் மிகப் பெரிய மேதையான திருவள்ளுவர் தம் நூலில் அதனை ஒரு பகுதியாக எழுதியிருப்பாரா என்ற வினா இமயமாக எழுந்து நின்றது. ஏதேனும் தொடர்பு பற்றியே திருவள்ளுவர் தம் திருக்குறள் படைப்பில் காமத்துப் பாலை இடம்பெறச் செய்திருத் தல் வேண்டும். அன்றியும் திருக்குறளை ஒட்டிச் சமண முனிவர்களால் எழுதப்பட்ட நாலடியார் என்ற அற இலக்கியத்தில் 'காமம் நுதலியல்' எனும் தலைப்பில் நாற்பதாவது அதிகாரம் இடம் பெற்றிருப்பதும், அவ் அதிகாரத்தின் கீழ்ப் பத்துப் பாடல்கள் (391-400) இடம் பெற்றிருப்பதும் சிந்திக்க வைத்தன. திருக்குறளிலும், நாலடியாரிலும், காமம் எனும் தலைப்பில் எழுதப்பெற்ற பாக்கள் அற நோக்கிற்குப் புறம்பானவை அல்ல. இல்லறம் என முன்னோரால் போற்றப் பெறும் குடும்ப அமைவு பற்றியே களவு இயல், கற்பு இயல் என இரண்டு இயல்களுக்குரிய பாக்கள் எழுதப் பெற்று உள்ளன. இன்னும் குறிப்பாக நாலடியாரில் காமத்துப் பால் எனும் மூன்றாம் பிரிவும், அதன்கீழ் இன்ப துன்ப இயல் எனும் தலைப்பில் பொது மகளிர் என்ற அதிகார மும் (38) இன்ப இயல் எனும் தலைப்பில் கற்புடை மகளிர் (அதி.39) என்ற அதிகாரமும், காமநுதலியல் (அதி.40) எனும் அதிகாரமும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துப்பாடல் வீதமாக முப்பது வெண்பாக்கள் நாலடியார் காமத்துப் பாலில் இடம் பெற்றுள்ளன. நாலடியாரில் இடம் பெற்றுள்ள பொது மகளிர் எனும் அதிகாரத் தலைப்புகளில் சொல்லப் பெற்ற செய்திகள், திருக்குறளில் வரைவில் மகளிர் எனும் அதிகாரத்தில் (அதி.92) பொருட் பாலிலும், இல்வாழ்க்கை (அதி.5) வாழ்க்கைத் துணை நலம் (அதி.6) எனும் அதிகாரங்கள் அறத்துப் பாலிலும் இடம் பெற்றுள்ளன. முற்றும் துறந்த முனிவர்களால் படைக்கப் பெற்ற அறஇலக்கியமான நாலடியாரில் காமத்துப்பால் எனும் தனிப்பிரிவு அமைக்கப் பெற்றி ருப்பதும், அதன்கண் தனிச் செய்யுள்கள் தொகுக்கப் பெற்றிருப்பதும் கூடுதலாகச் சிந்திக்க வைத்தன.

ஆக, இவ்வமைப்பிலிருந்து ஒரு தெளிவான முடிவுக்கு நாம் வரலாம். நாலடியார் பாடிய சமண முனிவர்களும், அந்நூலைத் தொகுத்த பதுமனாரும் காமத்துப்பாலை அற இலக்கியத்தின் ஒரு கூறாகவே கருதியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

இக்கருத்தில் திருவள்ளுவர்க்கு முழு உடன்பாடு இருந்துள்ளமையால்தான் காமத்துப்பால் செய்திகளை யும், அறத்தின் ஒரு கூறாகக் கொண்டுள்ளார்.

காமத்துப் பாலையே முதற்பாலாகக் கொள்ள வேண்டும் எனும் கருத்தும் முன்னோர்க்கு இருந்து உள்ளது. இதற்கு அடிப்படை

**இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை**

- தொல்.பொருள்.களவியல்.89

எனவரும் தொல்காப்பியத் தொடராகும்.

இதுபற்றித் தருமர் எனும் பழைய நாலடியார் உரையாசிரியர் எழுதும் குறிப்பு வருமாறு :

''அஃதாவது இன்பத்தின் முறைமையைச் சொல்லியதாம். முன்பே இன்பம் சொல்லிப் பின்பு உலக முறைமையான பொருட்பால் சொல்லி, அதன் பின் அறப் பகுதியினைச் சொல்லி வீடு பேற்றிலே முற்றுவிக்க வேண்டாவோ என்னில் அங்ஙனம் அன்று. இளமைப் பருவத்திலே அறத்துக்குக் காரணமான நூலைக் கற்பித்து அதிலுள்ள முறைமையினை உணர்த்திப் பின்பு மனைவாழ்க்கையாகிய மணம் செய் வித்து அவ் அற நூலின் முறைமைக்குத் தக ஒழுகும்படி அறப் பகுதி முற்கூறிக் கல்வி, கேள்வி முதலியவற்றால் மன நூலில் இயல்பை வழுவாமல் நடத்துதலால் உலகத் திலுள்ள உயிர்கள் எல்லாம் இரட்சைப்படுதல் காரண மாகப் பொருட் பகுதியினைச் சொல்லிப் பின் இன்பத் தைச் சொல்லியதாம்''.

இதனை அடியொற்றித்தான் அண்மைக் காலத் தில் திரு.வி.க.வும், மு.வ.வும் இன்பத்துப்பாலை முன் னிறுத்தி எழுதினர். ஆனால், திருவள்ளுவர் கருத்து அது அன்று. தமிழரை அகப்போகத்திலிருந்து மீட்டு, அற நெறிக்கு உட்படுத்திப் பொருள்வளமாக்கி நிறை விலேயே இன்ப நாட்டம் கொள்ளச் செய்தல் வேண்டும்

என்பதுவே திருவள்ளுவர் கொள்கையாக இருந்தது. அதனால்தான் இன்பத்துப் பாலை இறுதிப் பகுதியாகத் தம் நூலுள் அமைத்திருத்தல் வேண்டும் (விரிவிற்குப் பார்க்க. திருவள்ளுவம்: திருவள்ளுவர் காதற் கோட்பாடு. ப.108).

அறம், பொருள், இன்பம் என்ற பாகுபாடு தமிழர் கண்டதே (தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை ப. 559). ''தர்ம அர்த்த காம மோட்சம்'' என்ற சமஸ்கிருதப் புருஷார்த்திற்கும் திருக்குறளுக்கும் தொடர்பு இல்லை. சமஸ்கிருதத்தில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு, தனி அற (நீதி) இலக்கியம் எழுதப்படவில்லை. அந்நூற்றாண்டுக்குப் பின்பு எழுதப் பெற்ற நீதி இலக்கியங்களிலும், காமத்துப்பால் எனும் ஒரு பகுதி இடம் பெறவில்லை.

அறிஞர் சிலர், காமத்துப்பால், வாத்சாயனரின் (கி.பி. 4-ஆம் நூற்) காமசூத்திரத்தை அடியொற்றி எழுதப்பெற்றது என எழுதுவர். அந்நூலின் அமைப்பும், உள்ளடங்கிய செய்திகளும் திருக்குறளோடு பொருந்தி வரவில்லை. காம சூத்திரம், கொக்கோக முனிவர் எழுதிய கொக்கோகம் ஆகிய சமஸ்கிருத நூல்கள், காம நுகர் முறைகளை விளக்கப் படைக்கப் பெற்ற நூல்கள் (விரிவிற்குப் பார்க்க : பிற்குறிப்பு).

திருக்குறள் காமத்துப்பாலைப் பயில்பவர் காம சூத்திரத்திற்கும், திருக்குறளுக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பதை எளிதே அறிந்து கொள்ளுவர். காம சூத்திரம் உடல் உறவைப் பச்சையாகப் பேசுவது; திருக் குறள் காமத்துப்பால் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையேயுள்ள உள்ளார்ந்த பேரன்பைக் கவித்துவம் ததும்பப் பேசுவது. காம சூத்திரத்தில் உடலின்பமே மேலோங்கி நிற்கிறது. திருக்குறளில் உள்ள இன்பமே மேலோங்கி நிற்கிறது.

இனி, திருவள்ளுவர் காமத்துப்பாலை அறத்தின் ஒரு கூறாகக் கொண்டதற்கான காரணத்தை ஆராய்வோம்.

1. திருவள்ளுவர்க்கு இல்லற ஒழுக்கம் முழு ஏற்புடையது. எனவேதான், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல் எனும் அதிகாரத் தைப் படைத்தார். அன்றியும் இல்லற ஒழுக்கத்தை உயர்த்திப் பேசும் முகமாக

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**
**போஒய்ப் பெறுவ தெவன்?** (குறள். 46)

என்றும்,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.** (குறள்.50)

என்றும்,

**இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை?** (குறள்.53)

என்றும் குறித்துள்ளார்.

2. திருவள்ளுவர் தம் காலத்தில் பெண்கள், நேர் முகமாக வீடுபேறு அடைய முடியாது; அவ்வாறு வீடு பேறு அடைய வேண்டுமெனில் அவர் மறுபிறவியில் ஆணாகப் பிறந்து அறம்செய்து வீடுபேறு அடைய வேண்டும் என்று வழங்கிய சமண சமயக் கருத்தைச் சிறிதும் ஏற்கவில்லை. அவர் கருத்து.

**பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு.** (குறள்.58)

என்பதாம். கணவனுடன் சேர்ந்து சிறந்த இல்லறம் நடத்தும் பெண்டிர் தேவர் உலகை அடைவர் என்றும், தேவர்களால் தனிச் சிறப்பு செய்விக்கப் பெறுவர் என்றும் இக்குறட்பாவில் குறித்துள்ளார்.

2.1 பெண் பிறப்பைப் பழித்துரைக்கும் சமணக் கருத்திற்கு மாறாக,

**இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை** (குறள். 53)

என்றும்,

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்**
**திண்மை யுண்டாகப் பெறின்** (குறள்.54)

என்றும்,

**புகழ் புரிந்து இல்லிலோர்க்(கு) இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை** (குறள்.59)

என்றும் குறிப்பிடுகிறார். இயற்கைக்கே ஆணையிட்டு, மழையையே பெய்விக்கும் ஆற்றல் மகளிர்க்கு உண்டு என மிகப் பெருஞ் சிறப்பைத் தருகிறார். (குறள். 55)

**தெய்வம் தொழஅள்; கொழுநன் தொழுதொழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.** (குறள்.50)

இல்லற வாழ்வில் சிறப்பாக வாழ்வோர் வானில் வாழும் தெய்வமாகக் கருதப்பெறுவர் என்கிறார் (குறள்.50)

ஆக, திருவள்ளுவர் கருத்தில் இல்லறமும் இல்லறத்தைச் சிறப்புடன் நடத்தும் பெண்ணும் மிகப் பெரிய மதிப்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரியவராக இருந்துள்ளனர். எனவே, இல்லறத்திற்குச் செல்லும் பெண்ணும், ஆணும் கூடும் வாழ்க்கை அறக்கேடாக இருத்தல் ஆகாது. அதுவும் நெறிமுறைப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தில்தான் காமத்துப் பாலைத் திருவள்ளுவர் தம் அற நூலின் ஒரு பகுதியாக எழுதிச் சேர்த்திருத்தல் வேண்டும்.

காமத்தை வெறும் உடற்காமமாக அவர் கருத வில்லை. அது அன்பு அடிப்படையானது. தெளிவான அறிமுகத்தை வழிஒற்றி அமைவது. எனவே, கற்பு வாழ்க்கைக்கு முன்னோட்டமான களவு வாழ்க்கையைச் சங்க இலக்கியச் சான்றோர் நெறியைப் பின்பற்றிப் படைத்துள்ளார்.

களவிற்கு உரிய முதல் ஏழு அதிகாரங்களும் (109-115), கற்பு (அதி. 116-133) எனும் திருமண வாழ்க்கைக்கு இடப்படும் அடிப்படை என்பதால் களவும் அறமாகிறது. *

# தமிழகம் எனது இரண்டாவது தாயகம்!

நம்மை "வணக்கம்!" என்று கைகூப்பி வரவேற்கிறாள் கலையரசி.

"தங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி" - தெளிவான, பிசிறில்லாத உச்சரிப்பு.

இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது? இருக்கிறது. கலையரசி சீனப் பெண்மணி. சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்புப் பிரிவுத் தலைவி.

இயற்பெயர் 'ஜு ஜுவான் ஹுவா' என்றாலும் 'கலையரசி' என்று தமிழ் நேயர்கள் சூட்டிய பெயரையே தனது பெயராக ஏற்றுக் கொண்டிருக்கிறார் இவர்.

தமிழகச் சீன வானொலி நேயர் மன்றக் கருத்தரங்கில் பங்கேற்பதற்காகத் தமிழகம் வந்திருந்தார் இவர்.

சீன வானொலியின் தமிழ் அனுபவங்களை நம்முன் அவர் பகிர்ந்து கொள்ளுகிறார்

"நான் கடந்த 30 ஆண்டுகளாகச் சீன வானொலித் தமிழ்ப் பிரிவில் பணியாற்றி வருகிறேன். கணவர் வாங் யென் சி சீன வானொலியில் துணை இயக்குநராக இருக்கிறார். மகள் வாங் தான் பொறியாளர்.



ஷாங்காய் ஃபாரின் லாங்வேஜஸ் இன்ஸ்டிட் யூட்டில் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றேன். சீன வானொலியின் பிறமொழி ஒலிபரப்பு ஆங்கிலப் பிரிவில் 1975-இல் பணியில் சேர்ந்தேன். அப்போது தமிழ்ப் பிரிவுக்கு ஆள் தேவைப்பட்டதால் அதற்கு மாறினேன். அதற்கு முன்னால் தமிழ் என்று ஒரு மொழி இருப்பதே எனக்குத் தெரியாது. நான் தமிழ் கற்க வேண்டும் என்று முடிவெடுத்தது. அரசாங்கம்தான். ஆனால், கற்றபின் தமிழ் மொழியின் இனிமை, பெருமை, இலக்கிய வளமையை உணர்ந்தேன்.

இலங்கையைச் சேர்ந்த ராணி சீனாவில் பணி புரிந்தார். அவரிடம் ஆரம்பத்தில் ஒன்றரை ஆண்டுகள் தமிழ் கற்றேன். அப்புறம், தமிழகம் வந்து தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஓராண்டு தமிழ் கற்றேன்.

தஞ்சாவூரில் நான் வேற்று நாட்டில் இருப்பதாக உணரவேயில்லை. அங்குள்ள மக்களும் என்னை அன்னியராகக் கருதவில்லை. குறிப்பாகப் பல்கலைக் கழகத்தில் பல்துறைப் பேராசிரியர்களும், பணியாளர்களும், சக மாணவர்களும் காட்டிய அன்பு மறக்க முடியாதது.

தமிழ் கற்பது கடினமாகத்தான் இருந்தது. அதிலும் எங்கள் ஷாங்காய்ப் பகுதிக்காரர்களுக்கு ர, றீ உச்சரிப்பு வராது. அதை மட்டும் ஒன்றரை மாதம் கஷ்டப்பட்டுக் கற்றுக்கொண்டேன். அப்புறம், தமிழ் எழுத்து முறைக்கும் சீன எழுத்து முறைக்கும் ரொம்பவே வித்தியாசம். ஆனால், நான் தற்போது தமிழில் மிக அழகாக எழுதுவேன்.

இலங்கைக்குச் சென்றுவிட்டுத் தான் இந்தியாவுக்கு வந்துள்ளேன்.

அந்த நாடு அழகாக இருக்கிறது. ஆனால், போர்ச்சூழல் காரணமாக அங்கே எங்குப் பார்த்தாலும் ஒருவிதக் கெடுபிடி நிலவுகிறது. நாங்கள் தங்கியிருந்த இடங்களிலும்கூட இரவில் வெளியே செல்ல வேண்டாம் என்று எச்சரித்தார்கள். ஓரிடத்தில் நாங்கள் வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது திடீரெனச் சிலர் எங்களை வாகனங்களை இடைநிறுத்திக் கண்டிப்புடன் விசாரித்துப் பிறகு செல்ல அனுமதித்தார்கள். சாதாரண உடைகளில் இருந்தபோதும் அவர்கள் ராணுவ ஆட்கள் என்பதை அறிய முடிந்தது.

*சீன வானொலியில் தமிழ் ஒலிபரப்புப் பற்றி...*

சீன வானொலியில் ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட வெளிநாட்டு ஒலிபரப்புகளுள் ஒன்று. தமிழ், இந்த ஒலிபரப்புத் தொடங்கி 43 ஆண்டுகளாகிவிட்டன. தமிழ் ஒலிபரப்புக்குத் தமிழகம் மட்டுமின்றி, இலங்கை, மலேசியா, ஜப்பான், வளைகுடா நாடுகள் என்று பல்வேறு நாடுகளிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. தமிழ் ஒலிபரப்பு பற்றி, 'சீனத் தமிழொலி' என்ற வானொலி இதழையும் நாங்கள் வெளியிட்டு வருகிறோம்.

தமிழ்ப் பிரிவில் தற்போது 2 நிபுணர்கள் தவிர நாங்கள் 6 பேர் தமிழ்ப் பிரிவு நிகழ்ச்சித் தயாரிப்பு, ஒலிபரப்பில் பணிபுரிகிறோம். மேலும் ஒரு பெண் உள்ளிட்ட 4 பேர் வானொலிக் கல்லூரியில் பேராசிரியர் பாங் யூ க்யூவிடம் தமிழ் கற்றுவருகின்றனர். பேராசிரியர் பாங் அறுபதாண்டுகளாகத் தமிழ் கற்றுக் கொடுத்து வருகிறார்.

*தமிழ்-சீனம், இந்தியா-சீனா... உங்கள் பார்வையில் ஒப்பிட்டுக் கூற முடியுமா?*

தமிழ்-சீனம் இரண்டுமே மிகப் பழைமையான, பாரம்பரியப் பெருமை மிக்க மொழிகள். இந்தியா-சீனாவை ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் வளரும் நாடுகள். மக்கள் தொகையில் முன்னிற்பவை. இரு

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும் ஏறக்குறைய ஒரே மாதிரி நிலையில் இருக்கின்றன. சீன மக்களின் வாழ்க்கையிலும்கூடத் தற்போது மேலைநாட்டுத் தாக்கம் அதிகரித்துவருகிறது.

*உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவும், உலகின் மாபெரும் கம்யூனிஸ நாடான சீனாவும் உலக அமைதி, மேம்பாட்டுக்கு எந்த வகையில் பாடுபட முடியும் என்று நினைக்கிறீர்கள்?*

நம்மிரு நாடுகள் மட்டுமே உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கை வகிப்பவை. நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்டவை. இந்தியா-சீனா இடையே கடந்த காலங்களில் சில பிரச்சினைகள் இருந்தனதான். அதையெல்லாம் மறந்து ஒன்றிணைந்து செயற்பட்டால் நிச்சயமாக நாம் உலக வளர்ச்சிக்கு உதவ முடியும். சீன அதிபர் ஹூ ஜிந்தாவின் இந்திய வருகை அதையொட்டிய ஒரு முயற்சிதான்.

*தற்போது சென்னையில் எந்தெந்த இடங்களுக்குச் சென்றீர்கள்?*

நேரமில்லாததால் மெரீனா கடற்கரைக்கு மட்டும் சென்றோம். கூட்டம் இல்லாத, பரந்த மணல்வெளியுடன் கூடிய அழகிய கடற்கரை ஏற்கெனவே பலமுறை நான் மெரீனாவுக்குச் சென்றிருக்கிறேன். காரணம் எனக்கு, இது ஆறாவது இந்தியப் பயணம். தமிழகம் எனது இரண்டாவது வீடு-தாயகம் போலாகிவிட்டது. ஆண்டுதோறும் தமிழகம் வர வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது.

*தமிழ் நேயர்கள் பற்றி?*

அவர்கள் அளிக்கும் ஊக்கமும், உற்சாகமும் அளவிட முடியாதவை. கடிதங்கள், மின்னஞ்சல் மூலம் அவர்கள் தொடர்ந்து தொடர்பு கொள்கிறார்கள். தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கிறார்கள். அவர்கள் எங்கள் பால் செலுத்தும் அன்பும் அதீதமானது.

---

# மலேசியத் தமிழ்ப் பாவலர் மன்றம்

## ஒரு சுருக்கமான வரலாறு...!



மறைந்த எங்கள் கவிதை யாசான் காலஞ் சென்ற டாக்டர். முத்தமிழ் முரசு, செந்தமிழ்க் கவிமணி, டி.வி. இராகவன் பிள்ளையவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டுகளில் கவிதை வகுப்பினை பத்து மலைத் தமிழ்ப் பள்ளியில் அமைத்தார்... அதுசமயம் சுமார் இருபதுக்குக் குறையாத மாணவர்கள் வந்தனர்.

சுமார் இரண்டு ஆண்டுகள் கவிதையும் யாப்பும் கற்றபின்னரே... சிறுகச் சிறுக கவிதையெழுதும் ஆற்றல் வளர்ந்தது,

இப்படி இருக்கையில் கடலோரக் கவிதை படிக்க போர்ட்டிக்சன் சென்றோம். பாங்கான பங்கோர் தீவிற்கும் குளிர்ச்சியில் மகிழ்ந்து கவிதை படிக்க. கேமரன் மலைக்கும் சென்றோம்.

கவிதை அரங்கேற்றம் நிறைய தலைநகரில் நடத்தினோம். வானொலியிலும் கவிதை படைத்திருக்கிறோம். பரிசுகளும் பல பெற்றோம்.

ஆசானின் எண்ணத்தில் பாவலர் மன்றத்தையும் பதிவுபெற்ற ஸ்தாபனம் ஆக்க எண்ணினார். அதையும் செய்தார். பின்னர் அவர்களுக்கு என்று ஒரு கட்டடத்தையும் வாங்கிக் கொடுத்தார்.

அது இன்று பீடுநடை போடுகிறது. கட்டடம் RM 75,000/-க்கு வாங்கப்பட்டது. மின் விசிறி, விளக்கு நாற்காலி மேலும் சிலவும் பின்னர் வாங்கப் பட்டது. எல்லாமும் அன்னாரின் சீரிய முயற்சியால் என்றால் மிகையாகாது.

இடையே பலர் கவிதை எழுதிக் கவிஞராகினர். அவர் இதயநோயால் மரணமுற்ற போது கவிஞர் சி. இராதாகிருஷ்ணன் இரண்டாவது தலைவராகப் பாவலர் மன்றத்திற்கு ஆனார். அவரால் ஆன சேவையையும்... முடிந்த மட்டும் வழங்கினார்.

இந்த ஆண்டு 2006 ஆகஸ்டிலிருந்து... மூன்றாவது தலைவராக... கவிஞர் ஏ.ஆர். சுப்பிரமணியம் P.J.K. அவர்கள் பொறுப்பேற்று ஆசானின் வழிநடந்து பாவலர் மன்றத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

பிரதி மாதமும் ஒரு முறை கவிதைப் பிள்ளை நடந்துவருகிறது. புதியவர்களுக்கு... கவிதை யெழுதும் யுக்தியும்... தமிழ் இலக்கணமும்... யாப்பும் போதிக்க... நடவடிக்கையெடுத்து... கையேடும் தயாரித்துப் புதியவர்களுக்கு வழங்கிக் கவிதை வாழ வழி செய்திருக்கிறார்.

மேலும் கவிதை வளரப் பல நடவடிக்கை எடுக்க ஆவலாய் உள்ளார். புதியவர்கள்... பாவலர் மன்றத்திற்கு அறிமுகமாகவேண்டும் எனப் பாவலர் மன்றம் எதிர்பார்க்கிறது. தமிழ் வளர்ப்போம். தமிழ்க் கவிதை படைப்போம். வாழ்க தமிழ்! வளர்க எம்மொழி...!!

**ஏ.ஆர். சுப்பிரமணியம்**
தலைவர், மலேசியத் தமிழ்ப் பாவலர் மன்றம்

# உலகத் தமிழேடுகள் ஒன்றியம் உருவானது

வெகுவாகக் குறைந்து வருகின்ற 'ஏடுகள் வாசிக்கும் பழக்கத்தை' மாற்றி நிலை நிறுத்தவும், உலகளாவிய தமிழ் ஏடுகளின் அதிபர்களை ஒன்றிணைக்கவும். அவர்களிடையே புரிந்துணர்வை வளர்க்கவும் ''உலகத் தமிழேடுகள் ஒன்றியம்'' என்னும் அமைப்பு மலேசியாவில் உருவாக்கப்பட்டுள்ளது.

பல துறைகளிலும் மலேசியாவின் கதவுகள் பல இன மக்களுக்கும் திறந்தே இருக்கின்றன. இத்தகைய வாய்ப்புகள் தமிழ் மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக, வலிமை வாய்ந்த ஊடகங்களுள் ஒன்றான தமிழேடுகளுக்கென்று இந்த ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறவுள்ள உலகத் தமிழ் வாசகர்கள் மாநாடு, உலகத் தமிழேடுகளின் அதிபர்களுக்குக் கலந்துறவாடும் களமாகத் திகழும். இவ் உலகத் தமிழேடுகள் ஒன்றியம் தமிழேடுகளின் அதிபர்களுக்குத் தூதுவராலயமாகச் செயல்படும்.

பல நாடுகளில் உள்ள தமிழேடுகளின் அதிபர்கள் இவ் ஒன்றியத்தில் இணைந்து கொண்டு தூதர்களாகச் செயலாற்ற முடியும். சிறந்த அதிபர்களும் மேலாளர்களும் தூதர்களாகத் தகுதி பெறுகின்ற வகையில் நியமனங்கள் நடைபெறும். இத்தகு தூதர்கள் தமக்கெனத் தனிச் சலுகைகளைப் பெறுவர்.

பிறநாடுகளிலிருந்து மலேசியாவுக்கு வருகை தரும் இத்தூதர்கள், அனைத்துலக விமான நிலையத்திலிருந்து வரவேற்புடன் அழைத்து வரப்படல், மெய்க்காவலர் ஒருவரின் துணையோடு தங்கும் விடுதியை அடைதல், மலாய், சீனம், ஆங்கிலம், தமிழ் முதலான மொழிகள் தெரிந்த பொதுவுறவு அதிகாரியின் முழுநேர ஒத்துழைப்போடு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல் முதலான வாய்ப்புகளைப் பெறுவர். சந்திக்கவேண்டிய முக்கியப் பெருமக்களை அட்டவணைப்படுத்தி, சந்திப்புகளை ஒழுங்கு செய்து தருதல், பிறமொழிப் பெருமக்களுடனான சந்திப்புகளின்போது மொழிபெயர்ப்பாளராகச் செயற்படுதல், தமிழ், மலாய், சீன, ஆங்கில ஏடுகளின் அலுவலகங்களில் நேர்காணல் சந்திப்புகளை ஏற்படுத்துதல், வானொலி தொலைக்காட்சி நிலையங்களில் ஒலி-ஒளிப்பதிவுக்கு ஏற்பாடு செய்தல், முதலான பொறுப்புகளைப் பொதுவுறவு அதிகாரி நிறைவேற்றித் தருவார்.

பிறநாட்டுத் தமிழேடுகளில் ''மலேசியா பக்கம்'' ஏற்படுத்தி மலேசிய செய்திகளை வெளிவர ஆவன செய்தல், தமிழ் ஊடகங்களில் ஆக்கங்களைப் பன்மொழிகளில் மாற்றம் செய்தல் முதலான பணிகளையும் இவ் ஒன்றியம் மேற்கொள்ளும்.

தொடர்புக்கு :
Ulaga Thamizhedugal Ondriyam
G.P.O. Box 13030, Kuala Lumpur 50796, Malaysia.

## சுடர் ஒளியே வாழ்க! வாழ்க!

(இசைப்பாடல்)

ஒளியே வாழ்க-சுட
ரொளியே வாழ்க! தமிழ்
ஒளியே வாழ்க! வாழ்க! -ஒளியே

தொன்றுதொட்டு வந்தஇனம்
வென்று காட்ட நின்றொளிரும் -ஒளியே

இருளை நீக்கும் ஒளியாகி
இனிய தமிழன் உணர்வாகி
மருளைப் போக்கும் அறிவாகி
மனத்தில் நிலைக்கும் நினைவாகும் -ஒளியே

கண்டின் சுவையும் திகட்டிவிடும்
கல்லா நிலையும் அகற்றிவிடும்
உண்ட சுவையில் மீளாமல்
உணர்வை நித்தம் விளைத்துவிடும் -ஒளியே

நீதி நெறியில் பிறழாது
நல்லார் உறவில் வழுவாது
வீதி யெங்கும் பேச்சாகி
முழங்கும் தமிழர் மூச்சாகும். -ஒளியே

தென்மொழிப் பாவலர் மா. தமிழன்பனார்
சித்தியவான், மலேசியா

## ஒன்று கூடுவோம்

(இசைப் பாடல்)

ஒன்று கூடுவோம் - நாம்
ஒன்று கூடுவோம்... - ஒன்று

உலகத் தமிழ்வா சகரை
ஒன்றிணைக்கும் மாநாட்டில்... - ஒன்று

சுடரொளியாலே மனவிருள் போக்கித்
தமிழின வாழ்வு நிலைத்திட ஊக்கி
இடரிலும் தமிழே உயிரெனப் போற்றி
இலண்டனின் தமிழ்ப்பணி உலகிடை யாற்றி
- ஒன்று

புதுயுகத் தமிழர் சிறப்புடன் வாழப்
பூந்தமிழ்க் கவிதைப் போட்டியும் ஆள
எதுநமதுரிமை என்பதைக் காட்ட
எங்கும் தமிழ்மொழி அணியெனச் சூட்ட - ஒன்று

சைவமும் தமிழும் ஆலயம் மணக்க
தமிழரின் இல்லம் அதனொடு சிறக்க
மெய்ம்மையும் தூய்மையும் என்றுமே நிலைக்க
மணித்தமிழ்த் தேசம் ஆட்சியில் கொழிக்க - ஒன்று


# கனடா தேர்தலில் ஈழத் தமிழர் வெற்றி



கனடாவில் உள்ள ரொறன்ரோ, மார்க்கம், மிசிசாகா போன்ற மாநகர சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட்டு நகர சபை உறுப்பினராகவும் கல்விச் சபை உறுப்பினராகவும் இரு ஈழத் தமிழர்கள் வெற்றி பெற்றுக் கனடா ஆட்சி அரசியலில் அடிஎடுத்து வைத்துள்ளனர்.

மார்க்கம் நகர சபை உறுப்பினராக 7 ஆம் வட்டாரத்தில் போட்டியிட்ட லோகன் கணபதியும், கல்விச் சபை உறுப்பினராக 7 ஆம் 8 ஆம் வட்டாரங்களில் போட்டியிட்ட நீதன் சண்முகராஜாவும் 34%, 68% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருப்பது தமிழர்களின் வாக்குகளை மட்டுமல்லாது பிற இன மக்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளமையைச் சுட்டிக் காட்டுகிறது.

நிதி காப்பீடு நிறுவனத் தலைவரான லோகன் கணபதியைப் பற்றிப் ''புதுயுகத்துக்கான புதியமுகம்'' என்று ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. 'இந்த என்னுடைய வெற்றி, மக்களின் வெற்றி' என்று குறிப்பிட்டார் கணபதி. மேலும் தமது அரசியல் அனுபவத்தையும், சமூக அறிவையும், வாணிகத் திறமையையும் பயன்படுத்தி மக்களுக்குச் சேவை யாற்றுவதில் நகர சபை உறுப்பினர் பொறுப்பை நிறைவேற்ற உள்ளதாகக் குறிப்பிட்டார். 10க்கும் மேற்பட்ட தமிழர்கள் போட்டியிட்டு இருந்தனர். இவர்கள் இருவருக்கும் போட்டியிட்ட மற்றத் தமிழர்களுக்கும் இலண்டன் சுடரொளி வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறது.



# அருள்மிகு அன்னை கருமாரியம்மன் ஆலயம் உலக அம்மன் திருக்கோவில்கள் ஒன்றியத்தில் இணைந்தது

அண்மையில் லூனாஸ் பாயா பெசார் கருமாரியம்மன் ஆலயம் தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்பட்டு உலகளாவிய அம்மன் திருக்கோவில்கள் ஒன்றியத்தில் இணைந்தது. பழைமை வாய்ந்த ஆலயமாகவும் சீரான நிருவாகத்தைக் கொண்டுள்ளதும் பரிணாம வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் காரணத்தினாலும், உலக அரங்கில் அருள்மிகு அன்னை கருமாரியம்மன் ஆலயம் சிறப்பிடம் பெற்றுள்ளது.



ஆலய வளாகத்திலேயே தமிழ்ப் பள்ளி அமைக்க ஆலய நிருவாகம் ஆர்வம் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அஃது சமயப் பள்ளியாகவும் தமிழ் மொழிப் பள்ளியாகவும் திகழவிருக்கிறது.

உலக அம்மன் திருக்கோவில்கள் ஒன்றியத்தில் இணைவதால் ஈராண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். உலக அம்மன் திருக்கோவில்கள் மாநாட்டில் பங்கேற்கலாம்.

மேலும் ''அருள்மிகு அன்னை கருமாரியம்மன் இந்துக் கல்லூரி'' ஆலய வளாகத்தில் அமைக்கும் எண்ணம் கொண்டிருப்பதும் வரவேற்கத்தக்கதாக உள்ளது.



சமய மேம்பாட்டிற்காக Institute Kemajuan agama Hindu Malaysia செயல்படவிருப்பது வரவேற்கத் தக்கது.

இந்து ஆகம மொழியாகத் தமிழைப் பயன்படுத்துவதன் மூலம் தெய்வத் தமிழ்ச் சமயக் கல்வியை நிலைப்படுத்துவதோடு தெய்வங்களின் ஆட்சி தமிழ் மொழி யென்பதை மெய்ப்பிக்கிறது.

- Timoty mat Jaggut, Malasia

# வேத காலத்தில் வேள்விகளை ஏன் எதிர்த்தார்கள்?

பேராசிரியர் இரா. மதிவாணன்

ஆரியத் திராவிடப் போராட்டம் என்பது யாகம் செய்வோர்க்கும் யோகம் செய்வோர்க்கும் இடையில் உண்டான போராட்டமாகும். இராமனின் வில் யாகம் செய்வோரைக் காப்பதற்காகவும் தவம் செய்வோரை அழிப்பதற்காகவும் பயன்பட்டது.

உள் நாட்டார் தவம் செய்வது ஆரிய வந்தேறிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆரிய வெள்ளையர்களின் உயிர்க்கொலை யாகம் உள்நாட்டு மக்களுக்குப் பிடிக்கவில்லை. இவற்றுக்கான அடிப்படைக் காரணங்கள் எவை என எந்த வரலாற்றாசிரியரும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. வேள்வியை எதிர்த்தோர் தசியுக்கள் (பகைவர்) எனப்பட்டனர்.

யாகத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களை அழித்து விட வேண்டும் என்பது வேத ஆரியர்களின் முதல் கொள்கையாக இருந்ததால், தவம் என்னும் யோகம் செய்தோரை ஆரியர்கள் அழிக்க முயன்றதன் காரணம் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால், வேறு வகையான வழிபாட்டு முறைகளை அழிக்க வேண்டும் எனும் எண்ணம் உள்நாட்டுத் திராவிடரிடை என்றும் இருந்ததில்லை. ஏனெனில் ஆரியர் வருவதற்கு முன்பே பல்வேறு தெய்வ வழிபாட்டு முறைகளும் கடவுளே இல்லை என்னும் உலகாயுதம், சாங்கியம், சமணம் போன்ற கோட்பாடுகளும் இந்திய மண்ணில் இருக்கத்தான் செய்தன. சமயப் பொறுமை இருந்த மண்ணில் ஆரியர்களின் வேள்விகளைப் பொதுமக்கள் எதிர்த்ததற்கு வரலாற்று ஆசிரியர்களும், ஆரியரும் மூடிமறைத்த வேறு காரணங்கள் இருந்தன.

அவற்றுள் முதலாவது காரணம் கால்நடை வளர்ப்பவர்களிடமிருந்து அடிக்கடி ஏராளமான ஆடு மாடுகளைக் கவர்ந்து சென்றதாகும். இரவு நேரங்களில் தீப்பந்தங்களுடன் குதிரைகளில் வந்து கால்நடைகளைக் கொள்ளையிட்ட காட்சிகள் இருக்கு வேதத்தில் உள்ளன.

இரண்டாவது காரணம் இளங்காளைகளை மட்டும் பெருமளவில் கேட்பதும், தராவிடில் வலிய கவர்ந்து செல்வதும் எருதுகளில்லாத மாட்டுப் பட்டிகளை உருவாக்கியது. எருதுகளின் விதைகளை மட்டும் இந்திரன் விரும்பி உண்பான் என்பதே இதன் உள்நோக்கம்.

மூன்றாவது காரணம் ஆறுமாதம் முதல் ஓராண்டு வரை நாள்தோறும் வேள்வித் தீயில் பல்லாயிரம் ஆடுகளையும் மாடுகளையும் குதிரைகளையும் உயிரோடு பொசுக்கி நெய்யூற்றிச் சுவைத்துத் தின்னும் காட்சி, ஆடுமாடுகளைக் குழந்தைபோல் வளர்த்த நாட்டுப்புற மக்களின் நெஞ்சத்தை உலுக்கியது.

நான்காவது காரணம் வேள்விக்காக ஊர்மக்கள் அரசன் கட்டளைக்கு அஞ்சி அரிசி, பருப்பு போன்ற உணவுப் பண்டங்களையும் நிறைந்த அளவில் கொட்டிக் கொடுக்க நேர்ந்தது. இக்கொடுமைக்கு அரசனே உடந்தையாக இருந்ததால் துணிவுடைய மக்கள் எதிர்த்துப் போராடித் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. அடங்கிப் போனவர்கள் சூத்திரம் என்றும், மிகுபொருள் தந்தோர் சற்சூத்திரர் (நல்ல சூத்திரர்) என்றும், அடங்காமல் எதிர்த்தோர் தீண்டத்தகாத சண்டாளர் என்றும் வகைப் படுத்தப்பட்டனர்.

இராமாயணக் கதைகள் பல. அவற்றுள் ஒரு இராமாயணக் கதையில் யாகத்தைக் காப்பதற்காகச் செல்லும் இராமனைச் சீதை இகழ்ந்து பேசினாள். ''கால் நடை வளர்ப்போரும் பொதுமக்களும் வேள்விகளை எதிர்ப்பது இயல்பானது, முறையானது, இதில் தவறில்லை. நீ செய்வதே தவறு'' என இராமனைக் கடிந்துரைத்தாள்.

புதியவர் எவராயினும் விருந்தளித்து மகிழும் நாட்டுப்புறமக்கள் ஆரிய வேள்விகளை ஏன் எதிர்த்தார்கள் என்னும் பின்புலத்தை இனியேனும் வரலாற்றாசிரியர்கள் மறைக்காமல் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். *

## மலேசியாவில் ''என் அட்டை''யில் (My card) புதிய முறை

மலேசியாவில் முன்பு அடையாள அட்டை. இப்போது என் அட்டை (My Card) பல நன்மைகளை உள்ளடக்கியதாக மக்கள் நலன் கருதியே பயன்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய 'என் அட்டை'யில் குடியுரிமை, மதம், முகவரி, பிறந்த தேதி ஆகியவற்றுடன் மக்கள் தொகை எண்ணிக்கை, எந்த மாநிலம் போன்ற விவரங்களும் பெயர், தந்தை பெயர், அனைத்துலகக் கடப் பிதழ் (Passport), உரிமம் (லைசென்ஸ்) மற்றும் வங்கிக் கணக்கு ஆகிய விவரங்களும் இடம் பெற்று உள்ளன. தற்போதைய 'என் அட்டை'யில் இந்திய வம்சாவளியினரை Keturunan India என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்றே சீன நாட்டு வம்சாவளியினரை Keturunan Cina என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயினும், தத்தம் வம்சாவளிப் பெயரை அடையாளங் காட்டிக் கொள்ள விரும்பாதவர்கள் தங்களின் மொழியை இனமாக அடையாளமிட்டுக் கொள்ளலாம். தமிழ் என்பதற்கு 0304 எனும் குறியீட்டைச் சுட்டிக்காட்டி மாற்றிக் கொள்ளலாம். அதற்கு எவ்விதத் தடையும் கிடையாது என்று யுனெஸ்கோ கிளப் மக்கள் தொடர்பாளர் திருவாட்டி கிரன்ஜிட் சர்மா பகதூர் தெரிவித்திருக்கிறார்.

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

- கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

## வாழ்க்கை வரலாறு (13)

*''ஆரடி கள்ளி! யென்றே அரங்கினில் புகுவாய் உன்தன் மோகனம் எழும்பி நாத முகடு தொட்டனையும் கண்கள் ஈரமாம் இசையும் சொல்லும் ஈர்க்குமுன் நடிப்பும் காண ஆயிரம் தரமா இன்னும் ஆயிரம் தடவை பார்ப்பேன்''*

**- கவிஞர் சோ. பத்மநாபன்**

### இயல் பதின்மூன்று
### வைரமுத்துவின் அரங்கு - சிறப்புநோக்கு

அரங்கு என்ற சொல் ஆங்கிலப் பதமாகிய தியேட்டர் என்பதற்குப் பதிலாக இன்று தமிழிற் கையாளப்படுகிறது. தமிழ் மக்கள் பெரும்பாலும் சினிமாக் கொட்டகையைத் தான் தியேட்டர் என இலங்கையிற் குறிப்பிடுவர். ஆனால் தியேட்டர் எனும் சொல் பரந்த பொருளுடையது. இது எந்தக் கலையாக விருந்தாலும் அது நிகழ்த்தப்படும் இடத்தையும், அந்தக் கலையுடன் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் குறித்து நிற்கின்றது.

தியேட்டர் கட்டிடத்தையும் அதனுள் அமைந்து உள்ள கலைநிகழிடத்தையும் (மேடை) ஒப்பனைக் கூடம், பார்ப்போர்க் கூடம் என்பவற்றை மட்டும் உள்ளடக்கவில்லை. பின்வருவோரும் இதனுள் அடங்குவர்.

நடிகர், நடனமாந்தர், பொம்மலாட்டக்காரர் ஆகிய நிதழ்த்து கலைஞர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், மேடைக்காட்சியமைப்புக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், ஒலி, ஒளி அமைப்பாளர், சொல்லுருவாக்குனர் (பிரதியமைப்போர்-எழுத்தாளர்) தயாரிப்பாளர்-நெறியாளர்), பார்ப்போர்-விமர்சகர், அரங்குடன் தொடர்புடைய நிருவாகிகள்.

வைரமுத்துவின் அரங்கு எத்தகையது, அது எவ்வாறு வளர்ச்சி பெற்றது-அவர் எப்படி எப்படியெல்லாம் அதனை மாற்றியமைத்து வளர்த்தெடுத்தார். எத்தகைய புரட்சிகரமான மாற்றங்களை அரங்ககலையில் ஏற்படுத்தினார். இம்மாற்றங்கள் எவ்வாறு தனித்துவம் மிக்கனவாக விளங்குகின்றன என்பன பற்றி ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

இடத்துக்கும், இரசிகர்களுக்கும் ஏற்ற வண்ணம் நாடகத்தை நடத்தும் ஆற்றல் வைரமுத்துவுக்கு இருந்திருக்கிறது. விடிய விடிய நித்திரை விழித்து நாடகம் பார்க்கும் இரசிகர்களுக்காக இரவு முழுவதும் நாடகமாடினார். அவர்களுட் பெரும்பாலோர் நடிகமணி வைரமுத்துவைத் தான் இரசித்தார்கள். ''வைரமுத்து வந்ததும் எங்களை நித்திரையிலிருந்து எழுப்புங்கள்'' என்று கூறி நித்திரை செய்வதும், வைரமுத்து மேடையில் ''தோன்றியதும் எழுவதுமாக நாடகம் பார்த்தவர்கள் இருந்திருக்கிறார்கள்.

இதனைப் ''பாதை மாறிய போது'' என்னும் காவியம் பின்வருமாறு கூறும்.

**''நடிக மணியின் நாடகம் நடக்குதாம்**
**கடைசியாக என்றதும் ஒரு சிலர்**
**படுத்தபின் எழுந்து பார்ப்போ மென்று**
**படுக்கப் பாயொடு தலையணை கொண்டும்**
**அரிக்கன் லாம்பைக் கொளுத்திக் கொண்டும்**
**கோயிலை நோக்கிக் குறுகிட லாயினர்.**
**கண்களும் துயின்று கனவு காண்கின்ற**
**அந்த நேரத்தின் அரங்கினில் மயான**
**காண்டம் என்னும் நாடகம் தன்னை**
**நடிக மணிகுழு நடிக்கத் தொடங்க**
**வைர முத்துவின் பாட்டும், நடிப்பும்**
**துயின்றவர் தம்மைத் துயிலெழ வைத்தன**
**''ஆரடி கள்ளி''! என்னும் மோகனம்**
**எஞ்சிய பேரையும் எழுந்திட வைத்தது''**

(காரை செ. சுந்தரம்பிள்ளை 1986-47)

இப்படிக் கட்டம் கட்டமாக நாடகம் பார்த்து வந்த ஆயிரக்கணக்கான இரசிகர்களை வைரமுத்து எப்படி வளர்த்தார்?

பொறுமையில்லாத, தரமில்லாத, சினிமாவின் தாக்கத்திற்குட்பட்ட நகர்ப்புறத்தாருக்காக நாடகத்தை ஓரிரு மணித்தியாலங்களில் நடக்கத் தக்கதாக மாற்றியமைத்தார். அரை மணித்தியால நாடகமாகக் கூட ஆக்கி அரங்கேற்றினார். ஆனால் நாடகத்தின் இழைகள் அற்றுப் போகாமலும், விறுவிறுப்புக் குன்றாமலும் பார்த்துக் கொண்டார். தான் செய்து கொண்ட இந்த மாற்றங்களுக்கு ஏற்பத் தம்முடன் நடித்த ஏனைய நடிகர்களையும் உதவிய கலைஞர்களையும் தயார் செய்தார்.

நீண்ட நாடகமாகவிருந்தாலும் கூட அடிக்கடி திரைகளை ஏற்றியிறக்கி இரசிகர்களின் பொறுமையைச் சோதிக்காமல் தொடர்ச்சியாக நாடகம் நடக்கத்தக்கதாக காட்சிகளை மாற்றியமைத்தார். இதற்கு ஒப்பனைக் கலைஞர்களும் மேடையமைப்புக் கலைஞர்களும் வைரமுத்துவுடன் நன்கு ஒத்துழைத்தனர். ஏனெனில் இவரிடம் இவர்களுக்கு அளவுக்கு விஞ்சிய நம்பிக்கையும் பக்தியும் இருந்திருக்கின்றன. ஆகவே, ஒப்புயர்வற்ற

சாதனையை எப்படிச் சாதித்தார் என்பதையும் இதற்கு யார் யார் துணைபுரிந்தவர்கள் என்பதையும் இனிப் பார்ப்போம்.

## சொல்லுரு (பிரதியமைத்தல்)

ஒரு நாடகத்தின் வெற்றிக்குச் சிறப்பான நாடகச் சொல்லுரு இன்றியமையாதது. மரபுவழி நாடகக் கலை ஞர்கள் பலர் இதை உணர்ந்திருக்கவில்லை. ஆதலால், அவர்கள் ''தமக்குத் தெரிந்த பாடல்களையும், வசனங் களையும் மூலதனமாகக் கொண்டு மேடையில் ஏறிச் சந்தர்ப்பத்திற்கேற்ற வண்ணம் நடித்து வந்தனர். சிலர் சக்களத்திப் போராட்டம், தர்க்கம் என்ற பெயர்களில் வேண்டத்தகாதவற்றையும் கூறத்தகாதவற்றையும் கூறி, இது தான் நாடகம், இது தான் நடிப்பு எனக் காட்ட முற்பட்டனர். ஒருவருடைய சாதியை இன்னொருவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டிச் சபையோரைச் சிந்திக்க வைத்து, அதனால் பெருமை தேட முயன்றனர். சக நடிகனை மட்டந்தட்டுவதையே நோக்கமாகக் கொண்டு மேடையில் அர்த்தமற்ற வினாக்களைக் கேட்டு வேடிக்கை காட்டினர். சிலர் மேடையில் உபதேசம் செய்தனர். இத்தகைய நிலை நீடிப்பதைச் சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் விரும்பவில்லை. அதனால் தான் நாடகநூல்களை எழுதி அவர் மேடையேற்றினார். இதன் பின்னருங்கூட சில நடிகர்கள் தான்தோன்றித் தனமாக வசனங்கள் பேசி நடித்த வண்ணமே இருந்த னர். ஆகவே தான் சங்கரதாஸ் சுவாமிகள் முறையான நாடகச் சொல்லுருவை ஆக்கி, சிறுவர்களை வைத்தே நாடகங்களை நடத்த முற்பட்டார். ஏனெனில் சிறுவர்கள் பெரியவர்களைப் போல சொல்லுருவுக்கப்பாற் சென்று வசனங்கள் பேசி நாடகத்தைப் பாழாக்க மாட்டார்கள் என நம்பினார்.

இந்திய இசை, நாடகக் கலைஞர்களுடைய தொடர்பினால் மேலே குறிப்பிட்ட குறைபாடுகள் ஈழத்து இசை நாடகக் கலைஞர்கள் மத்தியிலும் புகுந்து கொண் டிருந்தன. வைரமுத்து குழுவினர் நடித்த நாடகங் களிலும் இக்குறைபாடுகள் ஆரம்பகாலத்தில் இருந்த தென்பது உண்மையே. ஆனால் 1952 ஆம் ஆண்டின் பின்னர், இக்குறைபாடுகளை இவர்கள் படிப்படியாக சபாவுக்கே உண்டு.

''அரிச்சந்திர மயானகண்டம்'' நாகச் சொல்லு ருவை இலங்கையர்கோன் அமைத்துக் கொடுத்தார் என்பது முன்னரே கூறப்பட்டது.

''கோவலன் கண்ணகி'' நாடகத்தைக் ''கோவலன்'' என்னும் பெயரில் சுருக்கியமைத்து நெறிப் படுத்திப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேடையேற வைத்தார். இதன் பின்னர் கோவலன் நாடகமும் வைரமுத்துவுக்குப் புகழீட்டிக் கொடுக்கத் தொடங்கியது. இதன்பின்னர் மரபு வழி நாடகங்களை எட்டியும் பாராத, பார்க்க விரும்பாத, படித்த, உயர்மட்ட வர்க்கத்தினரும் அவருடைய நாட கங்களைப் பார்க்கவும் வைரமுத்துவைப் பாராட்டவும் தொடங்கினர்.

மேற்படி இரண்டு நாடகங்களும் புகழீட்டிக் கொடுத்த பின்னர் தான் வைரமுத்துவுக்கு ஓர் உண்மை மிகவும் துல்லியமாகப் புலனாகியது. அதாவது எந்த நாடகத்துக்கும் ஒழுங்கான முறையில் அமைந்த நாடகச் சொல்லுரு இன்றியமையாததென்பதாகும். ஆகவே ஏனைய இசை நாடகங்களையும் சுருக்கியும் புதுக்கி யுமைக்க இவர் விரும்பினார்.

வைரமுத்துவின் வேண்டுகோளின்படி ''பக்த நந்தனார்'', ''சத்தியவான் சாவித்திரி'' ஆகிய நாடகங் களை இந்நூலாசிரியர் சுருக்கி வடிவமைத்துக் கொடுத் தார். ''பவளக் கொடி'', ''அல்லியர்ச்சுனா'', ''ஞான சவுந்தரி'', ''சாரங்கதாரா'' ''ஸ்ரீவள்ளி'' ஆகிய நாடகங் களை வைரமுத்துவே சுருக்கியமைக்க இந்நூலாசிரியர் சிற்சில திருத்தங்களைச் செய்து கொடுத்தார்.

''மயானகாண்டம்'', ''கோவலன்'' ஆகிய இரண்டு நாடகங்கள் தவிர வைரமுத்து நடித்த ஏனைய வானொலி நாடகங்கள் அனைத்தையும் இந்நூலாசிரி யரே வானொலிக்கேற்ற வகையில் அமைத்துக் கொடுத் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

''பக்தநந்தனார்'' நாடககத்தைச் சுருக்கியும், புதுக்கியும் பிரதியமைக்கும் போது இந்நூலாசிரியர் பெற்ற அனுபவங்கள் பல. வைரமுத்துவின் தமிழ்ப் புலமையையும் இங்கே தான் உணரக் கூடியதாக விருந்தது.

பக்தநந்தனாரில் வரும் ஒவ்வொரு பாடலையும் பொருள் விளங்கும்படி அனுபவித்துப் பாடுவார் வைர முத்து. தமிழ்ச்சுவையறியாதவர் கோபாலகிருஷ்ண பாரதியாருடைய கீர்த்தனைகளைப் பாடமுடியாது. ஆழமாக உச்சரித்துப் பொருளுணர்ந்து பாடுவதற்கு ஓர் ஆற்றல் வேண்டும். அது முழுமையாக வைரமுத்து விடமிருந்ததற்குக் காரணம் அவர் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை நல்லாசிரியர்களிடம் குறை போகக் கற்றமையாகும். தமிழ் நாடக நடிகனுக்குத் தமிழறிவும் இன்றியமையாததென்பது இதனால் புலனாகின்றது.

''பக்தநந்தனார்'' எழுதும் போது மேடைக் காட்சியமைப்பு, ஒப்பனை என்பன முக்கியமாகக் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்பட்டன. காட்சிகள் உடனுக்குடன் மாறத்தக்கதாகவும் அதற்கேற்ப மேடைக் காட்சியமைப்புகளைச் செய்து வைக்கத்தக்கதாகவும் இந்நாடகம் அமைந்தது. மயான கண்டம், கோவலன் ஆகிய நாடகங்களும் இந்த வகையிலேயே அமைக்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. வைரமுத்துவுக்கு மயானகண்டம் வெற்றியளித்த அளவுக்கு இதுவும் வெற்றியளித்தது. ஆயிரக்கணக்கான மேடைகளை இந் நாடகம் கண்டது. இந்நூலாசிரியரின் கருத்துப்படி ''பக்த நந்தனார்'' சில சமயங்களில் மயான காண்டத்தையும் விஞ்சி நின்றது.

பூதத்தம்பி நாடகம் முதன் முறையாக 1966 ஆம் ஆண்டு மேடையேறியது. இந்நாடகம் வைரமுத்து வுக்கு அவ்வளவு வெற்றியளிக்கவில்லை. இதனால் சோர்வடைந்த இவர் இந்நாடகத்தை இனிமேல் மேடை யேற்றுவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். இந்நூலா சிரியர் இந்நாடகத்தின் தோல்விக்குரிய காரணத்தை ஆராய்ந்து கண்டு பிடித்து மீண்டும் மேடைமேற வைத்தார்.

*(தொடரும்)*

## வரலாற்றில் முளைக்க வாசிப்போம் - கவிஞர் நெல்லை இராமச்சந்திரன்

பூசுகின்ற வண்ணத்தால் கோலம் மின்னும்!
புதுமஞ்சள் பொலிவாய்!பொன் கன்னம் மின்னும்!
வீசுமழைக் கம்பிகளால் நிலமும் மின்னும்!
விசைப்பட்டை தீட்டலிலே வைரம் மின்னும்!
ஆசையூற்றில் காதலிக்கு இதழ்கள் மின்னும்!
அலங்கரிப்பில் கற்சிலைக்கும் அழகு மின்னும்!
ஓசையின்றி வாசித்தால் சிந்த னையில்
ஒளியேறி ஒளியேறி மூளை மின்னும்!

யாசித்தல் இழிவு!இக்க ருத்தை யள்ளி
இதயத்தில் சித்தமெனக் கொண்டோம்! கொஞ்சம்
யோசிப்பீர்! சுவாசிக்கும் உயிரின் காற்றாய்
ஒண்டமிழை உயிரோடு கலந்தோ மாநாம்?
நேசிப்பில் வடக்கிருந்தான் புலவன்! ஈழம்
நினைப்பில்!தான் தெற்கிருந்தான் திலீபன்! நாளும்
வாசிப்பி லாவது;நா மிருப்போம்! வாழ்க்கை
வளஞ்சுரக்கும் வளர்பிறைகள் கதவைத் தட்டும்!

நூல்சிக்கல் துணியாகும்! கரையை நோக்கும்
நுரைசிக்கும் கடல்கோபம் அலைகள் ஆகும்!
கால்சிக்கும் களிறுண்டு; பிறபண் பாட்டில்
கனிதமிழர் சிக்குவதா? படர்ந்து ஓங்கும்
'ஆல்'சிக்கும் விழுதுகளால்! அவைம ரத்தின்
ஆயுளுக்கே காப்பீடு! அறிவு நூல்கள்;
தாள்;சிக்கும் போதெல்லாம் வாசிப் போர்க்குத்
தனிப்புலமை சிந்தனைக்குள் பந்தி வைக்கும்!

வாசிப்பு! கதிரவனின் கதிர்கள் பாய்ந்து
வான்குடிக்கும் நீர்போல! உலக ரங்கை
யோசிக்கச் செயும்!சாவி வாசிப் பேதான்!
உண்மைக்குக் கால்முளைக்கும் வாசிப் பால்தான்!
சேமிப்பால் நாம்நிமிர்வோம்! நம்த லையைச்
சேகரித்த வாசிப்போ அவைநி மிர்த்தும்
வாசிப்போம்! வாசிப்போம் முளைக்கும் கால
வரலாற்றில் நாம்முளைக்க வாசிப் போமே!

## செஞ்சோலைச் சோகம் - வித்தகக் கவிஞர் பா. விஜய்

இந்தியா வித்தியாசமான நாடு!
உள்நாட்டுத் தொழிலாளர்களைப்
பிச்சைக்காரர்களாக்கும்!
வெளிநாட்டு முதலாளிகளைப்
பணக்காரர்கள் ஆக்கும்!

அமெரிக்கா விவரமான நாடு!
வெளிநாட்டுத் தொழிலாளர்களைப்
பிச்சைக்காரர்களாக்குகிறது!
உள்நாட்டு முதலாளிகளைப்
பணக்காரர்கள் ஆக்கும்!

இலங்கை விபரீதமான நாடு!
சவப்பெட்டிகளைத் தயாரித்துச்
சமாதானம் பேசும்!
சமாதானம் பேசிக்கொண்டே
ஏவுகணை வீசும்!

புத்தனின் போதிமரத்தில்-இன்று
செஞ்சோலைச் சிறுமிகளின்
உடல்கள் தொங்குகின்றன.

செஞ்சேலை வளாகத்தின்மேல்
குண்டு வீசிப் பறந்தது
விமானம் அல்ல
சிங்கள இராணுவத்தின்
மானம்!

ஓர் இராணுவம்
எதிரி இராணுவத்தைத் தாக்கும்!
என்றும் வேவு பார்க்கும்.

ஆனால் அறுபது சிறுமிகளை
அடையாளம் பார்த்துக் கொன்றது
ஏன்?

இலங்கை இராணுவம் தெரிந்து
வைத்திருக்கிறது
ஈழத்துச் சிறுமிகளுக்குப்
பூக்கோலமும் போடத் தெரியும்
போர்க்கோலமும் பூணத் தெரியும்

அவர்களுக்குப்
பல்லாங்குழியும் ஆடத் தெரியும்
பகைவர் தலைகளுக்குப்
பிணக்குழியும் தோண்டத் தெரியும்!

அவர்களுக்குத்
தலைவாரிப் பூச்சூடவும் தெரியும்
எதிரிகளின்
தலைசீவிப் பந்தாடவும் தெரியும்

படுகளத்தில் ஒப்பாரி ஏன்
சிலபேர் சிலிர்க்கலாம்
இது ஒப்பாரி அல்ல
இழந்த வீராங்கனைகளுக்கொரு
வீரத் தாலாட்டு!

நம் நாட்டில்
குட்டைப் பாவாடையோடு பந்தாடும்
குளுகுளு பாப்பாக்களைத்தான்
வீராங்கனைகள் என்போம்!


வீராங்கனைகள் யாரென்று
விளங்காத கூட்டம்!

நம்தமிழ் இளைஞர்கள்
வீறுகொண்டவர்கள்
செஞ்சோலையில் விழுந்த
ஏவுகணை
நமீதா வீட்டில் விழுந்திருந்தால்
இந்துமகா சமுத்திரத்தை
இங்கிருந்தே தாண்டியிருப்பார்கள்.

இருபது மைல் இடைவெளியில்
இங்குள்ள தமிழருக்கும்
ஈழத் தமிழருக்கும்
எத்துணை வித்தியாசம்?

நாம்
குண்டு துளைக்காத கூண்டில்
தயங்கியபடி நிற்கிறோம்
தேசக் கொடியேற்ற.

அவர்கள்
குண்டு துளைப்பதற்காகவே
தயாராக நிற்கிறார்கள்
தமிழ்த்தேசக் கொடியேற்ற.



# நூல்தேட்டம் : இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்கவேண்டியதொரு பெருநதி

**கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன் -**

இனங்களுக்கிடையிலே ஒற்றுமை, புரிந்துணர்வு, பரஸ்பர நல்லிணக்கம் ஆகிய எண்ணக் கருக்கள் எழுத்துகளிலும், மேடைப் பேச்சுகளிலும், இலத்திரனி யலூடாகப் போட்டிகளிலும், பெரிதாகப் பிரஸ்தாபிக்கப் பட்டு வரும் இக்காலகட்டத்தில் 'இலங்கையின் தேசிய இலக்கியம்' என்ற விசாலமான கருப்பொருள் பற்றிச் சிந்திக்க வேண்டியதன் அவசியம் இன்றைய காலத்தின் தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

இலங்கையின் தேசிய இலக்கியப் பரப்பில் எழுத்துத் துறை வளர்ச்சிக்கான இலங்கைவாழ் சிறு பான்மைச் சமூகத்தினரின் பங்களிப்பு விசாலமான தாகும். 19-ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியி லிருந்து இத்தகைய பங்களிப்பு முனைப்புடன் இடம் பெறலாயிற்று.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈழத்துச் சிறு பான்மையினரின் தமிழிலக்கியப் பாங்கினை ஆராயும் போது விசேடமாக மூன்று பிரதான விடயங்களின் உள்ளடக்கத்தினை அவதானிக்கலாம்.

சமயக் கருத்துகளை மையமாகக் கொண்ட இலக்கிய வடிவங்கள்.

சமூகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய வடிவங்கள்.

தேசிய உணர்வினை வெளிப்படுத்தக் கூடிய இலக்கிய வடிவங்கள்.

இங்குச் சமயக் கருத்துகளை மையமாகக் கொண்ட இலக்கியங்கள் என்னும்போது பிரித்தானி யரால் திணிக்கப்பட்டு வந்த மிஷனரி முறைக்கெதிராகத் தத்தமது சமயங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி, தத்தமது சமயத்தினை முதன்மைப்படுத்தி, முக்கியப்படுத்தும் வகையிலான இலக்கிய வடிவங் களை இனங்காட்டலாம்.

சமூகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் எனும்போது மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் அந்நிய நாட்டுக் கலாசாரத் தாக்கங் களினால் சீரழிவுகளை எதிர்நோக்கி வந்த தத்தமது சமூகத்தின ரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி தத்தமது சமூகத்தினரின் கலாசார முக்கியத்துவங்களையும், சமூக மரபுகளையும், விழுமியயங்களையும் முதன்மைப் படுத்துவதனூடாகச் சமூகத்தினரின் கல்வி, பொருளா தார, கலாசார எழுச்சியினைத் தூண்டத்தக்க இலக்கிய வடிவங்களைக் குறிப்பிடலாம்.

அதே போலத் தேசிய உணர்வுகளின் வெளிப் பாடு எனும்போது அடிமைத்துவ ஆட்சி முறையி லிருந்து எமது தேசம் விடுதலையாக வேண்டும் என்ற சுதந்திர வேட்கையின் வெளிப்பாடான இலக்கியங் களைச் சுட்டிக் காட்டலாம். மேற்குறிப்பிட்ட மூன்று அடிப்படைகளும் தமிழ், முஸ்லிம் இனத்தவர்களால் முன்வைக்கப்பட்ட இலக்கிய வடிவங்களில் மாத்திர மல்ல பெரும்பான்மைச் சமூகத்தினரின் சிங்கள இலக் கியங்களிலும், முச் சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட ஆங்கில இலக்கியங்களிலும் காணமுடியும். ஆனால், இலங்கையின் சிறுபான்மைச் சமூகத்தினரின் தமிழ் இலக்கியங்கள் பற்றிய பதிவுகள் முறையாகப் பேணப் படாமையினாலும் அவை ஆவணப்படுத்தப் படாமை யினாலும் இலங்கைத் தேசிய இலக்கியப் பரப்பில் தமிழ் மொழிமூல இலக்கியப் படைப்புகளினதும், படைப் பாளிகளினதும் பரிமாணம் மதிப்பீடு செய்யப்படாமலே மறைந்து போய்விடுகின்றது.

மேற்கத்திய இலக்கியங்கள், மேற்கத்திய இலக்கியவாதிகளைக்கூட எடுகோளுக்காக உள்வாங்கும் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ் இலக்கியங்கள், தமிழ் இலக்கியவாதிகள் பற்றிய ஆய்வுகள் உள்வாங்கப் படாமலிருக்கின்றன என்றால் உரிய பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமலிருப்பதும் பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ்மொழி இலக்கியங்கள்மீது ஆர்வம் காட்டப்படாமலிருப்பது, இனங்களுக்கிடையே நல்லிணக்கம், நல்லுறவு என்ற கதையாடல்களில் ஈடுபடும் இக்காலகட்டத்திற்குப் பொருத்தமானதொரு விடயம் எனக் கூறிவிட முடியாது. நல்லிணக்கம், நல்லுறவு எனும் வார்த்தைப் பதங்கள் வெளிவாரியானதல்ல. உள்ளார்ந்த உணர்வுகளுடன் சங்கமித்து உள்ளார்ந்த சிந்தனைகள் பரிமாறப்படும் போதே அப் பதங்களின் அழுத்தம் யதார்த்தம் பெறக் கூடியதாக இருக்கும். இத்தகைய உள்ளார்த்தமான சிந்தனைகளை அறிந்து கொள்ள "இலக்கியங்கள்" ஆணிவேரானவை என்றால் மிகையாகாது.

தேசிய இலக்கிய நிலைபற்றிய எண்ணக் கருவினை ஒருபுறம் வைத்துவிட்டுத் தமிழ் இலக்கியப் பரப்பினை நோக்கின் தமிழ் இலக்கியத்துக்குள்ளும் நாமே உருவாக்கிக் கொண்ட பிரதேச ரீதியான இலக்கியம், இனரீதியான இலக்கியம், சார்பு ரீதியான இலக்கியம் என்பன 'தமிழ்மொழி' எனும்போது உணர் வினை மீறிச் சுயநலமிக்க-குறுகிய போக்குமிக்கதாக மாறிவருவது வேதனைக்குரிய விடயமாகும்.

இத்தகைய நிலைப்பாடுகள் விஸ்வரூபமாக அமைவதனால் தமிழ் இலக்கியத்தில் கடந்த கால கட்டங்களில் சாதிக்கப்பட்டவை யாவை? சாதித்தவர்கள் யார்? முன்வைக்கப்பட்ட உணர்வுகள் யாவை? அவற்றின் பின்னணிகள் யாவை? என்பன புதிய தலை முறையினருக்குத் தெரியாமலே போய்விடுகின்றன.

எனவே, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தினை எந்தவிதப் பாகுபாடுமின்றி ஒருமுகப்படுத்த வேண்டிய தும், அவற்றின் பதிவுகளைத் திரட்ட வேண்டியதும், அவற்றினை ஆவணப்படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகிவிட்டது. ஏனெனில், தேசிய இலக்கிய நீரோட்டத்தில் எமது தமிழ் இலக்கியங்களின் விவரங்களையும் இணைக்க வேண்டுமானால் முதலில் தமிழ் இலக்கியத்தில் குறிப்பாக ஈழத்தில் வெளிவந்த தமிழ்நூல்கள் பற்றியும், நூலாசிரியர்கள் பற்றியும் பொது வான பதிவுகளை மேற்கொண்டு அவற்றை ஆவணப் படுத்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத் தல் வேண்டும். இந்நிலை பற்றிய உணர்வுபூர்வமான சிந்தனைகளின் வெளிப்பாடுகள் ஆயிரத்துத் தொளா யிரத்துத் தொண்ணூறுகளில் இடம்பெறுவதை அவ தானிக்கலாம்.

குறிப்பாக, இலங்கையில் முன்னணிக் கல்வி மான்களுள் ஒருவரும், சிறந்த நிருவாக சேவை உத்தி யோகத்தரும், எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்பதிவுகளைச் ''சுவடி ஆற்றுப்படை'' எனும் தலைப்பில் நான்கு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

1994-ஆம் ஆண்டில் வெளிவந்த ''சுவடி ஆற்றுப்படை'' முதலாம் தொகுதியில் 1850-1949 காலப்பகுதியில் ஒரு நூற்றாண்டுக் காலத்து 198 நூல்கள் பற்றிய தகவல்களையும், 1995-ஆம் ஆண்டில் வெளி வந்த இரண்டாம் தொகுதியில் 1950-1969 காலப் பகுதியில் இரண்டு தசாப்தகாலத்து 355 நூல்கள் பற்றிய தகவல்களையும், 1997-இல் வெளிவந்த மூன்றாம் தொகுதியில் 1970-1995 காலப்பகுதியில் வெளிவந்த 924 நூல்களைப் பற்றிய தகவல்களையும், 2001ஆம் ஆண்டில் வெளிவந்த நான்காம் தொகுதியில் 1996-2000 கால்ப்பகுதியில் வெளிவந்த 500 நூல்கள் பற்றிய தகவல்களையும் பதிவாக்கி ஆவணப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைச் ''சுவடி ஆற்றுப்படை'' நான்கு தொகுதிகளிலும் கண்டு கொள்ள முடியும். 1850 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் 1977 நூல்கள் பற்றிய விவரங்கள் எஸ்.எச்.எம். ஜெமீலின் ''சுவடி ஆற்றுப்படை''யில் பதிவாகியுள்ளன. இலக்கியப் பதிவு, இலக்கிய ஆவணப்படுத்தலில் இது ஒரு முக்கியக் கட்டமாகும்.

இதே பணியினை யாழ்ப்பாணத்தைப் பிறப் பிடமாகக் கொண்டு தற்போது புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் வசித்துவரும் திருவாளர் என். செல்வ ராஜா. அவர்களும் 21-ஆம் நூற்றாண்டில் மேற் கொண்டு வருகின்றார். ''சுவடி ஆற்றுப்படை'' இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களுடைய நூல்களை மாத்திரமே ஆவணப்படுத்தியது. ஆனால், என். செல்வராஜா அவர்களுடைய ''நூல்தேட்டம்'' ஓர் இனத்தவரை மாத்திரம் மையப்படுத்தாமல் தமிழ் எழுத்தாளர்கள், முஸ்லிம் எழுத்தாளர்கள், புலம்பெயர்ந்து சென்ற எழுத் தாளர்கள் என்ற அடிப்படையில் தமிழ்மொழி மூலமாக இலங்கையர்களால் எழுதப்பட்ட அனைத்து நூல்களை யும் ஆவணப்படுத்த முயன்றுள்ளது.

நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாரியப் பணியினைத் தனியொருவரால் மேற்கொள்ள முடியும் என்பதைச் செயலில் காட்டிச் சாதனை படைத்து வரும் மூத்த நூலகவியலாளரும், பன்னூலாசிரியரும், பிரபல எழுத்தாளரும், வானொலி, மேடைப் பேச்சாள ரும், ஆய்வாளருமான திருவாளர் என். செல்வராஜா அவர்கள் ஈழத்தவர்களின் தமிழ் நூல்களை ஆவணப் படுத்தும் பணியை 1990 இல் ஆரம்பித்து 2006 வரை ''நூல்தேட்டம்'' எனும் பெயரில் நான்கு தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் நூல்கள் என்ற அடிப்படையில் நாலாயிரம் நூல்கள் பற்றிய விவரங்களை இதுவரை பதிவாக்கி யுள்ளார். நூல்தேட்டம் முதலாம் தொகுதியில் நூலாசிரி யர் என். செல்வராஜா பின்வருமாறு தனது முன்னுரை யில் குறிப்பிட்டிருந்தார்.

''நூல்கள் ஓர் இனத்தின் பண்பாட்டை, கலாசார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பதிவு எமது வளத்தை, அறிவின் தேட்டத்தை எமது தலைமுறைக்கும், அடுத்துவரும் தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லும் வல்லமை படைத்தன. அத்தகைய ஒரு வரலாற்றுப் பதிவை, ஈழத் தமிழ்த் தேசியத்தின் அறிவுத் தேட்டத்தின் கனதியைப் பதிவாக்கமுனையும் முடிவில்லாதவொரு நீண்ட பயணத்திற்கான முதற் காலடித்தடம் இங்கே பதியப்பெறுகின்றது.''

உண்மையிலே இது ஒரு விசாலமான பணி யாகும். இதனை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை வரை யறை செய்வதனூடாகவோ அன்றேல் சில தொகுதி களை வெளியிட்டு விடுவதனூடாகவோ மாத்திரம் நிறைவேற்றிவிட முடியாது. இதனால்தான் என். செல்வ ராஜா அவர்கள் ''முடிவில்லாதவொரு நீண்ட பயண மாக...'' இதனை வருணித்துள்ளார்.

தேசிய நூல்விவரப் பட்டியல் முயற்சியென்பது இலங்கைக்குப் புதிய விடயமொன்றல்ல. இலங்கையில் ''அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டம்'' 1885ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1976-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இதன்படி இலங்கையில் அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினதும் ஐந்து பிரதிகளைப் பதிவுக்காகத் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்வாறு அனுப்பப்படும் நூல்கள் தேசிய அரும்பொருட்சாலை, பேராதனைப் பல்கலைக் கழகம், இலங்கைத் தேசிய நூலகம் ஆகியவற்றுக்கு வைப்பிற்காக வழங்கப்படும்.

1885-ஆம் ஆண்டில் 'அச்சிடுவோர், வெளி யீட்டாளர் கட்டளைச் சட்டத்தின்' கீழ் (179 ஆவது அத்தியாயம்) இலங்கையில் அச்சிடப்படும் நூல்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டுக் காலாண்டுக் கொரு முறை வர்த்தமானியின் ஐந்தாவது பிரிவாக வெளியிடப் பட வேண்டும் என நிருணயிக்கப்பட்டது. 1949இல் இலங்கை 'யுனெஸ்கோ' அமைப்பின் அங்கத்துவ நாடாகிய பின்னர் நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூற் பட்டியலின் தேவை வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாக 1952 இல் இலங்கைத் தேசிய நூல் விவரப் பட்டியலுக்கான உப ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

தேசிய நூற்பட்டியல் தொகுப்பின் முதலாவது இதழ் 1962இல் வெளி வந்தது. 1970ஆம் ஆண்டில் 17-ஆம் இலக்க சட்ட மூலத்தின் பிரகாரம் 'இலங்கைத் தேசிய நூலகச் சேவைகள் சபை' ஸ்தாபிக்கப்பட்டதையடுத்துத் தேசிய நூற்பட்டியல் இச் சபையினாலேயே வெளியிடப் பட்டது. பின்பு 1998 ஆம் ஆண்டில் 51ஆம் இலக்க சட்ட மூலத்தின் பிரகாரம் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை (National Library and Documentation Services Board) ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இச்சபை யின் அலுவலகம் கொழும்பு 07, சுதந்திர சதுக்கம், இலக்கம் 14இல் அமையப்பெற்றுள்ளது.

1986ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு ISBN இலக்கம் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் ISBN இலக் கத்தை வழங்கி வருவதும் இந்தத் தேசிய நூலக ஆவண மாக்கல் சேவைகள் சபையேயாகும். இச்சபையானது இலங்கையில் தேசிய நூற்பட்டியலைத் தயாரிக்கும் போது அச்சகங்களினால் தேசிய ஆவணக்காப்பகத் துக்கு அனுப்பப்பட்டு ஆவணக் காப்பகத்தினால் கிடைக்கும் நூல்களையும், நேரடியாகத் தனது சபை யிடம் ISBN இலக்கத்தைப் பெற்று அச்சிடப்படும் நூல் களையும் சேர்த்துக் கொள்கின்றது. ஆரம்ப கால கட்டங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளி யிடப்பட்ட தேசிய நூற்பட்டியல் தற்போது மாதம் தோறும் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தேசிய நூற்பட்டியலில் மொழி வேறுபாடின்றி மும்மொழி நூல்களுக்கும் கொள்கை யளவில் இடம் ஒதுக்கப்பட்ட போதிலும்கூடத் தமிழ் நூற்பிரிவில் ஒரு சில நூல்களே இடம்பெற்று வருகின்றன. இதற்கான காரணம்.

1. தமிழ் நூல்களை அச்சிடும் அச்சகங்கள் 'அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தினை மதித்து அச்சிடும் . நூல்களின் பிரதிகளைத் தேசிய நூலகத்திற்கு அனுப்பிவைக்காமை.

2. தமிழ் மூல எழுத்தாளர்கள், வெளியீட்டாளர் கள் ISBN இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதில் கரிசனை காட்டாமை.

3. நூற்பட்டியலைத் தயாரிக்கும் தேசிய நூலகத் தில் தமிழ் நூல்களைப் பட்டியலிடக் கூடிய ஆட்பலம் விகிதாசார அடிப்படையில் மிகவும் குறைவாகக் காணப் படுகின்றமை.

எவ்வாறாயினும் இதனால் பாதிப்படையப் போவது தமிழ் மொழிமூல எழுத்தாளர்கள்தாம் என்றால் பிழையாகாது. ஏனெனில், தமிழ் மொழிமூல நூல்கள் எதுவிதமான பதிவுகளுக்கும், ஆவணப்படுத்தல்களுக் கும் உட்படாமல் அம்முயற்சிகளும், கருத்துகளும் வெளிவந்த சுவடின்றியே மறைந்து போய்விடுகின்றன. இதனால் சமகாலத்தில் வாழ்பவர்களுக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும் இம்முயற்சிகள் பற்றித் தெரியாமல் போய்விட இடமுண்டு.

1980 களின் பின்னர்த் தமிழ் நூல்கள் மற்றுமொரு பிரச்சினையையும் எதிர் நோக்குகின்றன. அதாவது 1980களின் பின்னர்ப் பெருந் தொகையான தமிழ் எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்து உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் வாழ்ந்துவருகின்றனர். இத்தகை யோரால் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால், இவர்களின் தமிழ் மொழிமூல நூற்கள் பற்றிய பதிவுகள் சரியான முறையில் மேற் கொள்ள வாய்ப்புகள் இல்லாமலிருக்கின்றன. அண்மைக் காலமாகத் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர் களினால் பிற நாடுகளில் வெளியிடப்படும் நூல்களை யும் பதிவுக்கு உட்படுத்தும் புதிய பகுதியொன்றை ஆரம்பித்த போதிலும்கூட, நடைமுறையில் இது போதிய சாத்தியப்பாட்டினை வெளிப்படுத்தவில்லை.

எனவே, ஈழத்துத் தமிழ்மொழி நூல்களின் பதிவு என்பது காலத்தின் அவசியத் தேவையாகும், அதே போல அவசரத் தேவையுமாகும். இந்நிலையை நன்கு உணர்ந்திருந்த, தமிழ் இலக்கியப் பதிவுகள் பாது காக்கப்பட வேண்டும் என்ற உயர் இலட்சியத்தைக் கொண்ட சிரேஷ்ட நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் சுமார் 5000 ஸ்ரேலின் பவுண்களைத் தனது சொந்தப் பணத்தில் செல விட்டு இதுவரை எழுதி வெளியிட்டுள்ள நான்கு தொகுதிகள் பற்றியும் சுருக்கமாக அவதானிப்போம். தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற ஈழத்துத் தமிழ்நூல்கள் பற்றிய குறிப்புரையுடனான நூல் விவரப்பட்டியலான நூல்தேட்டம் முதலாவது தொகுதி யின் முதற் பதிப்பு 2002 ஜூன் மாதத்தில் அயோத்தி நூலகச் சேவைகள் நிறுவனத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையினால் இலண்டன் வாசன் அச்சகத்தில் அச்சிடப் பட்டு, 356 பக்கங்களைக்கொண்டு வெளிவந்தது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-0-3. விலை இலங்கையில் ரூபாய் 600.00. பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும்.

நூல்தேட்டம் தொகுதி 2 இன் முதலாம் பதிப்பு 2004 ஜூன் மாதத்தில் அயோத்தி நூலகச் சேவைகள் வெளியீடாகக் கொழும்பு ரெக்னோ பிரிண்ட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 484 பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-1-1. விலை இலங்கையில் ரூபாய் 600.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும்.

நூல் தேட்டம் தொகுதி 3 முதலாம் பதிப்பு 2005 ஆகஸ்டு மாதத்தில் அயோத்தி நூலகச் சேவைகள் வெளியீடாகக் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப் பட்டு, 546 பக்கங்களைக் கொண்டு வெளி வந்தது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-2-ஙீ. விலை இலங்கையில் ரூபாய் 900.00, பிரித்தானியா வில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும்.

நூல்தேட்டம் தொகுதி 4 முதலாம் பதிப்பு 2006 செப்டெம்பர் மாதத்தில் ஐக்கிய இராச்சிய, அயோத்தி நூலகச் சேவைகள் வெளியீடாகக் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, தற்போது வெளிவந்துள்ளது. இந்நூலின் ISBN இலக்கம் 0-954-9440-3-8 விலை இலங்கையில் ரூபாய் 900.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும்.

திரு. என். செல்வராஜா அவர்களின் நூல்தேட்டம் தொகுப்பிற்கான சர்வதேச தராதர நூற்றொடர் இலக்கம், International Standard Serial Number (ISSN) 1477-4690 என்பதாகும். *(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)* ❋

# அருள்மிகு அன்னை இராஜ காளியம்மன் ஆலயம் யுனெஸ்கோ விருது பெற்றது



மலேசியாவின் ஜொகூர்பாரு நகரில் அமைந்துள்ள அருள்மிகு அன்னை இராஜ காளியம்மன் ஆலயம் யுனெஸ்கோ மன்றத்தால் விருதுச் சான்றிதழ் வழங்கப் பட்டு உலக அம்மன் திருக்கோவில்கள் ஒன்றியத்தில் இணைக்கப்பட்டது.

புரவலர் டத்தோ எம். பசுபதி அவர்களின் அங்கீகாரக் கையொப்பத்துடன் பல்லாயிரம் பக்த கோடிகள் முன்னிலையில் யுனெஸ்கோ அங்கீகாரம் வழங்கப் பட்டது.

1959ஆம் ஆண்டு நிறுவப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது சொந்த ஆலயத்தை சுயேட்சையாக அமைத்தது. திராவிட முன்னேறக் கழகத்தார்கள் இந்து சமய வழிபாடு அத்யாவசியம் என்பதை உணர்ந்து உறுப்பினர்களுக்கு ஆலயம் அமைத்தபோது இஸ்லாமிய மார்க்க அரசனான ஜொகூர் சுல்தான் இந்து ஆலயம் உருவாகிட நிலம் வழங்கி இந்து சமய மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருந்தார் என்பது மலேசிய வரலாற்றில் எழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று என்றால் அஃது மிகையாகாது. 1957 மலாயா பிரிட்டானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலம். மலாயா சுதந்திரம் பெறுவதற்கு தென்தீபகாப்பமான ஜொகூர் மாகாணத்தின் திராவிட முன்னேற்றக் கழகம் அரும்பாடுபட்டுள்ளது என்பதை மலேசிய தமிழர் வரலாறு நினைவுபடுத்துகின்றது.

தென்னிந்திய வழித்தோன்றல்களான திராவிடர்கள் பரமேஸ்வரன் அரச ஆட்சிக்காலத்திலிருந்தே 14ஆம் நூற்றாண்டு அரண்மனை வளாகத்து ஆளுமை மாந்தர்களாக இருந்துள்ளனர் என்பதைச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.

திரவியம் தேடும் திராவிடர்கள் பல கூறுகளாகச் சிதறுண்டு வாழ்ந்தாலும் ஆதியில் வாழ வந்தவர்களாகவும் ஆளவந்தவர்களாகவும் இருந்தவர்களே! ஆட்சிப் பீட மையத்தின் முன்னோடிகளின் பரம்பரையினரோடு தற்போது தமது ஆளுமை ஆட்சியை நிலைநிறுத்தி ஆண்டு வருகின்றனர். அருள்மிகு அன்னை இராஜ காளியம்மன் ஆலயத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளரும் சமய முன்னோடியுமான தன்னம்பிக்கை சின்னசாமி அவர்களின் வழித்தோன்றல் தனயனார் குரு பகவான் சித்தர் அவர்கள் தற்போது அருள்மிகு அன்னை இராஜகாளியம்மன் ஆலயத்தின் தலைவராகவும் ஞான யுத்தம் சமய சமூகக் குழுவின் இயக்குநராகவும் இருந்து சமய சமூகச் சேவைகள் செய்து இந்து மக்களை வழி நடத்தி வருகிறார்.

மேலும் ''ஞான யுத்தம்'' செயற்குழுவினர்களான தலைவர் குரு பகவான் சித்தர், உதவித் தலைவர் தேவதாஸ், செயலர் கவிதா, பொருளாளர் விமலா, உறுப்பினர்கள் துரை, சுபரா, சைமன், வள்ளி, ஆர். சித்ரா, மல்லிகா, பி. சித்திரா, இலகா ஆகியோர் கொண்ட செயற்படை அடித்தளமாக விளங்குகின்றது. அருள்மிகு அன்னை இராஜகாளியம்மன் ஆலய வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் என்றால் அது மிகையாகாது.

இவர்கள், வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஜொகூர் பாரு சுற்று வட்டாரங்களில் இருந்து இந்து இளைஞர்கள் யுவதிகளை வாடகை வாகனங்கள் மூலம் அழைத்து வந்து, அவர்களுக்கு ஆலய வளாகத்தில் கல்வியையும் கல்விசார்ந்த சமய வகுப்புகளையும் பெரும் பொருட்செலவில் அளித்து வருவது பாராட்டுக் குரியதே.

ஆலயத்திற்காக இந்துக் கல்லூரியை ஆலய வளாக நிலத்தில் கட்டடம் கட்டியெழுப்ப ஆவல் கொண்டுள்ளனர். அதற்காகப் பக்கத்தில் அமைந்துள்ள சீனரின் நிலத்தை ஆலயத்திற்குச் சொந்தமாக்கிட முயற்சித்து வருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமான ''நந்தனார் தமிழ்ப் பாடசாலை'' இழந்ததை வருத்தத்துடன் நினைவுகூர்ந்த குரு மகான் சித்தர் அவர்கள் மீண்டும் ''நந்தனார் தமிழ்ப் பள்ளி''யை உயிர்ப்பிக்க வேண்டும் என்றார். இவரின் சமய தமிழ்ப்பள்ளி இலண்டனில் இயங்குவதைப் போல இது அமைய வேண்டும் என்பது அவரது விழைவு.

நந்தனார் தமிழ்ப் பாடசாலை உலகத் தமிழர்களின் ஆதரவாலும் உதவியாலும் நனவாக வேண்டும். அஃது ''அனைத்துலக நந்தனார் தமிழ்ப் பள்ளி''யாக மிளிரவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அருள்மிகு அன்னை இராஜ காளியம்மன் ஆலயம், ஞான யுத்தம் சேவைக்குழு, இந்துக் கல்லூரி, நந்தனார் பாடசாலை ஆகியன யுனெஸ்கோ மன்றத்தின் நேரடி பார்வை இருப்பதனால் அகில உலகத் தமிழர்களுக்கு நன்மைகள் பயக்கும்.

*

– துவான் திமோதி, மலேசியா

# இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து

# தமிழ் இயக்கம் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம்

இலங்கையில் தமிழர் இனப் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்துத் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் சென்னையில் வள்ளுவர் கோட்டத்தின் முன் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, கவிப்பேரரசு வைரமுத்து, தமிழக முதல்வர் மு. கருணாநிதியின் மகள் கனிமொழி முதலானோர் கலந்து கொண்டனர்.

கவிஞர் வைரமுத்து உண்ணாவிரதத்தைத் தொடங்கிவைத்து உரையாற்றியதன் சுருக்கம் :

எழுத்தாளர்கள், கவிஞர்கள் வெறும் கனவு காண்பவர்கள் மட்டுமல்லர். தமிழர்கள் வேதனைப் பட்டால் அவர்களுக்காக நாங்களும் வேதனை படுவோம். இந்த உண்ணாவிரத போராட்டத்தை நான் தொடங்கி வைப்பதாக அறிவித்தார்கள். உண்மையில் நான் தொடங்கி வைக்கவில்லை.

5-6-1956ஆம் ஆண்டு இலங்கை பாராளு மன்றம் முன்பு ஈழத் தமிழர்கள் உண்ணாவிரதம் தொடங்கினார்கள். இலங்கையில் சிங்களம் ஆட்சி மொழி என்பதைக் கண்டித்து அப்போது போராட் டத்தைத் தொடங்கினார்கள். ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அவர்களின் தாய்மொழியை முதலில் அழியுங்கள் என்பார்கள். அதுபோல்தான் தமிழின படுகொலை முதலில் தாய்மொழி தமிழ் மீது தொடங்கியது.

1956-இல் தொடங்கிய போராட்டம் அன்று முதல் இன்று வரை அரை நூற்றாண்டுக் காலமாக எண்ணற்ற போராட்டங்கள் சிங்கள அரசுக்கு எதிராக நடந்து இருக்கின்றன. அதில் இந்தப் போராட்டமும் ஒன்று, இதை நான், தொடங்கி வைக்கவில்லை. யாழ்ப்பாணம் வாகரையில் தமிழர்கள் பட்டினியால் மடிகிறார்கள் என்று சிங்கள அரசே அறிவித்துள்ளது.

இலங்கையில் ரத்த கம்பளத்தில் நடக்கும் ராஜ பக்சே இந்தியா வந்துள்ளார். அவருக்கு ரத்தின கம்பள வரவேற்பு அளிக்கப்படுகிறது. இந்திய அரசைக் கேட்கிறேன். இது நியாயமா? இலங்கை அரசின் தலைவர் என்ற முறையில் ராஜபக்சேக்கு மரியாதை தரலாம். ஆனால், அந்தப் பதவிக்குரிய வேலையை அவர் செய்கிறாரா? செய்யவில்லையே? எனவே தான் கண்டிக்கிறோம்.

இதுவரை 18,412 மாவீரர்கள் கொல்லப்பட்டு இருப்பதாகத் தமிழ் ஈழ போராட்டத் தலைவர் பிரபா கரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் மாவீரர்கள் கல்லறை மீது புல்டோசர்கள் வைத்து உழுகிறார்கள். கல்லறையில் புதைக்கப்படும் தமிழர்களின் சடலங்களை மீண்டும் தூக்கில் தொங்கவிடுகிறார்கள். கல்லறையில் புதைக்கப்பட்டுள்ள மாவீரர்கள் விதைக்கப்பட்டுள்ளார் கள். தமிழினத்தை யாராலும் அழிக்க முடியாது.

இந்தப் போராட்டத்தைத் தொடங்கி வைத்ததற் காக ரத்தக் கண்ணீர் வடிக்கிறேன். ஈழத்தில் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும். யாழ்ப் பாண நெடுஞ்சாலையைத் திறந்து விடவேண்டும். இலங்கை அரசிடம் கேள்வி கேட்கிறேன். அங்கு நடப்பது யுத்தமா? அல்லது இனப்படுகொலையா? எம்.பி.க்கள், எழுத்தாளர்கள், அப்பாவிகள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இந்தச் சம்பவங்களுக்கு எந்த எப்.ஐ.ஆரும் இல்லை. அதுபற்றிக் கேட்டால் அடையாளம் தெரியாத துப்பாக்கியாளர்கள் கொல்லப் பட்டதாக அரசு சொல்கிறது. அந்தத் துப்பாக்கியாளர்கள் யார்? அவர்களுக்குத் துப்பாக்கி கொடுத்தது யார்? இதற்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

வாடுகின்ற தமிழர்களில் ஈழத் தமிழர்களுக்காக முதல் குரல் கொடுத்தவர் கலைஞர்தாம். அவர் அரசின் இறையாண்மைக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட்டு வருகிறார். பூனை வாயில் சிக்கிய மீன் குழம்பாகாது. அதுபோல் இந்தியா வழங்கும் நிவாரணப் பொருள் களைச் சிங்கள அரசிடம் கொடுத்தால் தமிழர்களிடம் செல்லாது. ராஜபக்சேவின் பசப்பு வார்த்தைகளை நம்பி இந்தியா ஏமாந்துவிட வேண்டாம். தமிழர்கள் பாது காப்புடன் வாழ உடனடி நடவடிக்கை தேவை. மடிந்து வரும் தமிழர்களைக் காக்கத் தனித்தமிழ் ஈழம் கிடைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கவிஞர் கனிமொழி பேசியதாவது:

அரசியல் கட்சிகள்தாம் சமுதாயம் பிரச்சினைக்கு போராட வேண்டும் என்பதல்ல. சமுதாயத்தின் மனச் சாட்சிகளாக விளங்கும் எழுத்தாளர்கள், படைப்பாளிகள், சிந்தனையாளர்கள், கவிஞர்களும் போராட வேண்டும். எனது இனம், எனது சமுதாயம் ஒதுக்கப்படும்போது நான் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. அப்படிப்பட்ட வாழ்க்கை தேவையில்லை.

இலங்கையில் அரை நூற்றாண்டாகத் தமிழினம் அழிக்கப்பட்டுவருகிறது. அதைப்பார்த்து நாம் ஏன் பயந்து கொண்டிருக்கவேண்டும்.

ஜனநாயக நாட்டில் மக்களைப் பாதுகாப்பது அரசின் கடமை. ஆனால் இலங்கை அரசு வன்முறை யைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதைக் கண்டித்துதான் இந்தப் போராட்டம்.

இவ்வாறு அவர் கூறினார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ரவிக்குமார் எம்.எல்.ஏ., கவிஞர் அறிவுமதி, ஞானக்கூத்தன், தயாரிப் பாளர் சங்கத் தலைவர் இராமநாராயணன், விஜயா தாயன்பன், முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி, நடிகை ஸ்ரீப்ரியா, சேப்பாக்கம் வி.சி. மணி, கவிஞர் நெல்லை இராமச்சந்திரன், கிருஷ்ணகாந்த் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

நடிகர் சத்யராஜ் போராட்டத்திற்கு நேரில் வந்து வாழ்த்துத் தெரிவித்தார். மாலையில் திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் வெளியிடப் பட்ட கோரிக்கை வருமாறு:-

1. யாழ்ப்பாண நெடுஞ்சாலையை உடனே திறக்க வேண்டும். 2. தமிழர்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும். 3. இந்தியா வழங்கும் உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும். 4. தமிழர்கள் மீதான தாக்குதலை உடனே நிறுத்த இலங்கை அதிகாரியிடம் பிரதமர் வலியுறுத்த வேண்டும். 5. இலங்கை அரசோடு எந்த இராணுவ ஒப்பந்தமும் செய்யக் கூடாது. *

# MARKANDAN & UDDIN SOLICITORS

## Solicitors and Administrators for Oaths

M. Markandan LLB  A. Uddin LLB (Hons.) Mallam Phd-RFI

+ குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
+ விவாக விண்ணப்பங்கள்
+ அகதி விண்ணப்பங்கள்
+ 14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிட தகைமை விண்ணப்பங்கள்
+ பிரித்தானிய பிரஜாவுரிமை
+ வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்
+ விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் No Win - No Fee அடிப்படையில்
+ பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்பந்தமான ஆலோசனைகள்
+ ஒப்பந்தத் தகராறுகள்
+ நுகர்வோர் பிரச்சினைகள்
+ உறுதி தயாரித்தல்
+ திவால் நிலைமைச் சிக்கல்கள்
+ மதுபான அனுமதிகள்

*01-02-2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானியா அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரிய விருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.*

**Markandan & Uddin Solicitors**

*Tamil House, 720, Romford Road,*
*London E12 6BT*
*Tel : 0208 5148300 / 07830285 634*
*Fax : 0208 5148381*
*E-mail : info@mssolicitors.com*

**Markandan has Returned to Thamil House**

**Last Will, Power of Attorney, Sponsorship Declarations**

*We Specialise in*

- *For all your needs in Immigration (All aspects upto House of Lords)*
- *Commercial & Residential conveyancing*
- *Employment*
- *Civil Litigation*
- *Bankruptcy Problems*
- *Consumer Problems*
- *Last Will*
- *Power of Attorney*
- *Sponsorship Declarations*
- *HSMP, Work Permits.*

***Most of the Asian Languages spoken***

**Contact**

| | |
|---|---|
| M Markandan | 07956 386 576 |
| Uddin | 07957 455 670 |
| Kurup | 07748 764 079 |
| Gilbert | 07946 318 470 |
| Mahendran | 07881 650 472 |
| Mathu | 07830 285 634 |
| Jasokumar | 07961 996 482 |
| Song | 07952 769 656 |
| Shiyam | 07793 134 335 |
| Vaishali | 07946 444 902 |

- ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
- எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
- வீடு தேடி வந்து ஆலோசனைகள் வழங்கவும் தயாராக உள்ளோம்.
- வார இறுதி ஆலோசனைகளுக்கான வசதிகளும் ஒழுங்குபடுத்தித் தரப்படும்.

# ஆலயங்கள், பொது இயக்கங்கள் வறுமையில் உள்ளவர்களுக்கு உதவ முன்வர வேண்டும்

## ஆலயத் தலைவர் சுப்பிரமணியம் வலியுறுத்தல்

பண்டிகைக் காலங்களில் வசதி குறைந்த நிலையில் இருக்கும் இந்தியக் குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வர வேண்டும் என்று ஆலயங்கள், பொது இயக்கங்களின் பொறுப்பாளர்களைப் பாயா பெசார் கருமாரியம்மன் ஆலயத்தின் தலைவர் எம். சுப்பிரமணியம் கேட்டுக்கொண்டார்.

இருக்கின்றவர்கள் இல்லாதவர்களுக்கு உதவுவது என்பதை நாம் மரபாகக் கொண்டுள்ளோம். அந்த அடிப்படையில் அவர்களின் சூழ்நிலை அறிந்து, இயன்ற வரை உதவ முன்வர வேண்டும் என்றார் அவர்.

பாயா பெசார் கருமாரியம்மன் ஆலய மண்டபத்தில் ஆலயத்தின் ஏற்பாட்டில் பாயா பெசார் வட்டாரத்தில் மக்களுக்குத் தீபாவளி அன்பளிப்பு வழங்கும் நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் கூறுகையில் நம் குடும்பத்தில் சில கசப்பான சம்பவங்கள் நடந்து குடும்பம் பிரிந்திருக்கலாம். இது போன்ற நன்னாளில் அனைவரும் கசப்பான சம்பவங்களை மறந்து மீண்டும் ஒன்று கூடி இத் தீபாவளியைக் கொண்டாட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பாயா பெசார் கருமாரியம்மன் ஆலயத்தின் தலைவர் எம். சுப்பிரமணியம் தலைமையில் இந்த அன்பளிப்பு பொட்டலங்களை பாயா பெசார் பசாராயா ஷான் உரிமையாளரின் மகன் என். சண்முகம் எடுத்து வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஆலயத் துணைத் தலைவர் அ. சதாசிவம், செயலாளர் சீ. சத்தியசீலன், இளைஞர் பகுதித் தலைவர் பாஸ்கரன் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

கே.ஆர். மூர்த்தி

---

# கூலிம் நகர் மீபோ (MIBO) தலைவரின் தீபாவளி அன்பளிப்புப் பை

வர்த்தகப் பெருமானாரும் தமிழ் நெஞ்சரும் பொதுச் சேவைப் பணியாளரும் சமயத் தொண்டருமான தமிழ்த் திரு இரமேஷ் நலாசலம் அவர்கள் மலேசியத் தீபத் திருநாள் காலத்தை முன்னிட்டு இந்து மக்களுக்கும் இந்து அல்லாத பொது மக்களுக்கும் தமது ''அருவி கம்லக்ஸ்'' நிறுவனத்தின் வாயிலாகப் ''பண அன்பளிப்புப் பை'' வழங்கினார். ஏறக்குறைய 50 ஆயிரம் பைகளை இவ்வாண்டு அரசு விழாவான தீபாவளித் திருநாளை முன்னிட்டு ''அருவி'' நிறுவன உரிமையாளர் திரு. இரமேஷ் அவர்கள் வழங்கினார். கடாரம் கொண்டான் பிராந்தியம் மட்டுமின்றித் தீபகர்ப்ப மலேசியா முழுமையும் அருவியின் பண அன்பளிப்புப் பைகள் விநியோகிக்கப்பட்டன. இந்துத் தமிழர்களுக்கு மட்டுமின்றி மலாய்க்காரர்கள், சீனர்கள் போன்றோர்களுக்கும் அன்பளிப்புப் பைகள் நாடு முழுவதும் கொடுக்கப்பட்டன. மேலும் மலேசிய இந்திய வணிகர்கள் சங்கத்தின் Malaysia Indian Owners (MIBO) தேசியத் தலைவர் வர்த்தகப் பெருந்தகை டத்தோ எம். பசுபதி அவர்களும் கூலிம் மீபோ தலைவருடன் தீபாவளி 2006 ஐ மிகவும் விமர்சையான விழாக் கோலத்துடன் கொண்டாடினர்.

Timothy Mat Janggut (Tamil world)

---

# யுனெஸ்கோவில் இணைந்த இந்து ஆலயங்களின் தலைவர்கள் பஞ்சாயத்துத் தருமகர்த்தாவாக நியமனம்

குடும்பச் சச்சரவுகளையும் புரிந்துணர்வுமின்மையையும் மேலும் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரியாமலேயே திருட்டுத்தனமாக மதம் மாறிக் கொள்வதையும் கருத்தில் கொண்டு இந்து பக்தர்களைக் காப்பாற்றும் நோக்கிலும், நியாயம் தருமம் ஆகியவற்றைக் கூடிப் பேசிக் கலந்து உரையாடவும், குடும்பப் பிரச்சினைகளுக்குக் கோவிலில் தீர்வு காண்பதற்காகவும் இந்திய நாட்டுப் பஞ்சாயத்து முறையை மலேசியா நாட்டு இந்து ஆலயங்களின் வாயிலாக இந்துக்களைப் பாதுகாப்பதற்காகக் கோவில் தலைவர்களை ஆலயங்களில் பஞ்சாயத்துத் தருமகர்த்தாக்களாக மாற்றும் நிலையை எட்ட யுனெஸ்கோ மன்றம் முற்பட்டுள்ளது. பெரும்பாலோரின் வேண்டுகோளுக்கு இணங்க இம் முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனத் ஈழ வேங்கையனார் தமது யுனெஸ்கோ மன்ற அறிக்கையில் கூறியுள்ளார். மேல் விவரங்களுக்கு ஆலயங்கள் அழைக்கப்படுகின்றன.

Indhu Neethi Mandram System Panchayathu,
C/o. Ulaga Amman Thirukkovilgal Ondriyam
Email : rescue 247 tamilworld@yahoo.com

மலேசியப் பிரதமர் தம்பதியரின்

## வானுயர்ந்த வரைபட ஓவியம்

தலைநகர் கோலாலம்பூரின் செந்தூல் பகுதியின் அமைந்துள்ள வசந்தம் ஸ்டுடியோவின் முகப்பில் 27 அடி உயரமும் 15 அடி அகலமும் கொண்ட வானு யர்ந்த வண்ணமிகு வரைபட ஓவியம் அண்மையில் காட்சிக்கு வைக்கப்பட்டது. இதுவரை மலேசியத்தில் பிரமிக்கும் வகையில் இப்படியொரு மாபெரும் வண்ண ஓவியம் உருவாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டதில்லை.

நாட்டின் பிரபல ஓவியர் ராஜாவின் கை வண்ணத்தில் உருவான இவ்வானுயர்ந்த ஓவியம் தமிழர் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு வாணிபப் பயனீட்டாளர் துறை துணை அமைச்சர் மாண்புமிகு டத்தோ வீரசிங்கம் அவர்களால் அதிகாரப்பூர்வமாகத் திறப்பு விழா கண்ட இவ்விழாவிற்கு மேலும் சிறப்பு விருந்தினர் களாக மனித உரிமைக் கழக உறுப்பினர் டத்தோ சிவசுப்ர மணியம், தமிழ் இளைஞர் மணி மன்ற பேரவைத் தலைவர் மணிமிகு பொன்னையா, வீரமிகு கராத்தே பொன்னையா, அனைத்துலகப் பரத நாட்டிய மன்றத் தலைவர் பரதச்செம்மல் பரதஈழவாணன், யுனெஸ்கோ மன்ற தொடர்புத் துறை அதிகாரி திலக ஈழ ராணி போன்றோர் சிறப்பு வருகை புரிந்தனர்.

ஏறக்குறைய மலேசிய வெள்ளி 7 ஆயிரம் செலவில் தீட்டப்பட்ட வண்ண வானுயர்ந்த வரைப் பட ஓவியம் இதுவரை மலேசியாவில் எவரும் செய்திராத சாதனையாகக் கருதப்படுகிறது.

யுனெஸ்கோ மன்றமும் பெட்டாலிங் சரஸ்வதி தமிழ்ப் பள்ளியின் முன்னாள் மாண வர் சங்கத்தின் அமைப்புத் தலை வர் தளபதி இராஜ இளங்கோ அவர் களும் ஒருங் கிணைந்த ஏற்பாட் டில் உருவானது பிரதமர் தம்பதி யரின் வானுயர்ந்த வண்ண வரை படம் ஓவியம்.



செய்தி, படம்:
திமோதி மாட் ஜங்குட், மலேசியா.



# கொடை மனது இரு இமயம்

கவிஞர் நெல்லை இராமச்சந்திரன்

வான் உயரம்! கோபுரங்கள் கோவில் கொண்ட
வடிவமைப்பில் தான் உயரம்! தாவும் போது
மான் உயரம்! மலை உயரம்! மண்ணைத் தேடி
மடிகின்ற மலையருவி உயரம்! கொள்கை
தான் உயரம்! குணமுயரம்! குறட்பா போன்றே
தாங்கிவரும் விருந்தோம்பல் உயரம்! ஆட்சிக்
கோன்உயரம் குளிர்டத்தோ சாமி வேலர்
கொடை மனதோ இருஇமய உயரம் ஆமாம்!

ஏழுவள்ளல் என்பார்கள்! அவர்கள் ஒன்றி
எழுந்துவந்த பேருருவம் இவரே! ஞாலம்
வாழுகின்ற தமிழினத்தார் நெஞ்ச மெல்லாம்
வாழ்ந்துவரும் தமிழ்த்தேக்கு! தமிழ்த்தாய் ஈன்ற
வேழநிகர்த் தமிழ்மறவன்! கவிதை தோறும்
வேர்ப்பலாவைப் பந்திவைப்பான்! தமிழ்ப்பகையை
ஆழமிட்டு மண்மூடும் பரணிப் பாட்டு!
அறத்துப்பால் இவன்குடித்த தாய்ப்பா லாகும்!

தமிழகத்து எழுத்தாளன் சட்டைப் பையைத்
தங்கத்தால் இவன்நிரப்பி அழகு பார்ப்பான்!
'இமி'யளவும் பொச்சரிப்பு, பொறாமை இல்லா
இலக்கணத்து தமிழன் யார்? இவர்மட் டும்தான்!
தமிழூற்றுத் தமிழுணர்வால் தமிழ்இ னத்தைக்
குளிப்பாட்டி மகிழ்ந்திடுவான்! புகழைக் கண்டு
அமிழாத தமிழ்த்தோணி! பூமிப் பந்தில்
அருந்தமிழர் கைக்கிவரோ தங்கத் தோணி

திட்டமிடும் திறத்தினிலே கரிகா லன்நீ!
தினம்எழும்பும் சூரியனின் பணிந்தொ டர்!நீ!
கட்டடத்தின் கலைநுணுக்க வித்த கன்நீ!
கடல்பாலம் கண்டெடுத்த மாமே தைநீ!
பட்டுடுத்திப் பார்க்கின்ற அழகுப் பெண்போல்
பாதைசாலை அலங்கரிக்கும் அற்பு தம்நீ!
தொட்டுவிட முடியாத புகழின் உச்சி
தொட்டெழுந்த கடாரத்தை வென்ற வன்நீ!

நாடுநாடாய்த் தமிழர்நாம் குடியி ருந்தும்
நாடிலையே தமிழருக்காய் இந்த ஏக்க
மேடு!இன்று மலையாக வளர்ந்த பின்பும்
மீளாமல் கிடக்கின்றோம் பள்ளத் தாக்கில்!
'நாடு' என நமக்குண்டா? உண்டு! என்ற
நம்பிக்கை சுடரொளிதான்! எந்த நாட்டில்
ஆடு, புலி போர்க்களத்தில் புலிகள் தோற்கும்?
அரும்டத்தோ அரவணைப்பில் தமிழர் மீள்வார்!

# இதோ ஒரு சாதனைத் தமிழர்

**உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன், தமிழகப் பிரதிநிதி, இலண்டன் சுடரொளி.**

**கடற்குட்டம் போழ்வார் கவலர் படைக்குட்டம்**
**பாய்மா உடையான் உடைக்கிற்குந்-தோமில்**
**தவக்குட்டந் தன்னுடையான் நீந்தும் அவைக்குட்டம்**
**கற்றான் கடந்து விடும்.**

நான்மணிக்கடிகையின் இந்த நான்கு வரிகளுக்கு என்றும் இலக்கணமாகத் திகழ்ப்பவர் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவும், மலேசிய இந்திய காங்கிரசுக் கட்சியின் தேசியத் தலைவராகவும், பொதுப் பணித்துறை அமைச்சராகவும் புகழ்பெற்று விளங்குகின்ற டத்தோ ஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு அவர்கள் ஆவார்.

மரக்கலம் செலுத்தும் பயிற்சியுடையவன் ஆழமான கடலின் நீரையும் பிளந்து கடப்பான், வலிமையானக் குதிரைப்படையைக் கொண்டவன் பகைவரது படையென்னும் ஆழ்கடலின் கரையையும் உடைப்பான். சிறந்த தற்காப்புக் கொண்டவன் 'தவக்கடலையும்' கற்றவன் 'அவை'க் கடலையும் எளிதில் கடந்து வெற்றி பெறுவான், என நான்மணிக் கடிகை கூறுகிறது. மதிப்பிற்குரிய 'டத்தோஸ்ரீ' அவர்கள், எந்தக் கடலையும் எளிதாகக் கடந்து வெற்றி வாகை சூடுகிறார். மலாயர், சீனர், தமிழர், மூவினத்தவருக்கும், இவர் முளைத்தெழுந்த சந்தனமாகவே மணக்கிறார்.

புத்தனும், வள்ளலாரும், ஏசுவும் வழங்கிய போதனைகளைத் தாங்கிய ஒரு பேருள்ளம் எப்படி இருக்கும்? யோசித்துப் பார்த்தேன். டத்தோ ஸ்ரீ சாமிவேலு தான் என் மனத்தில் தோன்றினார்.

ஆம் அப்படியே அன்பினையும் இரக்கத்தையும், நீந்த விடும் சிரிப்பு! அகலாத மின்னல் போன்று கருணை ஒளியைக் கொட்டும் கண்கள்! தெரிந்தவரோ, தெரியாதவரோ, நலமா? எனக்கேட்கும் நாகரீகத்தை நடவு செய்யும் பண்பு! இவை இவரின் இயல்புக் குடியிருப்பு.

1987 இல் மலேசியாவில் ஆறாவது 'உலகத் தமிழ்' ஆராய்ச்சி மாநாடு! உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மலேசியா கிளையும், மலாயா பல்கலைக் கழகமும், உலகத் தமிழர் மாமன்றமும் இணைந்து நடத்திய மாநாடு அது! அந்த மாநாட்டின் பயண ஏற்பாட்டுக் குழு உறுப்பினர் பொறுப்பு வகித்த நான் முதன் முதலாக அப்போதுதான் திரு. டத்தோ அவர்களைச் சந்தித்தேன். புறநானூறு காட்டும் வீரத் தமிழனாகவும் வள்ளுவம் காட்டும் வாழ்வியல் இலக்கணத் தமிழனாகவும் நீதி நூல்கள் சித்தரிக்கும் நெறித் தமிழனாகவும் அவரை அன்றே கண்டு கொண்டேன். அதற்குப் பிறகு நான் மலேசியா செல்லும்போது அங்கும், அவர் சென்னைக்கு வரும்பொழுது இங்கும் அவரைப் பல முறை சந்தித்து உரையாடியதுண்டு. உலகத் தமிழர் மையத்தின் மலேசியக் கிளையை அதிகாரபூர்வமாகத் தொடக்கி வைத்ததோடு, மையத்தின் தலைமைக் காப்பாளராகவும் திகழ்ந்து, மையத்தின் பணிகளை ஆற்றுப் படுத்தி வருபவரும் அவரே.

சமீபத்தில் சென்னை அழகப்பா மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் 25 பேரும், ஆசிரியைகள் 10 பேரும் என் தலைமையில், சிங்கப்பூருக்குக் கல்விச் சுற்றுலா செல்லும் வாய்ப்பைச் சிங்கப்பூரிலுள்ள நியூ டவுன் தொடக்கப் பள்ளி தந்தது. அப்போது டத்தோஸ்ரீ அவர்களைத் தொடர்பு கொண்டேன். இந்தக் குழுவினரை அப்படியே மலேசியா சுற்றுலாவுக்கும் ஏற்பாடு செய்ய முடியுமா? எனக் கேட்டேன். உடனடியாக எந்தத் தயக்கமும் இன்றி இக்குழுவினர் மூன்று நாட்கள் கோலாலம்பூரில் பயணம் மேற்கொள்வதற்கான அனைத்து வசதிகளையும் தம் செலவிலேயே ஒழுங்கமைத்துத் தர ஒப்புதல் அளித்த உயர்ந்த கொடை உள்ளத்துக்குச் சொந்தக்காரர் அவர்.

உலகத் தமிழினத்தின் உந்துசக்தியாகத் திகழ்கின்ற டத்தோஸ்ரீ என்னும் இப்பெருந்தகை தமிழுக்கும் தமிழினத்துக்கும் கிடைத்த நறுந்தொகை.

இலண்டன் சுடரொளி இதழின் தமிழகப் பிரதிநிதியாகவும் கடமை ஆற்றுகிற நான் கடந்த செப்டம்பர் திங்களில் மலேசியா சென்றிருந்த போது சுடரொளி இதழை அவரிடம் தந்தேன். புரட்டிப் பார்த்து பூரித்துப் போனார். அந்தக் காட்சிதான் அட்டைப் படமாக காட்சியளிக்கிறது. ''பிரபாகரனுடன் ஒரு நாள்'' என்ற இயக்குநர் இமயம் பாரதிராஜா எழுதியிருந்த கட்டுரையைப் படித்துவிட்டுச் சுடரொளியின் பணிகளைப் பாராட்டினார். சுடரொளியின் வெற்றியில் அவரின் ஆர்வம் அளவிட முடியாதது.

உலகத் தமிழினம் மேலும் வளர இந்த உன்னதத் தமிழன் உயர்ந்தோங்க வேண்டுமென உவகையோடு வாழ்த்துவோம்.

*



# ஈழத்தமிழறிஞர் பொ. சங்கரப்பிள்ளை நூல்கள் வெளியீட்டு விழா!



கார்த்திகை 15 (1-12-2006) சென்னை பாரதீய வித்யா பவனில் ஈழத் தமிழறிஞர் பொ. சங்கரப்பிள்ளை எழுதிய We Tamils (நாம் தமிழர்) Saiva Siddhantha, (சைவ சித்தாந்தம்), After Death (மரணத்திற்குப் பின்) ஆகிய மூன்று ஆங்கில நூல்களின் வெளியீட்டு விழா சிறப்பாக நடந்தது. விழாவில் உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளர் உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் வரவேற்புரையாற்றினார். நாவலாசிரியர் கணேசலிங்கம் அறிமுகவுரையாற்றினார். விழாவில் தலைமை தாங்கி நூல்களை வெளியிட்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஔவை நடராசன் உரையாற்றினார்.

அவர்தம் உரையில் இந்த நூலாசிரியர் சிறந்த தமிழருக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். சைவச் சித்தாந்தத்தைப் பற்றி அரியக் கருத்துக்களை இந்த நூலில் பதிவு செய்துள்ளார். சங்கரப் பிள்ளை அவர் களின் குடும்பம் தலைசிறந்த தமிழ்க் குடும்பம் ஆகும். தந்தையைப் போலவே அவர்தம் மக்களும் தமிழ்த் தொண்டாற்றி வருவது பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டார்.

விழாவில் இந்திய ஆட்சிப் பணியில் ஓய்வுப் பெற்ற கவியோகி பேகன் (பாண்டியன்) அவர்கள் தம் ஆய்வுரையில் 'இந்நூல்கள் சிறந்த மொழிபெயர்ப் பினைப் பெற்றுள்ளது, இது பாராட்டுக்குரியது' என்று குறிப்பிட்டார். அரிமா சீனிவாசன் வாழ்த்துரை வழங்க ஏற்புரையை டாக்டர் மனோகரன் வழங்கினார். உலகத் தமிழர் மையத்தின் துணைச் செயலாளர் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

விழாவில் பேராசிரியர் சேது, தி இந்து நாளிதழ் கோபால், முருகடினமை சுப்பையா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்மணக்கும் நம்நாடு...? – கவிஞர் ஏ.ஆர். சுப்ரமணியம், மலேசியா

பனிமலர்கள் பூத்தநாடு...
பாவலர்கள் குவிந்தநாடு...
கனிச்சுவையாய்த் தமிழ்மணக்கும்...
காவியங்கள் அதைச்செய்யும்...
பணிசெய்ய ஆளுண்டு...
பாங்குடைய நிலமுண்டு...
மணியொத்த கோபுரங்கள்
மலைத்திடவே இங்குண்டு...!
வண்ணமிகு மலைநாடு...
விடியலதைக் கண்டநாடு...!
மண்ணகத்தில் தமிழுக்கு...
மாநாடு செம்மையுற...
கண்ணொத்த நம்மொழியை
கோமகளாய் வளர்த்தநாடு...!

மண்ணகத்து மாந்தரெல்லாம்...
மனமாற புகழுவாரே...!
ஏற்றமிக்க இந்நாட்டில்...
எழில்மிக்க மூமக்கள்...
மாற்றமில்லா நல்லிணக்கம்
மாமனத்தில் கொண்டதனால்
சாற்றுகின்றார் பேரிகையை...
சார்ந்திருப்போர் தாமென்றே...!
ஏற்றுகின்றார் திருவிளக்கை
எழிலோடு வாழுதற்கே...!
நலம்விளங்க நாளிதழ்கள்
நாள்தோறும் இதழ்விரிக்கும்,
வளங்கூட்டும் நற்செய்தி...

வலிமையுடன் அதிலிருக்கும்...
உளங்குளிர வாசிக்க...
உலகோரின் செய்தியுண்டு...
தளமிதுவாம் தமிழ்கற்க...
தமிழ்த்தொண்டர் நிறைந்தநாடு...!
வந்தாரை வரவேற்போம்...
வருகைக்கும் கைகொடுப்போம்...!
தந்தாராய் யாமிருப்போம்,
தாய்த்தமிழால் ஒன்றிணைவோம்...!
வந்தோரும் எமைக்கண்டு...
வாஞ்சையோடு அரவணைப்பார்...!
எந்தனுக்கு வாழ்வளித்த
என்நாடு... வாழியவே...!

## யுனெஸ்கோ மன்றம் விருதுச் சான்றிதழ் பெற்ற நூலாசிரியர்கள்

| எண். | நூல் தலைப்பு | நூலாசிரியர் | நாள் |
|---|---|---|---|
| 1. | நீரிழிவு நோய் குணமாக மருத்துவ முறையிலான யோகாசனம் | யோகி டாக்டர் மா. இராஜமாணிக்கம், | 24-1-2006 |
| 2. | பல்லாண்டு வாழ்க வளமுடன் | புலவர் நா. பெருமாள் | 11-06-2006 |
| 3. | மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ் | ரமேஷ் பர்தானி | 31-07-2006 |
| 4. | தண்ணீரை ஈர்க்காத தாமரை | நிர்மலா பெருமாள் | 5-8-2006 |
| 5. | வெற்றி வாழ்விற்கு 109 வழிகள் | இராஜவர்மன் | 29-08-2006 |

# திராவிட இயக்கத் திருக்குறள் உரைகள் – ஆய்வரங்கு

சென்னை, திருவள்ளுவர் கோட்டத்தில் 9-12-2006 அன்று தமிழ்நாடு அரசின் செய்தி விளம்பரத் துறையும் உலகத் திருக்குறளம் மையமும் இணைந்து திருக்குறம் ஆய்வரங்கை நடத்தியது. சிந்தனைச் செம்மல் பேராசிரியர் முனைவர் ந. சஞ்சீவி அவர்களின் 80 ஆவது நினைவுத் தொடர் சொற் பொழிவாக நடைபெற்ற இவ்விழாவுக்கு முன்னாள் அமைச்சர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் தலைமை யேற்றுச் சிறப்புரை ஆற்றினார். உலகத் திருக்குறள் மையத்தின் தலைவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் ''திருக்குறளும் தந்தை பெரியாரும்'' குறித்து ஆய்வுரை வழங்கினார். திராவிடர் இயக்கத் திருக்குறள் உரைகள் என்னும் தலைப்பில் நடைபெற்ற இவ் ஆய் வரங்கில் முன்னிலை வகித்த உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளரும், இலண்டன் சுடரொளி இதழின் தமிழகப் பிரதிநிதியுமான உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் நிகழ்த்திய உரையின் சுருக்கம் பின்வருமாறு :

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் திருக்குறள் எழுதப்பட்டது திருக்குறள் தோன்றி 1000 ஆண்டு களுக்குப் பிறகுதான் அதற்கு உரை எழுதப்பட்டது. அந்தக் காலத்தில் மூலத்தைப் படித்தே பொருள் உணரும் திறன், ஆற்றல், அறிவு, தமிழ் மக்களிடையே இருந்திருக்கிறது. இதனை

**1'உரையின்றி சூத்திரத்தானே பொருள்**
**நிகழ்ந்த காலமும் உண்டு'**

என்ற தொல்காப்பிய நூற்பாவில் உணர முடிகிறது.

பரிமேலழகர், மணக்குடவர், பருதி, பரில் பெருமான், காளிங்கர், தருமர், தாமதத்தர், நச்சர், திருமலையர், மல்லர் என பத்து பேர் திருக்குறளுக்கு உரை எழுதியதாகப் பன்னிரு பாட்டில் நமக்குக் கூறினாலும் இவர்களுள் முதல் ஐவர் உரைகளே இப்போது நமக்குக் கிடைக்கின்றன.

திருக்குறளுக்கு உரை எழுதிப் பெருமை பெற்ற வர்கள் சென்ற நூற்றாண்டைப் பொறுத்த வரையில், திருத்தணி சரவணப் பெருமானையர், ஆறுமுக நாவலர், திருமேனி இரத்தினக் கவிராயர், கோ. வடிவேலு செட்டி யார், இராமாநுசக் கவிராயர், வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் பரிமேலழகரின் உரையைத் தழுவியே விளக்க வுரை எழுதி திருக்குறளைப் பதிப்பித்தார்கள்.

இந்த 20 ஆண் நூற்றாண்டைப் பொறுத்தமட்டில் திருக்குறளுக்கு நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, திருக்குறள் முனுசாமி, டாக்டர் மு. வரதராச னார், சாமி சிதம்பர நாதனார், சி. இலக்குவனார், புலவர் குழந்தை, பாவேந்தர் பாரதிதாசனார், கா. அப்பா துரையார், இராஜாசி, வ.உ. சிதம்பரம் பிள்ளை, டாக்டர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், அரிமதி தென்னகன், பதினெண் கவனகர் கனக சுப்புரத்தினம், பாவலர் பெருஞ்சித்திரனார், இளங்குமரனார், முனைவர் மோகன ராசு ஆகியோர் உரையெழுதி உள்ளனர்.

இன்று வரை திருக்குறளுக்கு ஏறத்தாழ 280 உரை நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் டாக்டர் மு.வா.வின் உரை ஏறத்தாழ 150 முறை மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

திராவிட இயக்கத்தார் உரை என்று இவர்களில் யாரைக் குறிப்பிடுவது? திராவிட இயக்கத்தின் மொழி யுணர்வில், இனவுணர்வில், தன்மான உணர்வில் நனைந்தவர்களே திராவிட இயக்கத்தார் என்று எண்ணு வதா? அல்லது திராவிட இயக்கத்தின் கொள்கைகளில் ஏதாவது ஒன்றினால் உந்தப்பட்டவர்களையும் திராவிட இயக்கத்தார் என்று சேர்த்துக் கொள்ளுவதா? என்ற வினாவைத் தொடுக்கும்போது இவர்கள் இரு பிரிவின ரையுமே திராவிட இயக்கத்வராக நான் கருதுகின்றேன்.

அந்த வகையில் தந்தை பெரியார் அவர்களைக் கைத்தடி ஊன்றி இன்றும் நடந்து வருகின்ற காட்சி களைப் படம்பிடிப்பது போன்று பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிய சாமி சிதம்பரனார், குறள் நெறி பத்திரிகையை நடத்திய முனைவர் இலக்கு வனார், இராவணகாவியம் படைத்துத் திராவிட இயக்க இலக்கியத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கிய புலவர் குழந்தை, பெரியாருடைய உரைகளையெல்லாம் கவிதை யாக்கிப் பகுத்தறிவு விதை விதைத்த பாவேந்தர், பன் மொழிப் புலவர் கா. அப்பா துரையார், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர், நடமாடும் பல்கலைக் கழகம் நாவலர் நெடுஞ்செழியன், அரிமதி தென்னகன், இவர் கள் அத்தனை பேரும் திராவிட இயக்க உரையாசிரியர் களாகக் குறிப்பிடலாம்.

திராவிட இயக்கத்தோடு நேரடித் தொடர்பு இல்லையென்றாலும் கூட இந்தி எதிர்ப்பில் உந்தப் பட்டுத் தனக்கு வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதினைப் பெற மறுத்த டாக்டர் மு.வ. திராவிட இயக்கத்தின் ஆணிவேரான இன உணர்வு, மொழியுணர்வைத் தன்ன கத்தே கொண்ட திருக்குறள் முனுசாமி, பதினெண் கவன கர் கனகசுப்புரத்தினம், பெருஞ்சித்திரனார், முனைவர் மோகனராசு, இளங்குமரனார் இவர்களையும் உரிமை யோடு திராவிட இயக்க உரையாசிரியர்களாகவே நான் கருதுகின்றேன்.

திராவிட இயக்கத்தார் உரையில் கலைஞர் அவர் களுடைய உரை வித்தியாசமான பார்வையோடு அனை வராலும் பாராட்டப் பெற்ற உரையாக அமைந்தது. நேரம் கருதி ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

**'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு'**

பெரும்பாலான உரையாசிரியர்கள், ஆடை நெகிழும்போது உதவிக்கு வருகின்ற கை போன்று உதவுவதே நட்பு என்றே உரையெழுதியுள்ளன. கலைஞரோ ''ஆடையே இல்லாத போது, மானத்தைக் காக்க விரைந்து செல்லும் கைபோன்று விரைந்து சென்று நண்பரின் இடுக்கண் அகல உதவுவதே நட்பு' என்று வித்தியாசமான பார்வையில் உரை எழுதியமை சுவைக்கத்தக்கது.

திருக்குறள் ஓர் இனத்துக்குரிய நூல் அல்லது, ஒரு மொழிக்கு உரிய நூல் அன்று; குறிப்பிட்ட வாழ்வியலுக்கு உரிய நூல் அன்று; பரந்துபட்ட மாந்த இனத்துக்கு, பரந்து பட்ட மதத்திற்கு, பரந்து பட்ட பல இனத்திற்கு, சொல்லப் போனால் உலகத்தாருக்கே உரிய நூல் திருக்குறள்,

உலகில் எந்த மொழியிலும், எல்லோருக்கும் நீதி சொல்லுவதாக வரப்பெற்ற நூல் எதுவுமே இல்லை. தமிழ், தமிழன், தமிழ்நாடு என்று கூட, எங்குமே குறிப்பிடாமல் ஐயன் திருவள்ளுவர் அவர்கள் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும், நமக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளார். அவர் புகழை முனைப்போடு பரப்பி வருகின்ற முனைவர் மோகனராசு அவர்களைப் பாராட்டி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம். ✱

# 40 ஆண்டுகளாக இலக்கியம் படைக்கும் செங்கதிரோன்!

சிறுகதை, நெடுங்கதை, கட்டுரை, கவிதை என பலவற்றிலும் முத்திரைப் பதித்தவர் செங்கதிரோன் எனும் பொன் ஜேக்கப், ஆகக் கடைசியாக நியாயங்கள் எனும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தார். நாற்பதாண்டுகளுக்கு மேலாக எழுத்துப் பணி, சமூகப் பணி, தமிழ்ப் பணி ஆகியவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்.

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மூலமாகப் பொது வாழ்க்கையைத் தொடங்கியவர் அவர். தலைநகரில் பல்வேறு அமைப்புக்களில் பொறுப்பேற்று சேவையாற்றியவர். ஆழமான சமூகப் பார்வையும் சிந்தனை வளமும் அறிவுத் திறனும் உடையவராதலால் அவருடைய படைப்புகள் யாவும் சமூக நோக்குடையதாகவே இருந்திருக்கின்றன.

நியாயங்கள் எனும் சிறுகதைத் தொகுப்பு நூலில் இடம் பெற்றிருக்கும் அத்தனை சிறுகதைகளும் எதார்த்த நோக்குடனும் அந்தந்த காலகட்டச் சம்பங்களை மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் வகையிலும் அமைந்திருக்கின்றன.

நியாயங்கள் எனும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட அதே வேகத்தில் ''கள்ளச் சந்தையில் சொக்கத் தங்கங்கள்'' எனும் மலேசியப் பின்னணியைக் கொண்ட நாவல் ஒன்றையும் அவர் வெளியிட்டிருக்கிறார். சமுதாயத்தின் நாடித் துடிப்பை உணர்ந்தவர் என்பதால், இந்த நியாயங்கள் எனும் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள அத்தனை கதைகளும் சமூக அவலங்களை அலசும் படைப்பாகவே இருக்கின்றன.

''நியாயங்கள், அன்பானந்தன், வீட்டுக்குப் போகிறேன், இரண்டு செய்திகளில், தெய்வ தரிசனம், அனுபவத்தின் மூலம் பாடம்'' எனப் பல கதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. கதையைப் படிக்கும் வாசகர்களோடு கதாபாத்திரங்கள் கைக் குலுக்கும் வகையில் கதைகள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூலுக்கு மதிப்புரை எழுதிய பிரபல நாவலாசிரியர் செங்குட்டுவன், 'தன்னை ஆளும் எழுத்தை செங்கதிரோன் ஆள்கிறார்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ''செய்வதைத் திருந்தச் செய்'' என்பது நம்மவர் பேச்சு. செம்மையான தமது கடமையில் கூர் மழுங்காமல் இருப்பதே அந்தப் பழமொழியின் நோக்கம். அதனை நிரூபித்தவர்களில் செங்கதிரோனும் ஒருவரென செங்குட்டுவன் குறிப்பிட்டிருக்கிறார்.

நியாயங்கள் எனும் இந்தச் சிறுகதைத் தொகுப்பில் உலா வரும் கதாபாத்திரங்கள் அனைவரும் நம்முடன் வாழ்பவர்களும் வாழ்ந்து மறைந்தவர்களுமாக இருக்கிறார்கள்.

நமது சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பகுதியாக வாழ்கின்ற தோட்டப்புற வாழ்க்கையை இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதைகளில் காண முடிகிறது.

தெய்வ தரிசனம் என்ற கதையில் ''இவனா, சுத்த அயோக்கியனாச்சே... அங்க ஒரு கோயில்ல பூசாரியா இருந்தான். கோயில் வேல நல்லா தெரியும். பக்திப் பாட்டு நல்லா பாடுவான், ஆனா, அவன் சரியான ஆளு யில்ல... குடிகாரப் பய, ரோட்டுலதான் கெடப்பான்''' என்ற வரிகளும் 'எச்சில் தட்டு' எனும் கதையில் 'எங்க ஒன்னத்தையும் காணோமே! பொகையிற அடுப்பை ஊதச் சொல்லலாம்னு நெனைச்சா எழவெடுத்த பிள்ளைங்க எங்கப் போயி தொலைஞ்சிதுங்களோ!' உள்ளுக்குள் பொருமுகிறாள் என்பது போன்ற வரிகளெல்லாம் தோட்டத்து வாழ்க்கையின் நிஜங்களாகும் அதை கதைகளில் காண முடிகிறது

No. 59, Jalan 28, Taman Bukit Mewah,
43000 Kajang, Selangor, D.E., Malaysia

எனும் முகவரியில் தொடர்பு கொண்டு இந்தத் தொகுப்பு நூலைப் பெறலாம்.

---

## முதலாம் உலகத் தமிழ் வாசகர் மாநாட்டில் சுகந்தி பெருமாளின் சமர்ப்பணம் தமிழிசைப் பேழை ஒலி மழை




மலேசியத் தீபகற்பம் முழுமையும் ஆங்காங்குக் கோலாலம்பூர் சித்தியவான், கூலிம், சுங்கைப்பட்டாணி, காஜாங், குவந்தான், ஜொகூர் பாரு போன்று, பல்வேறு நகர்களில் 25 திசம்பர் 2006 தொடங்கி 6-1-2007 வரை நடைபெறவுள்ள முதலாம் உலகத் தமிழ் வாசகர் மாநாட்டில் சமர்ப்பணம் சுகந்தி பெருமாளின் ஒலிப் பேழை இன்னிசை மழை பொழியும். மலேசியத் தமிழ் ஆக்கங்கள் உலக நாடுகளில் பவனி வர இத்தகைய நிகழ்வுகள் வழிவகுக்கும்.

புத்ரியாழினி, மலேசியா

## மஞ்சுளா நர்த்தனக் கலாலயாவின் தெய்வத் தமிழ் நாட்டியச் சலங்கை பூசை 2006

மலேசியாவின் 13 மாநிலங்களில் ஒன்றான சிலாங்கூர் மாநிலக் கோலச்சிலாங்கூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணியர் சுவாமி ஆலய வளாகக் கலா மண்டபத்தில் மஞ்சுளா நர்த்தனக் கலாலயாவின் பரதநாட்டியச் சலங்கைப் பூசை வைபவம் அண்மையில் நடந்தேறியது.




ஆசிரியை திருமதி மஞ்சுளா மணிராசு அவர்களின் மாணவிகளான யோகவதி இராசேந்திரன், பாகேசுவரி வாசுதேவன், இராசேசுவரி இராமன், கோகுலப்பிரியா சங்கர், இராசேசு மூர்த்தி, சாலினி மூர்த்தி, டாசாயினி மூர்த்தி, சங்கரி மூர்த்தி, செயசிறீ இராசேந்திரன், விசயலட்சுமி இராமதாசு, சசுவினி சிறீராசு நடராசன் ஆகியோர் தூய பரத சாத்திர நடன நாட்டியங்கள் படைத்தனர்.

யுனெஸ்கோ மன்ற இயக்குநரும் தமிழ்த் தேசம் (Tamil World) நிறுவனருமான ஈழ வேங்கையனார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யுனெஸ்கோ மன்றப் புரவலர் வர்த்தகப் பெருந்தகை டத்தோ எம். பசுபதி, தமிழ் நாணயக் கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்பாளர் டாக்டர் ஏ.எஸ். ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்றனர்.



## பேராசிரியர் இரா. மதிவாணன் இயற்றிய 'தொல்காப்பியர் காலம்' முதலிய ஆய்வு நூல் ஐந்து வெளியீடு

மொழி ஞாயிறு பாவாணர் அகர முதலித் திட்டத்தின் முன்னை இயக்குநர் பேராசிரியர் இரா. மதிவாணன் அவர்கள் ஐந்து ஆய்வு நூல்கள் இயற்றியுள்ளார். அவை. 1. தொல்காப்பியர் காலம், 2. சிலம்பின் காலக் கணிப்பு, 3. கடைக்கழக நூல்களின் காலமும் கருத்தும், 4. தமிழாய்வில் கண்ட உண்மைகள், 5. சொல்லாய்வுக் கட்டுரைகள் - 2 என்பன.

மேற்கண்ட ஆய்வு நூல் ஐந்தின் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. கலைமாமணி ம. அன்பரசன் வரவேற்புரை ஆற்றினார்.

மாண்புமிகு நிதியமைச்சர், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கி நூல்களை வெளியிட்டார். முனைவர் ஔவை நடராசனார் நூல்களைப் பெற்றுக்கொண்டு அரியதொரு சிறப்புரை ஆற்றினார். நூல்களின் மதிப்புரை வழங்கி, பேராசிரியர் இ. மறைமலை, பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புறப் பாராட்டினர். இரா. மதிவாணனாரின் எழுபானாண்டு மலரை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை அரசு செயலாளர் திரு. இரா. கற்பூரசுந்தர பாண்டியன் இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார்கள். திரு. ஒளிவண்ணன் நன்றி நவின்றார்.



தொல்காப்பியம் அரங்கேறிய ஆண்டு கி.மு.835 என்பதும் கடைக்கழகக் காலத்து 90 மூவேந்தர் களின் ஆட்சிக் கால வரம்புகளும் மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகளும் இந்நூல்களில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மொழி ஞாயிறு பாவாணருக்கு அடுத்த தமிழ் மீட்பராகப் பேராசிரியர் இரா. மதிவாணன் விளங்குகிறார் என அமைச்சர் அவர்கள் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட நூல்களை 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-78 சேகர் பதிப்பகத்து திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் பதிப்பித்துள்ளார்.

# மலேசியத் தமிழ் நூல்களைப் பதிவுசெய்தல்

என். செல்வராஜா, நூலகவியலாளர், இலண்டன்

நூல்கள் மனித இனத்தின் பண்பாட்டை, கலாச் சார விழுமியங்களை, காலம்காலமாக மேற்கொண்ட அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பதிவானது ஒரு இனத்தை அதன் வளத்தை, தமது தலைமுறைக்கும், அடுத்து வரும் தலைமுறைக்கும் முதுசொமாக எடுத்துச் சொல்லம் வல்லமை படைத்தன. இத்தகைய பதிவுகள் நாகரீகம் மிக்க ஒவ்வொரு இனத்திற்கும் மிக அவசியமான தாகும்.

இந்த அடிப்படையில் உருவானதுதான் உலக நாடுகளில் இயங்கி வருகின்ற ஆவணக் காப்பகங் களும், தேசிய நூலகங்களுமாகும். உலக நாடுகளைப் பொறுத்தவரையில் தத்தம் தேசிய இனங்களின் அறிவுத் தேட்டத்தை பாதுகாக்கக் கொள்ளவும் அவற்றைப் பதிந்து கொள்ளவும் அதிகாரபூர்வமான இத்தகைய நிறு வனங்களை நிறுவி, அதற்கான சட்டப் பாதுகாப்பையும் வழங்கி, தத்தம் தேசிய இனத்தின் அறிவேடுகளை ஆண்டாண்டு காலமாகப் பேணி வருகின்றன.

தமிழர்களான எம்மைப் பொறுத்தவரை எமக் கென்றொரு நாடின்றி உலகமெல்லாம் பரந்து வாழும் இனமாக எம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக் கிறோம். எமது அறிவில் வளங்களைப் பேண நாம் சார்ந்துள்ள நாடுகளின் பிரதான தேசிய இனங்களின் நிழலில் இத்தகைய சட்டப்பாதுகாப்புடன் கூடிய அமைப்புகளின் வாயிலாக எமது ஆவணங்களைப் பதிவுசெய்யவும் பாதுகாக்கவும் முயல்கின்றோம்.

இத்தகைய ஒரு பகைப்புலத்தில் நின்று, சமகால மலேசிய தமிழ் நூல்களின் இருப்புப் பற்றிய தகவல் களை ஆவணமாக்கும் முயற்சிகள் பற்றியதாக இக் கட்டுரை அமைகின்றது.

மலேசிய தேசிய நூற்பட்டியலானது (Malaysia National Bibliography), 1966 ஆம் ஆண்டு நூல் பாது காப்புச் சட்டத்தின் பிரகாரம் (Book Preservation Act 1966) பெர்புஸ்த்தகான் நெகரா மலேசியா (Perpusta kann Negara Malaysia) என்றழைக்கப்படும் மலேசிய தேசிய நூலகத்தின் இருப்புக்களைத் தொகுப்பதன் மூலம் 1967 இல் பருவ வெளியீடாக ஆரம்பிக்கப் பட்டது. பின்னர் 1986 இல் இயற்றப்பட்ட வைப்பகங் களுக்கான சட்டத்தின் பிரகாரம் (the Deposit of Library Material Act 1986) அதன் ஆவணக்காப்பகத்திற்குச் சட்ட பூர்வமாக பதிப்பகங்களினால் வழங்கப்படும் வைப்பக நூல் பிரதிகளையும் உள்ளடக்கியதாக 1987 ஆம் ஆண்டு முதல் விரிவான முறையில் தொகுக்கப்படுகின்றது.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளின் தேசிய நூற்பட்டியல் போலவே மலேசிய தேசிய நூற்பட்டிய லும் முழுமையான மலேசியத் தமிழ் நூல்களைப் பதிவுக் குள்ளாக்குவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. அரசாங்க வெளியீடுகள், பல்கலைக்கழக வெளியீடுகள் ஓரளவு சுவடிகள் காப்பகத்திற்கு ஒழுங்காக அனுப்பி வைக்கப்பட்டாலும், வர்த்தக நோக்கில் தனிப்பட்டவர் களால் மேற்கொள்ளப்படும் நூலாக்கங்கள் அனைத்தும் மலேசியத் தேசிய நூலகத்தை அடைந்து நூற்பட்டியலில் இடம்பெறுவதில்லை. இதற்கு அடிப்படையான ஒரு காரணம் என்னவென்றால் மலேசியத் தமிழ் நூல்களில் பெரும்பாலானவை மலேசியாவுக்கு வெளியே தமிழகத் தில் அச்சிடப்படுவதாகும். இதை விட பதிப்பகங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தவறுவதும் இதற்கோர் காரணமாகும். இந்நிலையில் மலேசியத் தமிழ்நூல்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் பல்வேறு தமிழறிஞர்கள் இறங்கியுள்ளமையை இங்கு அவதானிக்க முடிகின்றது.

மலேசியத் தமிழரின் இலக்கிய வரலாற்றை இலக்கியக்குரிசில் மா. இராமையா அவர்கள் 1978 இல் தொகுத்து அப்பெயரிலேயே ஒரு நூலாக்கி வெளி யிட்டிருந்தார். பின்னாளில் அதன் திருத்திய விரிவான பதிப்பினை மலேசிய தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் என்ற பெயரில் தமிழகத்தின் சேலம் புரட்சிப் பண்ணையின் வாயிலாக 1996 இல் வெளி யிட்டுள்ளார். 1946க்கு முன்னைய படைப்புக்கள், 1946க்குப் பின்னைய படைப்புக்கள் என்று மலேசிய தமிழ் நூல்களை வகைப்படுத்தியதுடன் முடிந்தவரை சிறுகதை, நாவல், கட்டுரைகள் என்று பட்டியலாகவு தந்திருக்கின்றார். மலேசிய தமிழ் இலக்கியத் துறையில் பரவலாக விரிந்துரைக்கப்பட்ட குறிப்பிடத்தகுந்த நூல் களைப் பற்றிய தகவல்களையும் அந்நூல்களின் தலைப் பின் கீழேயே அந்நூலில் பதித்துள்ளார். நூலின் தலைப்புகளைப் பட்டியலிடும் வேளை, அகரவரிசை ஒழுங்கிலோ ஆண்டு ஒழுங்கிலோ பதிவதில் அக்கறை காட்டப்படாதது ஆய்வாளர்களை மிகுந்த சங்கடப் படுத்தவும் தேடலில் காலவிரயத்தை ஏற்படுத்தவும் கூடுமாயினும் மலேசியத் தமிழ் நூலியல் தேவைக்கான ஒரு உசாத்துணை நூலாக இது நிச்சயம் வரவேற்கப் படுவதாக அமையும்.

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவர் மறைந்த முனைவர், இராம. சுப்பையா மலேசியாவில் வெளிவந்த தமிழ் இதழ்களின் விவரங்களைக் கொண்ட "தமிழ் மலேசியானா" என்னும் தொகுப்பு ஒன்றினைக் கட்டுரையாக வெளி யிட்டார். இக்கட்டுரையில் 1920 தொடக்கம் 1960 வரையிலான விவரங்கள் மட்டுமே இடம்பெற்றன. அவரது மறை விற்குப் பின் அம்முயற்சி நின்று போனது. இது சிறுநூல் உருவிலும் வெளிவந்தது.

மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், என்ற தொகுப்பு நூல் மலேசியக் கவிஞர் முரசு நெடு மாறனைத் தலைமைத் தொகுப்பாசிரியராகக் கொண்டும் தமிழ்நாடு, தமிழவேள் பேராசிரியர் இராம. சுப்பிர மணியனைத் தலைமைப் பதிப்பாசிரியராகவும் கொண்டு

மலேசியா, சிலாங்கூர் அருள்மதியம் பதிப்பகத்தினால் 1997 இல் வெளியிடப்பட்டது. இப் பாரிய தொகுப்பில 1887 முதல் 1987 வரையிலான நூற்றாண்டுக் காலத்திற்குரிய சிங்கப்பூர் மலேசிய தமிழ்க் கவிதை களில் தேர்ந்தெடுத்த அறுநூற்றைம்பது கவிதைகள் இடம் பெறுகின்றன.

கவிதைகளுக்கு நிகராக மலேசிய தமிழ்க் கவிதை இலக்கியம் பற்றிய ஏராளமான வரலாற்றுக் குறிப்புகளும் இந்நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எனது கட்டுரையில் இந்நூலை அறிமுகப்படுத்த முன் வந்தமையின் முக்கிய காரணம் இந்நூலின் இறுதியில் 895 ஆம் பக்கம் முதல் 945 ம் பக்கம் வரை தொகுக்கப் பட்டுள்ள நூற்பட்டியலாகும். இதில் 1887-1987 காலப் பகுதியில் சிங்கப்பூர்-மலேசியாவில் வெளிவந்த கவிதை நூல்கள் பற்றிய நீண்டதொரு பட்டியல் காணப்படு கின்றது. 142 கவிதை நூல்கள் மலேசியாவிலும், 33 கவிதை நூல்கள் சிங்கப்பூரிலும் வெளிவந்திருப்பதை அறிய முடிகின்றது.

மலேசியத் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் ஆய்வுகள் மேற்கொள்ளும்போது சிங்கப்பூர் எழுத்தாளர்களின் இலக்கிய முயற்சிகளும் அங்கு இணைந்தே ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய தவிர்க்க வியலாத சூழல் காணப்படுகின்றது. இவ்விரு நாடு களும் இன்று புவியியல்ரீதியில் பிரிக்கப்பட்டிருந் தாலும், 1965 ஆம் ஆண்டு வரை ஒரே காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்திருக்கின்றன. அதுவரையில் தமிழ் இலக்கியமானது மற்றைய மலேசிய மொழிகளைப் போன்று ஒரே தமிழ் இலக்கியப்பாரம்பரியத்தில் வளர்த் தெடுக்கப்பட்டுள்ளமை இங்கு அவதானத்துக்குரியது.

''விடுதலைக்குப் பிந்திய மலேசியத் தமிழ் நாவல்கள்'' என்ற நூல் கோலாலம்பூர் மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல்துறை விரிவுரை யாளரான டாக்டர் சபாபதி வேணுகோபால் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. கோலாலம்பூர் உமா பதிப்பகத்தி னால் 1995 இல் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் 1957-1981 வரையிலான காலகட்டத்தில் வெளியிடப் பட்ட மலேசியத் தமிழ் நாவல்கள் ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளன. விடுதலைக்குப் பிந்திய மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சியும் போக்குகளும் பற்றிய தன் ஆய்வில் டாக்டர் சபாபதி வேணுகோபால் பின்வருமாறு கூறுகின்றார்.

''மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம் இந்நூற்றாண்டில் தொடக்கத்தில் பிறந்தது. மலேசியத் தமிழ்ச் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள், தமிழ்ப் பத்திரிகைகள், தமிழகத் தாக்கம் ஆகியன இங்கு நாவல் இலக்கியம் தோன்றுவதற்குரிய சூழலை உருவாக்கின. தொடக்கத்தில் தமிழகத்திலிருந்தும் யாழ்ப்பாணத்தி லிருந்தும் வந்து இங்குக் குடியேறியவர்களே தமிழில் நாவல்களை எழுதினர்.''

இந்த நூலில் ஆய்வாளர், மலேசியத் தமிழ் நாவல்களை விரிவாகப் பட்டியலிட்டதுடன் ஒவ்வொரு நாவல்களையும் அவற்றின் பண்புகளின் அடிப்படையில் ஆய்வு செய்துமுள்ளார். குறிப்பிட்டதொரு வரலாற்றுக் காலகட்டத்தின் மலேசியத் தமிழ் நாவல்கள் பற்றிய வரலாற்றைக் கூறும் ஆவணமாக இந்நூலை நாம் கொள்ளலாம்.

மலேசியத் தமிழ்க்கவிதை நூல்களில் யாப்ப மைதி : ஒரு கண்ணோட்டம் என்ற ஒரு திறனாய்வு நூல் பாவலர் டாக்டர் இரா. சண்டமாருதம் என்ற புனை பெயரில் கவிஞர் டி.வி. இராகவன்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டு சிலாங்கூர் முத்தமிழ் வெளியீடாக வெளி யிடப்பட்டுள்ளது. இச்சிறு நூல் இன்றைய மலேசியக் கவிதைகளில் காணப்படும் குறைபாடுகளை விமர்சிப் பதாக அமைந்திருந்தாலும், நூலில் அவர் திறனாய்வுக் குட்படுத்திய நூல்களின் விபரங்கள் முழுமையான நூலியல் தரவுகளுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

நூலுருவில் ஆவணப்படுத்தப்பட்ட மலேசிய தமிழ் நூல்களைக் கொண்ட மேற்கண்ட தொகுப்புகளை நாம் கூர்ந்து அவதானித்தால், அவை அனைத்தும் ஏதோ வொரு குறித்த வட்டத்திற்குள் நின்று தொகுக்கப் பட்டவை என்பது வெளிப்படையாகும். நூலாசிரியரின் நோக்கம் நூல்களை ஆவணப்படுத்துவதாகவன்றி நூல் களை ஆய்வு செய்வதாகவே அமைகின்றது. இதன் காரணமாக ஒட்டு மொத்தமான மலேசியத் தமிழ் நூல்கள் பற்றிய ஒரு பார்வையை மேற்குறிப்பிட்ட எந்த வொரு நூலும் தரவில்லை. அத்தகைய ஒரு பொது நோக்கிற்காக அவை தயாரிக்கப்படவும் இல்லை என்பது வெளிப்படை. மேலும் பெரும்பாலான தொகுப்புகள் தமிழ் இலக்கியங்களையே பதிவுக்குள்ளாக்கியுள்ளன. இலக்கியங்கள் அல்லாத சமயம், சமூகவியல், மொழி யியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கவின்கலைகள், மற்றும் வரலாற்று நூல்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளக்கூடிய தொகுப்புகள் எதுவும் வெளி யிடப்பட்டுள்ளனவா என்பதை அறிந்து கொள்ள முடிவதில்லை.

## மலேசிய-சிங்கப்பூர் நூல் தேட்டம்

இந்நிலையில் ஈழத்தமிழரான என். செல்வராஜா என்ற நூலகவியலாளரினால் உலகளாவியரீதியில் அச்சிடப்பட்ட சிங்கப்பூர்-மலேசிய தமிழ் நூல்கள் அனைத்தினதும் பாரிய தொகுப்பாக மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் ஒன்று உருவாகி வருகின்றமை, மலேசியத் தமிழ் படைப்புலகிற்கும், பதிப்புலகத்திற்கும் மகிழ்வூட்டுவதாக அமையலாம். நூல்தேட்டம் பல் தொகுதியாக வெளிவரும் சாத்தியக்கூறுகள் காணப் படும்போதிலும், அதன் முதலாவது தொகுதி எதிர்வரும் டிசம்பர் 2007 இல் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 1700 பதிவுகளை இனம்கண்டு சேகரித்துள்ள திரு. செல்வராஜா, அவற்றில் 560 நூல்களைப் பற்றிய குறிப்புரைகளையும் தனது நூல்தேட்டத்தில் பதிவு செய்துள்ளார்.

மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அமைகின்றது. முதலாவது பிரிவில் சுமார் 560 நூல்களின் முழுமையான பதிவுகள் இடம்பெறும். நூலின் தலைப்பு, ஆசிரியர் விபரம், வெளியீட்டாளர் முகவரி, பதிப்பு விபரம், அச்சக விபரம், நூலின் பக்கங்கள், விலை, அளவு, ISBN இலக்கம் போன்ற தரவுகளும் அந்நூலின் உள்ளடக்கம், ஆசிரியர் பற்றிய குறிப்பு, நூலின் முக்கியத்துவம் போன்ற விபரங்களும் அடங்கியதாக இப்பிரிவின் ஒவ்வொரு பதிவும் அமைகின்றது. இத்தகைய விபரங் களை நூல்களைப் பார்வையிட்டே பெற்றுக் கொள்ள முடியுமாகையால், ஐரோப்பிய நூலகங்களிலும்,

மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறை நூலகத்திலும், சிங்கப்பூர் தேசிய நூலகத்திலும், எழுத்தாளர்களின் தனிப்பட்ட சேகரிப்புகளிலும், மலேசிய-சிங்கை படைப்பாளிகளால் இவருக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட நூல்களிலிருந்தும் இவர் பெற்ற விபரங்களை இப்பிரிவில் விரிவாகத் தொகுத்திருக்கிறார். விபரங்கள் அனைத்தும் தொடர் இலக்கங்கள் வழங்கப்பட்டு பொது விடயங்கள், மெய்யியல், சமயம், சமூகவியல், மொழியியல், தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், கலைகள், இலக்கியம், வரலாறு ஆகிய பத்து பெரும்பிரிவுகளுக்குள் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பதிவுகளுக்கான ஆசிரியர் வழிகாட்டியும், தலைப்பும் வழிகாட்டியும் பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன.

இரண்டாவது பிரிவில், கையில் கிடைக்காததும், நூல்கள், ஆவணங்கள், பத்திரிகைகளில் இடம்பெற்ற கட்டுரைகள், வர்த்தகப் பட்டியல்கள், நூல் விமர்சனங்கள், வெளியீட்டு விழா அழைப்பிதழ்கள் போன்ற வற்றின் வாயிலாக அறிந்துகொள்ளப்பட்ட நூல்விபரங்களை நூலின் தலைப்பு அகரவரிசையில், பெறக்கூடியதாக இருந்த விபரங்களுடன் பட்டியலிட்டிருக்கிறார்.

இதுவே மலேசிய-சிங்கப்பூர் நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதியின் வடிவமைப்பாகும். இந்நூல் 2007 டிசம்பரில் வெளிவந்த பின்னரே பல மலேசிய-சிங்கப்பூர் எழுத்தாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படக் கூடும். அதன்பின்னர் இரண்டாவது தொகுதியைத் தொகுப்பது பற்றிய முடிவு மேற்கொள்ளப்படலாம். இரண்டாவது தொகுப்பில், முதலாவது தொகுப்பின் இரண்டாம் பிரிவில் காணப்படும் நூல்களில் கணிசமான எண்ணிக்கையை பார்வையிட்டு அவை இரண்டாம் தொகுதியின் முதற்பிரிவில் முழுமை பெறக்கூடும்.

நூற்றாண்டுப் பழமைமிக்க மலேசிய தமிழ் இலக்கியத்தின் முழுமையான பதிவுக்கு, இன்றைய நிலையில், மலேசிய மண்ணிலிருந்து எழுத்தாளர் சங்கங்களோ, எழுத்தாளர்களோ போதிய அக்கறை காட்டாத நிலையில் ஈழத்தவர் ஒருவர் புலம்பெயர்ந்த ஐரோப்பிய தேசமொன்றிலிருந்து இம்முயற்சியை மேற்கொள்வது கவனிக்கத்தக்கதொன்றாகும். அதுவும் எவ்வித நிதி உதவியுமின்றி, தனது சொந்த உழைப்பிலேயே இப் பதிவினை ஊர் ஊராகச் சென்று சேகரித்து வருகின்றார் என்ற செய்தியும் மலேசியத் தமிழரின் மனதில் ஊன்றிப் பதிவுபெறவேண்டிய விடயமாகும். மார்ச் 2007 இல் இத்தொகுப்புப் பணி முடிவுக்குக் கொண்டுவரப்படவுள்ளது, அதன்பின் அவற்றை ஒழுங்கமைக்கவும், பதிப்பிக்கவும் அவகாசம் தேவைப்படும்.

மலேசிய-சிங்கப்பூர் படைப்பாளிகள் இப்பணிக்குத் தமது உதவியை வழங்குவதாக இருப்பின் இவருக்கு உங்கள் நூல்களில் ஒரு பிரதியை யாவது தபாலில் உடனடியாக அனுப்பிவைக்கலாம். அதன்மூலம், முதலாவது தொகுதியில் தங்கள் நூல்கள் தவறவிடப்படும் நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

முகவரி : N. Selvarajah, 48, Hallwicks Road, Luton,
Bedfordshire LU2 9BH, United Kingdom.

# முதலாவது உலகத் தமிழ் வாசகர்கள் மாநாடு
# (22-12-2006 முதல் 1-1-2007 வரை, மலேசியா)

மலேசிய நாட்டில் 22-12-06 முதல் 1-1-2007 வரை பல நகர்களில் நடைபெறவுள்ள முதலாவது உலகத் தமிழ் வாசகர்கள் மாநாட்டு விவரங்கள் வருமாறு:

| எண் | நாள் | நடைபெறும் நகர் | ஏற்பாட்டுப் பொறுப்பாளர் | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1. | 22-12-2006 | பத்து மலை | கவிஞர் ஏ.ஆர். சுப்பிரமணியம் | 013-3323142 |
| 2. | 23-12-2006 | லுனாஸ் நகருக்குப் பயணம் | | |
| 3. | 24-12-2006 | லுனாஸ் | சத்தியசீலன் சேத்தன் | 013-4590172 |
| 4. | 25-12-2006 | சுங்கை பட்டாணி | டாக்டர் இலட்சப் பிரபு | 016-4356900 |
| 5. | 26-12-2006 | ஈப்போ | சந்திரசேகர் | |
| 6. | 27-12-2006 | கோலாலம்பூர் | கிரன்ஜிட் சர்மா பகதூர் | 017-6918497 |
| 7. | 28-12-2006 | கோலாலம்பூர் | யோகி டாக்டர் இராஜமாணிக்கம் | - |
| 8. | 29-12-2006 | கெப்போங் | மு. ஆறுமுகம் | - |
| 9. | 30-12-2006 | தாமன் செந்தோசா | சுப்பிரமணியம் | - |
| 10. | 31-12-2006 | பெட்டாலிங்/தாமான் மேடான் | தளபதி இராஜா இளங்கோ | 017-3793997 |
| 11. | 1-1-2007 | காஜாங் | முருகன் | |

# சுற்றுலா ஆண்டு வெற்றிக்கு உதவுவீர்

## டாக்சியோட்டிகளுக்கு டத்தோ சிவசுப்பிரமணியம் வலியுறுத்தல்

அடுத்த ஆண்டை சுற்றுலா ஆண்டாக மலேசியா அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த 2007 சுற்றுலா ஆண்டை வெற்றியடையச் செய்ய டாக்சியோட்டிகள் முழுப் பங்களிப்பை வழங்கி உதவ வேண்டும் என்று டாக்சியோட்டிகளை கஹாகாம் ஆணையாளர் டத்தோ என். சிவசுப்பிரமணியம் கேட்டுக் கொண்டர். இந்தச் சுற்றுலா ஆண்டிற்காக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு அரசாங்கம் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டு வரும் இவ்வேளையில் நாட்டின் நுழைவாயிலுக்கு அடுத்து, வெளிநாட்டினர் சந்திக்கும் முதலாவது மனிதராக டாக்சி யோட்டிகள் திகழ்வதால் அவர்களுக்கு உரிய உபசரணையை வழங்குவதன் மூலமே நாட்டின் தோற்றத்திற்கு நற்பெயரை ஏற்படுத்த முடியும் என்று டத்தோ சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். இங்கு ப் பத்துகேவ்ஸ், கங்கை துவா ஸ்ரீ சியாந்தான் சமூக மண்டபத்தில் கிள்ளான் பள்ளத்தாக்கு டாக்சியோட்டிகள் சங்கம் ஏற்பாடு செய்த 2006ஆம் ஆண்டிற்கான மாபெரும் விருந்து நிகழ்விற்குத் தலைமையேற்று உரை யாற்றினார் டத்தோ சிவசுப்பிரமணியம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் உபசரணையாளர் களாக டாக்சியோட்டிகள் திகழ்வதால் டாக்சியோட்டிகள் எப்போதுமே பணிவன்பிற்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடியவர்கள் என்பதற்கு இந்த விருந்து நிகழ்வு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்று அவர் தெரிவித்தார். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு ஏற்ப டாக்சி யோட்டிகள் சொந்த பெர்மிட் பெறுவதற்கு ஒன்றிணைந்து முயற்சிகள் மேற்கொண்டு வருவது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒன்றாகும். அந்த வகையில் நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழுத் தலைவர் முத்து, செயலாளர் அர்ஜுன் மற்றும் அவரது செயலவை உறுப்பினர்கள் பாராட்டுதலுக்கு உரியவர்களாவர் என்று மேலும் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் உரையாற்றிய பத்து கேவ்ஸ் சட்டமன்ற உறுப்பினர் டத்தோ தியாகராஜன், மூவினத்தைச் சேர்ந்த டாக்சியோட்டிகள், ஒன்றுபட்ட நிலையில் இந்த மாபெரும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து இருப்பது, கிள்ளான் பள்ளத்தாக்கைச் சேர்ந்த டாக்சியோட்டிகள் சங்கம் ஒரு வலுவான அமைப்பாகத் திகழ்வதற்கு அடித்தளமிட்டு வருகின்றனர் என்பதைக் காண முடிகிறது என்றார். அண்மையில் 49ஆவது சுதந்திர தினத்தையொட்டி, இச்சங்கம் ஏற்பாடு செய் திருந்த 49 டாக்சிகள், கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, மாநகரை வலம் வந்த காட்சி, மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருப்பதாகத் தியாகராஜன் தெரிவித்தார். 'சவாரி செய்தோம், பணம் கிடைத்தது, பிழைப்பை நடத்துகிறோம்' என்றில்லாமல் ஒரு படி உயர்ந்து தேசப் பற்றுதலை வலியுறுத்துவதில் தங்களுக்கும் பங்கு உண்டு என்பதை டாக்சியோட்டிகள் நிரூபித்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

கூட்டரசுப் பிரதேச ம.இ.கா. தொடர்புக்குழுத் தலைவர் செனட்டர் எம். சரவணன், சபாய் சட்டமன்ற உறுப்பினரும் பகாங் மாநில ம.இ.கா. தொடர்புக்குழுத் தலைவருமான டத்தோ எம். தேவேந்திரன் ஆகியோர் சார்பில் அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த நிகழ்விற்குத் தமிழ்நேசன் நிருவாக இயக்குநர், உயர்திரு வேள்பாரி, சூரிமாஸ் நிறுவனத்தின் உரிமையாளர் டாக்டர் முனியாண்டி, பூமிதூமின் நிறுவனத்தின் பொறுப் பாளர் இராஜேந்திரன், டாக்டர் பசுபதி, செந்தூல் ராயா ஸ்ரீ மாக்கோத்ரா உணவகத்தின் உரிமையாளர் பாலகுரு ஆகியோர் ஆதரவுக் கரம் நீட்டினர்.

இந்நிகழ்வில், மெர்டேக்கா தின ஊர்வலத்தில் 49 டாக்சிகள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, மாநகரில் ஊர்வலமாக வலம் வந்த நிகழ்விற்குத் தலைமையேற்ற விழாக் குழுத் தலைவர் முத்துவிற்கு யுனெஸ்கோ விருது வழங்கப்பட்டதுடன் இதில பங்கு கொண்ட 49 டாக்சி யோட்டுநர்களுக்கு யுனெஸ்கோ நற்சான்றிதழ் வழங்கப் பட்டது. டத்தோ சிவசுப்பிரமணியம் மற்றும் டத்தோ தியாகராஜன் முன்னிலையில் யுனெஸ்கோ மன்ற இயக்குநர் ராம் இச்சான்றிதழை ஒப்படைத்தார். இந்த அங்கீகாரப் பத்திரத்தில் டத்தோ சிவசுப்பிரமணியம் கையெழுத்திட்டு இருந்தார். யுனெஸ்கோ அங்கீகாரச் சான்றிதழானது, தேசப்பற்றில் தங்களின் பங்களிப்பை வழங்கிய டாக்சியோட்டிகளின் பொறுப்புணர்வை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்படுவதாகும் இது மலேசிய டாக்சியோட்டிகள் அனைவருக்கும் கிடைக்கப் பெற்ற அங்கீகாரமாகும் என்று யுனெஸ்கோ மன்றத்தின் இயக்குநர் தெரிவித்தார். தவிர, சங்கத்தின் சார்பில் வசதி குறைந்த உறுப்பினர்கள் இருவருக்கு முன்பணம் செலுத்தி டாக்சிகள் ஒப்படைக்கும் நிகழ்வும் நடை பெற்றது. ஆடல், பாடல் அதிர்ஷ்டக்குலுக்கு என்று மாபெரும் கலை விழாவாக நடைபெற்ற இது போன்ற நிகழ்வு இனி ஆண்டுதோறும் தொடரும் என்றும் உறுப்பினர்களும் நிகழ்ச்சிக்கு ஆதரவு தந்தவர்களும் தங்களின் ஒத்துழைப்பை த்தொடர்ந்து வழங்க வேண்டும் என்றுச் முத்து தமது நன்றி உரையில் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட வர்கள் கலந்து சிறப்பித்தனர். *

பொ. கருணாகரமூர்த்தி

# புலம்பெயர் இலக்கியப் படைப்பாளிகளிடையே ஒரு நம்பிக்கை நட்சத்திரம்

**என். செல்வராஜா, நூலகவியலாளர், இலண்டன்**

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில், பெர்லின் நகரில் வாழும் பொன்னையா கருணாகர மூர்த்தி (08-05-1954) புகலிடப் படைப்பாளிகளில் பல காலமாகக் கவன ஈர்ப்பினைப் பெற்றுவருபவர். ஈழத்தின் வடபுலத்தின் புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கருணாகரமூர்த்தி, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் போன்ற தமிழகப் படைப்பாளிகளின் பாதிப்பால் 1976இல் இருந்து எழுதத் தொடங்கியவர். அவரது படைப்புகளை வாசிக்கும் எவராலும் அவரிடம் பொதிந்துள்ள பரந்துபட்ட அறிவை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கும். ஆழமான வாசிப்பும், நீண்டகாலத் தேடலும் அவரது படைப்புகளுக்கு உயிர் கொடுத்து வந்துள்ளன.

பொ. கருணாகரமூர்த்தி எழுதிய நாவல்கள், குறு நாவல்களைத் தொகுத்து முதலில் ஒரு தொகுப்பினை வெளியிட்டிருந்தார். ''ஒரு அகதி உருவாகும் நேரம்'' என்ற அந்த நூல் சென்னை ஸ்னேகா வெளியீட்ட கத்தினரால் ஏப்பிரல் 1996இல் வெளியிடப்பட்டிருந்தது. ஒரு நாவலும் இரண்டு குறுநாவல்களும் உள்ளடங்கிய இத்தொகுப்பில் இடம்பெற்றதொரு குறுநாவலான ''ஒரு அகதி உருவாகும் நேரம்'' தமிழகத்தில் ''கணையாழி'' சஞ்சிகையால் நடத்தப்பட்ட தி. ஜானகிராமன் நினைவுப் போட்டியில் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தான் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து இவர் மற்றொரு தொகுப்பினையும் அதே காலகட்டத்தில் வெளியிட்டிருந்தார். கிழக்கு நோக்கிச் சில மேகங்கள் என்ற சிறுகதைத் தொகுப்பும்கூட ஸ்னேகா வெளியீட்ட கத்தினரால் ஏப்பிரல் 1996 இலேயே வெளியிடப் பட்டுள்ளது. பொ. கருணாகரமூர்த்தியின் 13 சிறுகதை களைக் கொண்ட இத்தொகுதி கவிஞர் இன்குலாப்பின் முன்னுரையுடன் கூடியதாக அமைந்திருந்தது.

பொ. கருணாகரமூர்த்தியின் மூன்றாவது நூல், அவர்களுக்கென்று ஒரு குடில் என்ற பெயரில் வெளிவந்த இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும். சென்னைக் குமரன் பதிப்பகத்தினால் ஜூன் 1999இல் வெளியிடப்பெற்ற இந்நூலில் ஜேர்மனியில் வாழ்ந்த 20 வருடகால வாழ்க்கையில் தனக்கும் தான் சந்தித்தவர் களுக்கும் ஏற்பட்ட அனுபவநிலை, இரண்டாவது உலக யுத்தம் ஏற்படுத்திய கொடுமைகள், இன்றும் ஜேர்மன் முதியவர்களிடம் உண்டாகும் துன்பியல் உணர்வுகள் மற்றும் அந்த நாட்டின் அதீத வளர்ச்சியின் போக்கு களின் பிரதிபலிப்புகள் என்பன சிறுகதைகளின் கருப் பொருளாகியிருந்தன. இத்தொகுப்பில் இடம்பெற்ற உபச்சாரம் என்ற சிறுகதை ஜேர்மன்-பூவரசு சஞ்சிகை யினால் நடாத்தப்பெற்ற சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று என்வசம் கிடைக்கப்பெற்றுள்ள இவரது இரண்டு புதிய நூல்களை அறிமுகத்திற்காக எடுத்துக் கொண்டுள்ளேன். இவற்றை ஜேர்மனியில் வாழும் எழுத்தாளர் திருமதி. சாந்தினி வரதராஜன் அவர்கள் எனக்கு அனுப்பிவைத்துள்ளார். பெர்லின் இரவுகள் என்ற நூல் பெர்லின் நகரின் இரவு வாழ்க்கையை ஒரு வாடகைக் காரோட்டியின் கண்கள் வழியே சித்திரிக் கிறது. பொ. கருணாகரமூர்த்தியின் பெரிலின் இரவுகள், இந்த இரவுகளைக் கடந்துசெல்லும் மனிதர்களும் நிகழ்வுகளும் உருவாக்கும் மனச்சித்திரங்கள் வேடிக்கை யும் விநோதமும் மன நெகிழ்ச்சியும் கொண்டவை. விலகி நிற்கும் ஒரு பார்வையாளரின் மொழியில் சொல்லப்படும் கருணாகரமூர்த்தியின் பெர்லின் இரவுகள் அதன் துல்லியமான புனைகதை மொழியால் பெரும் பரவசத்தை வாசகரிடையே ஏற்படுத்துகின்றன. வாடகை வண்டி ஓட்டியாக அவர் சந்தித்த மனிதர்களை யும், அவர்களின் குணாதிசயங்களையும் ஆச்சரியப்பட வைத்த பல விநோதச் சம்பவங்களையும் கூடவே மீண்டும் ஜேர்மனியின் தலைநகராகிவிட்ட பெர்லின் மாநகரத்தின் பொலிவையும் அழகையும் கேளிக்கை மிகுந்த அதன் இரவு வாழ்க்கையையும் தணிக்கைகள் ஏதுமின்றிச் சுவாரஸ்யமாகவும், நாசுக்காகவும், சமூகப் பொறுப்புணர்வுடனும் இவர் இந்நூலில் சொல்லியிருக் கிறார். இந்நூலில் இடம்பெற்றுள்ள நினைவலைகள் முன்னர்ப் பெர்லின் இரவுக் குறிப்புகள் என்ற பெயரில் மாலனது திசைகள் இணையத் தளத்தில் 2003-2004 ஆண்டுக் காலப் பகுதியில் தொடராக வெளிவந்து வாசகரின் கணிப்பினைப் பெற்றிருந்தது.

25 வருட காலத் தொழில் அனுபவங்களை உள்ளபடியே ஒளிவு மறைவின்றித் தனக்கே புரிய அங்கதச் சுவையுடன் திசைகள் இணையத்தளத்தில் வழங்கியிருந்தார். அத்தொடரே பின்னர்ச் சென்னை அபிராமபுரம் உயிர்மை பதிப்பகத்தினால் திசம்பர் 2005இல் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. ஆறு அத்தியாயங்களுக்குள் தன்னால் விவரிக்கக்கூடிய அளவு தனது அனுபவங்களைச் சுவையோடு விவரிப்

பதுடன் ஏராளமான துணுக்குச் செய்திகளையும் புனை கதையோட்டத்துடன் தாயக, தமிழக வாசகர்கள் புரிந்து கொள்ளக்கூடியவகையில் படைத்திருக்கிறார்.

பொ. கருணாகரமூர்த்தி புலம்பெயர்ந்த சூழலில் இருந்துகொண்டு தாயக உணர்வுகளைக் கற்பனாலோக வாசியாக நின்று வாசகர்களின் மனத்தில் உருவகப் படுத்துபவரல்லர். ஒவ்வொரு கதையின் பின்னாலும், ஏதாவதொரு வகையில் புகலிடத்தின் பாத்திரம் நேரடி யாகவோ, மறைமுகமாகவோ தோற்றம் பெற்றிருக்கும். மண்ணின் மணம் அவரது கதையோட்டத்துடன் கூடி வந்து அவரை ஈழத்துப் படைப்படைப்பாளியாக இனம் காட்டிக் கொண்டிருக்கும். பெர்லின் இரவுகளில் மாத்திரம் என்னால் கதையோட்டத்தில் ஒரு வித்தியா சத்தை அவதானிக்க முடிகின்றது. வழமைக்கு மாறாக இந்நூலின் கதைசொல்லியின் வசனநடையில் தமிழக வாசகர்களை நாடிய ஒரு போக்கு காணப்படுவதை அறியமுடிகின்றது. பயன்படுத்தப்படும் உவமானங் களும் உதாரணங்களும்கூடச் சில சமயங்களில் அந்த உணர்வைத் தருகின்றன. மூலப் படைப்பு வெளிவந்த இணையத்தளத்தின் பாதிப்போ அல்லது, தமிழக வாசகர்களை நோக்கிய படைப்பாக வேண்டுமென்றே எழுதப்பட்டமையோ இதற்குக் காரணமாகலாம். இடை யிடையே தாயக மண்வாசனை ஆங்காங்கே தவிர்க்க முடியாது. இயல்பாக எட்டிப் பார்த்துக் கருணாகர மூர்த்தியை ஈழத்துப் படைப்பாளியாக இனம் காட்டி நிற்கின்றது. புகலிடப் படைப்பிலக்கியங்களைப் புகலிடச் சூழலில் எழுதவேண்டும் என விரும்பும் படைப் பிலக்கியவாதிகளுக்குப் பொ. கருணாகரமூர்த்தியின் பெர்லின் இரவுகள் நல்லதொரு முன்னுதாரணமாகும்.

கூடு கலைதல் என்ற மற்றொரு நூல் பற்றி இனிப் பார்ப்போம். இதுவும் பொ. கருணாகரமூர்த்தி யின் ஒரு சிறுகதைத் தொகுப்பு, திசம்பர் 2005இல் வெளிவந்துள்ளது. சென்னை, நுங்கம்பாக்கம் கனவுப் பட்டறை வெளியீட்டகம் இதனை வெளியிட்டுள்ளது. கருணாகரமூர்த்தியின் 10 சிறுகதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. காலம் (கனடா), பூவரசு (ஜேர்பனி), பாலம் (டென்மார்க்), மல்லிகை (இலங்கை), காலச் சுவடு, தாமரை (இந்தியா), ஈழமுரசு (பாரிஸ்), ஆகிய சிற்றிலக்கிய இதழ்களில் வெளிவந்த கதைகள் இவை. கருணாகரமூர்த்தியின் கதைகள் ஒவ்வொன்றும் ஏதொவொரு வகையில் மனத்தில் ஒரு சலனத்தை, பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது இவரது கதை சொல்லும் நேர்த்தியின் வெற்றி என்றே சொல்ல வேண்டும். என் இனமே என் சனமே என்ற முதலாவது கதை நவீனத்துவத்துக்குள் புரையோடிப்போயுள்ள சாதியத்தை 21ஆம் நூற்றாண்டில் எதிர்கொள்கின்றது. அதன் அர்த்தமற்ற செயற்கூற்றினைக் காட்டிச்செல்லும் வேளை, இரு நீண்டகால நண்பர்களுக்கிடையே கூட அதன் பாதிப்பு இருப்பதை உபதேசங்களோ, தத்த வார்த்தங்களோ இன்றி முகத்திலறைந்ததுபோல் அழுத்த மாகவும் அழகாகவும் சொல்கின்றது. ஆத்தி என்ற மற்றொரு கதை வீட்டு முன்றிலில் நின்ற ஆத்திமரத்தை ஒரு அழுத்தமான கதாபாத்திரமாக்கி விட்டிருக்கின்றது. புயலில் வன்னிமண் பாதிக்கப்பட்ட ஒரு காலத்தை மீள் நினைவூட்டும் இக்கதையில் புயலின் கோரத்தைத் தடுத்தாட்கொண்டு தன் வீட்டையே பாதுகாத்த அந்த முற்றத்து ஆத்தி மரத்தை வெட்டியழித்துவிட்ட ஒருவனின் மனப்போராட்டத்தை, அதன்மூலம் காட்ட முயற்சிக்கும் இயற்கையின் நேசிப்பினை இக்கதையில் வித்தியாசமான முறையில் வலியுறுத்தியுள்ளார். இடை என்ற கதை ஜேர்மனியில் நிகழ்வதாகக் காட்டப் படுகின்றது. ஆளைப் பார்த்து எடைபோடக்கூடாது என்பதைக் கட்டான உடல்வாகு கொண்ட அழகி ஒருத்தியைக் களவாக மேயும் கதைசொல்லியின் கண் களுக்கு அவளைப் பாதித்துக் கொண்டிருக்கும் சர்க்கரை வியாதி இறுதியில் அதிர்ச்சி வைத்தியம் அளிப்பதாகக் காட்டியுள்ளார். கண் தூங்காமல் நாம் காணும் சொப்பனம் என்ற தலைப்பில் தனது பிஞ்சுக் குழந்தை யின் சுவாரஸ்யமானதும், அங்கதச் சுவைகொண்டதும் சில சமயங்களில் சிந்திக்கவும் தூண்டும் மழலை உரை யாடல்களை மலரும் நினைவுகளாகத் தொகுத்துள்ளார். இச்சிறுகதைத் தொகுப்பில் பெர்லின் இரவுகள் போலல் லாது தாயக மண்வாசனைத் தூக்கலாகக் காணப்படு கின்றமை சிறப்பம்சமாகும். அவை கதைகளுக்கு வலுச் சேர்க்கின்றன.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகள் புகலிட இலக்கியம் என்றொரு புதிய வீச்சினை உலகெங்கும் உருவாக்கி வளர்த்து வருகின்றார்கள். தமிழக, மலேசிய, சிங்கப்பூர் மற்றும் தாயகப் பல்கலைக் கழகங்களில் புலம்பெயர் இலக்கியம் அல்லது புகலிட இலக்கியம் என்று துறைகளும், பாடவிதானங்களும்கூடத் தற்போது அறிமுகமாகிவருகின்றன. அண்மையில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் புலம்பெயர் இலக்கியத்தை ஒரு பாடமாகக் கற்கும் சுமார் 80 பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களிடையே உரையாற்றவேண்டிய வாய்ப்பு எனக்குக் கிட்டிய வேளையில் அவர்களின் கருத்திலும் கரங்களிலும் ஈழத்து எழுத்தாளர்கள் அ. முத்து லிங்கத்தினதும், மாத்தளை சோமுவினதும் நூல்களையே காணமுடிந்தது. இத்துறையில் மேலும் பல ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்கள அவர்களது கரங்களைச் சென்றடையவேண்டும் அதற்கான வழிவகைகளைக் கண்டறியவேண்டும் என்ற எண்ணம் என்னுள் அப்போது தோன்றியது. அவர்களது கரங்களைப் பொ. கருணாகர மூர்த்தியின் நூல்களும் சென்றடைய வழி செய்ய வேண்டும். தமிழிலக்கிய உலகத்தில் பொ. கருணா கரமூர்த்தி கவனிக்கப்படவேண்டிய ஒரு படைப்பாளி என்பது அவரது காத்திரமான படைப்புக்களின் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டுவருகின்றது. ❋

# புதிய பார்வை...

பொலிவான புதிய பார்வை
வையகத்துப் புதிய பார்வை

பாவையாள் புதிய பார்வை
காளையர்க்குப் புதிய பார்வை

முத்தமிழ்ப் புதிய பார்வை
முத்தமிழர்க்குப் புதிய பார்வை

ஏக்கத்துப் புதிய பார்வை
தாகத்தின் புதிய பார்வை

கவரும் புதிய பார்வை
கவர்ச்சிக்குப் புதிய பார்வை

இளமையே புதிய பார்வை
இனிமைக்குப் புதிய பார்வை

தொடக்கத்தின் புதிய பார்வை
தொடர்வதிலும் புதிய பார்வை

உழைத்தலில் புதிய பார்வை
உருவாக்குவதில் புதிய பார்வை

அறிமுகங்களும் புதிய பார்வை
ஆக்கங்களும் புதிய பார்வை

வாய்ப்புக்குப் புதிய பார்வை
வளர்ச்சிக்கும் புதிய பார்வை

வளரும் புதிய பார்வை
படிக்கும் புதிய பறவை!

பியாரன், கோலாலம்பூர், மலேசியா

## INTERNATIONAL KARAI DEVELOPMENT UNION'S PROJECTS

ஈழத்தில் உள்ள சிறு கிராமங்களுக்கான வேலைத்திட்ட உதவிகள் மூலம், சுயதேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான உதவிகளும் ஆலோசனைகளும் எம்மிடம் பல உண்டு. அவற்றைப் பெறுவதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும். இலகுவான வழியில் குறைந்த செலவில் செயற்படுத்தக்கூடிய திட்டங்களை நாம் அறிமுகப்படுத்துவோம்.

சூரியமின் உற்பத்தியும் பாவனையும்-சிறிய குடிசை முதல் பெரிய வீடு வரை எவருக்கும் பயன்படும்.

சொட்டு நீர்ப்பாசனப் பாவனை-வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோர் முதல் நடுத்தர மக்களுக்கும் பயன்தரக் கூடிய வேலைத்திட்டங்கள்.

இன்னும் பல மிகவும் குறைந்த செலவுத் திட்டங்கள் எம்மிடம் உண்டு.

தயவுசெய்து எம்மோடு தொடர்பு கொண்டு பயனைப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்குத் திரு. செந்திநாதன், திரு. ஜோதிலிங்கம்
தொலைபேசி : 020 8503 4703

We have small projects which can be introduced in Eelam to our grass root level and middle class level villagers. These projects are very simple and very effective to small farmers and consumers. These villagers can satisfy their daily living without any serious investment, because it is very cheap.

Please go to www.karainet.org - First see, If you are satisfied Please contact : ikdu@karainet.org. We are ready to help.

For further detail please contact Senthinathan or Sothilingam on 020 8503 4703

## ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயம் யுனெஸ்கோவில் இடம் பெற்றது

சுங்கை செராய் நிலக்குடியேற்றத் திட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயம் அனைத்துலகக் கல்வி அறிவியல் கலாசார அமைப்பில் இடம் பெற்றிருக்கிறது. இதற்கான அங்கீகாரப் பத்திரத்தை இதன் ஏற்பாட்டாளர் ஸ்ரீராம் ஒப்படைத்தார்.

அண்மையில் நடைபெற்ற ஆலயத் திருப்பணிக் கான திருப்பணிக் கலை இரவில் ஸ்ரீராம் இப்பத்திரத்தை ஆலயத் தலைவர் எஸ்.எஸ். பாலகிருஷ்ணனிடம் வழங்கினார்.

சுங்கை செராய்த் தொகுதியின் சட்டமன்ற உறுப் பினர் இஞ்சே சுஹாய்மி அப்துல் ரஹ்மான் அவர்களின் அரசியல் செயலாளர் ஹுசேன் முகமட் நோர் கலந்து கொண்டார்.

அம்மன் தேசம் பெயரில் இவ்வாலயம் அனைத் துலக ரீதியில் புகழப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலண்டன் சுடரொளி இதழுக்கு மலேசியாவில் செய்தியாளர்கள்

சர்வதேசக் கலை, இலக்கிய, சமூக, அரசியல் வெளியீடாகக் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலண்டனிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் இலண்டன் சுடரொளி இதழின் தமிழ்ச் செய்தியாளராக மலேசியாவைச் சேர்ந்த இரா. தயாளன் அவர்களும் ஆங்கிலச் செய்தியாளர்களாக திருமதி. துவான் திமோதி மற்றும் எ. பரமானந்தன் அவர்களும் பணியாற்ற முன்வந்துள்ளமையை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். கோலாலம்பூரிலுள்ள யுனெஸ்கோ மன்றத்தின் இயக்குநரும் சுடரொளியின் மலேசியப் பிரதிநிதியுமான ஈழவேங்கையனாரின் அறிவுறுத்தலில் இவர்களின் பணி தொடர வாழ்த்துகிறோம். -ஆசிரியர், சுடரொளி

# VINAYAGAR SATHURTHI CELEBRATIONS IN MALAYSIA



*Hindu devotees nationwide observed the annual Vinayagar Sathurthi on 27th Aug 2006. Thousands thronged temples nation wide from dawn to take part in the morning prayers (Kaalai Abishegam) and special prayers in the evening. Thousands of litres of milk were poured over statues of Lord Ganesha in every temple as Hindus celebrated the Vignayagar Sathurthi.*

*Many devotees brought milk, flowers, fruits and special sweet delicacies like morthagam and kozhakattai a favourite of Vinayagar.*

*Vegetarian meal, refreshment and sweet delicacies were served to devotees after prayers.*

*In some temples, elephant provided blessing while in some towns chariot procession bearing Lord Ganesha statue passed through residential area where devotees offered salutation to the deity.*

*Kuantan, the capital of Pahang State, witnessed the biggest celebration in the east coast state at Sri Sithi Vinayagar Temple. An internal Pal Kudam procession in the moring and late evening and an internal chariat procession led by Temple president, committee members and devotees.*



*- Text/picture by* **Eparam**

உலகத் தமிழர் நூலகத்தில்

## "சாரதா கண்ணன் கதைகள்"

மலேசிய இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தேசியத் துணைத் தலைவர் மாண்புமிகு டத்தோ சி. சுப்பிர மணியம் அவர்களின் தலைமையில் அண்மையில் தலைநகர்ச் செட்டியார்கள் மண்டபத்தில் நடைபெற்ற எழுத்தாளர் சாரதா கண்ணன் அவர்களின் "சாரதா கண்ணன் கதைகள்" நூல் உலகத் தமிழர் நூலகத்தில் இடம் பெற்றது. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆசியுடன் மலர்ந்த சாரதா கண்ணன் அவர்களின் நூல் உலக அரங்கின் இலக்கியத்தில் அங்கம் பெறுவதோடு உலக வாசகர்களின் பார்வைகளுக்கும் கொண்டு செல்லப்படும் என உலகத் தமிழர் நூலகத்தின் இயக்குநரும் யுனெஸ்கோ மன்றத் தலைவருமான ஈழவேங்கை தெரிவித்துள்ளார்.



சாரதா கண்ணனின் நூல் உலகத் தமிழர் நூலகத்தில் இடம் பெறும் வகையில் அதிகாரப் பூர்வ நினைவார்ந்த சான்றிதழ் வழங்கப்பட்டது. ஐக்கிய நாட்டுச் சபையின் யுனெஸ்கோ தமிழ்க் கூரியர் அங்கீ காரத்துடன் இந்நூல் பிரஞ்சு மொழியில் மொழியாக்கம் செய்யப்படுவதற்கு ஈழவேங்கை ஏற்பாடு செய்துள்ளார்.

### நூலகவியல்

என். செல்வராசாவை ஆசிரியராகக் கொண்ட நூலகவியல் சஞ்சிகை திசம்பர் 2005 வெளியீட்டில் ரொறன்ரோ நூலகங்களில் தமிழ்நூல் சேர்க்கைகள் என்ற தலைப்பில் வே. விவேகானந்தன் எழுதி யுள்ளார். ஈழத்துத் தமிழ் நூலியல் வளர்ச்சி பற்றிய தகவல்களை, ஈழத்துப் பதிப்புத் துறையில் தமிழியல் வெளியீடுகள் என்ற மு. நித்தியானந்தனின் கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது. பதிப்புரிமை இந்த நவீன யுகத்தில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்று உள்ளது என இ. செந்தில் நாதன் விளக்குகிறார். நூலகவியல் சிறப்பான ஓர் இதழ் என்பதை மேற்கூறிய கட்டுரைகள் வாயிலாக அறியலாம்.

வெளியீடு : குமரன் புத்தக இல்லம்,
201, டாம் வீதி, கொழும்பு 12.

# வாசிப்போம்! நேசிப்போம்!

கவிஞர் ஆனந்தி ஆறுமுகம், மலேசியா

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

ஏற்றதொரு மாநாடு தமிழுக்காக
எங்கெங்(கு) எடுத்தாலும் பொங்கு ணர்வால்
போற்றுவதும் புரப்பதுவும் தமிழர் தம்மின்
பயன்தூக்கும் கடனாகக் கருத வேண்டும்
சாற்றுவதோ ஒன்றாகிச் செயல்வே றாகும்
தகவில்லார் பிடிக்குள்ளே ஆட்கொள் ளாமல்
ஆற்றலினால் நடத்துகின்ற கவிய ரங்கில்
அழகுதமிழ்க் கவியுரைப்பேன் வணக்கம் வாழ்க!

(எண்சீர் ஒருபோகு விருத்தம்)

சங்கப் பாடலும் காப்பியத் துடனே
தொகை நூல் பன்னிரு திருமுறை யாவும்
மங்கா தொளிர்ந்தே ஆண்டுகள் பலவோ
வாய்க்கப் பெற்றும் தமிழினம் இன்(று)
எங்கோ இலக்கறி யாமல் சென்றே
இருளில் மூழ்கிக் கிடப்பதும் நன்றோ?
எங்குத் தமிழுக் கின்னல் வரினும்
எந்தமி ழோரே! கிளர்ந்தெழு வீரே!

நூலகத் தொடர்பும், நாளிதழ் தொடர்பும்
நண்ணும் வார, மாத யிதழும்
சாலவே எங்கணும் சிறந்தி ருக்கத்
தாழும் இழிநிலை தொடர்வ தேனோ?
''வாழ வழியிலை'' என்று ரைக்கும்
விளக்க மிலார்நம் மிடத்தே இருப்பின்
முளும் மனவிருள் நீக்க யாண்டும்
வாசிப் புடனே நேசிப் போமே!

தகைமிகு சிக்கந்தர் பாட்சா வாழ்க
வாழ்கவே

ஈழவேங்கையனார், யுனெஸ்கோ
மன்றம், மலேசியா

தோன்றின் புகழோடு தோன்றுக என்னும்
தெய்வப் பெருந்தகை வள்ளுவ னாரின்
ஆன்ற குறளின் பொருளு ணர்ந்தே
அரிய நற்பணி ஆற்றலா ராகி
ஊன்றும் நினைவோ ''மக்கள் யாண்டும்
உயர்நிலைக் கொள்வதே'' என்று ரைத்த
தூண்டா மணிவிளக் கெனவே ஒளிரும்
தகைமிகு சிக்கந்தர் பாட்சா வாழ்க!

புறவிருள் போலவே அகவிருள் துன்பம்
பெரிதுள தெனினும், நேர்மை வழுவா
உறவுகள் கொண்ட தோழமை யாலே
ஒப்பிலாத் தமிழின வுணர்வை விதைக்கும்
மறுவிலா மலேசிய நண்பன் இதழால்
விழிப்புற வைக்கும் இவர் பணி பெரிதே!
கரையிலாக் கல்விச் சுடரொளி பரப்பும்
கிம்மா தேசத் தலைவர் வாழ்க!

பிறப்பின் நோக்கம் யாதென யறிந்து
பொய்மைக் கிடந்தரா வாய்மையில் வென்று
வரப்பின் அரணால் விளைபயிர்க் கொப்ப
வியன்மிகு தமிழ்நெறி வாழ்வில் மருவி
அறத்தின் வழியே ஆன மட்டும்
அளவிலாத் திருப்பணி மேவும் இன்னார்
பிறப்பின் நாளில் அனைவரும் கூடி
பொற்புறு மனத்தால் வாழ்த்துவோ மினிதே!

---

# சிங்களப்படை

- கவிஞர் இரா. இரவி, மதுரை

சமாதானப் புறாக்களையே சமைத்துச்
சாப்பிடும் நவீன சிபிச் சக்கரவர்த்திகள்

புத்தம் சரணம் கச்சாமி என்ற வாசகத்தை
யுத்தம் சரணம் கச்சாமி எனப் புரிந்தவர்கள்

எத்தனை முறை எத்தனை விதமாய்த் தோற்றும்
எம் தமிழரின் வீரத்தை உணராதவர்கள்

இறுதிவரை போராடினாலும் என்றும்
இவர்களுக்கு வெற்றி இல்லை என்பதை
அறியாதவர்கள்

மனித நேயம் என்றால் என்னவென்று கேட்கும்
மனித உடல் மட்டுமே உள்ள விலங்குகள்

செஞ்சோலை மொட்டுகளை இரக்கமின்றிக் கருக்கிய
செந்நீர் வெறி பிடித்த மிருகங்கள்

ஈழம் என்ற தேன் கூட்டில் கல்லெறிந்த
ஈனப் புத்தி படைத்த வெறியர்கள்

உண்ணாவிரதம் இருந்தே உயிர்விட்ட
உயர்ந்த தமிழன் முன்னே தூசி இவர்கள்

கொள்கைக் கூட்டத்தை வெல்ல முடியாத
கூலிக்கு மார் அடிக்கும் கூட்டம்

தோல்விச் சினத்தால் அறிவை இழந்து
திணறித் தவிக்கும் தரங் கெட்டவர்கள்

ஒட்டி இருப்பது ஒத்து வரவில்லை என்றால்
வெட்டிக் கொள்வதுதான் இருவருக்கும் நன்மை

இந்தியாவில் சிறுபான்மை சீக்கியர் பிரதமர்
இலங்கையில் தமிழரைப் பிரதமராக்கும் பெருந்தன்மை
உண்டா?

ஆசையே அழிவுக்குக் காரணம் என்றார் புத்தர்
பேராசையே அழிவுக்குக் காரணமானது சிங்களருக்கு.

## ‘எப்படி மறப்பேன்’ நாயகன் சீனு மீண்டும் கதாநாயகனாகக் ‘‘கைதியின் அந்தரங்கம்’’ படத்தில்



மலேசியாவில் ‘‘எப்படி மறப்பேன்’’ திரைப் படம் நல்ல வெற்றிப் படமாக வெளியீடு கண்டது. நாயகன் சீனுவின் நடிப்பில் வெற்றி விழாப் படமாக அமைந்தது. மீண்டும் சீனு கதாநாயகனாகக் ‘‘கைதியின் அந்தரங்கம்’’ படத்தில் நடிக்கிறார். மூன்று நாடுகளில் படப்பிடிப்பு நடைபெறவுள்ளது. மலேசியா, சிங்கப்பூர், டென்மார்க்கு ஆகிய நாடுகளில் வெளிப்புறப் படப் பிடிப்புகளுக்கான பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. முழுக்க முழுக்க டிஜிட்டல் படமான ‘‘கைதியின் அந்தரங்கம்’’ திரையின் கதை குடும்பப் பின்னணியில் அமைவதோடு தமிழ் பேசும் வெளிநாட்டு மக்களுக்கு மலேசியாவை அறிமுகப்படுத்தும் படமாகவும் அமைகிறது.

இயற்கையான நடிப்பை வெளிக்கொணரும் இப்படம் கதாநாயகன் சீனுவுக்கு மேலும் ஒரு மைல் கல்.

கைதியின் அந்தரங்கம் படத்தின் நடிகர்கள் தேர்வு தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. தமிழகம் தவிர்த்த பிற நாட்டுத் தமிழ்க் கலைஞர்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது. மலேசியா மூவினம் கொண்ட மத நல்லிணக்க நாடு என்பதனைக் ‘‘கைதியின் அந்தரங்கம்’’ உலகத்திற்கு உணர்த்தும்.

இப்படத்தின் இயக்குநர் பொறுப்பேற்றுள்ள நடிப்புப் பயிற்சிக் களஞ்சியம் பயிற்றுநர் துவான் திமோதி அவர்கள் ‘‘கைதியின் அந்தரங்கம்’’ முத்திரை பதிக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். மக்கள் தொடர்பு, நல்ல நட்புறவு, நிருவாகச் சீரமைப்பு, நேர நிரவாகம், அட்டவணை தயாரிப்பு, போன்ற பல அம்சங்களில் அனுபவம் மிக்க துவான் திமோதியின் ‘‘கைதியின் அந்தரங்கம்’’ திரைப்படம் நேர்த்தியாகவே உருவாக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

இயக்குநர் ‘‘கைதியின் அந்தரங்கம்’’
G.P.O. Box 13030, 50796 KL City, Malaysia.
Email:timothymodels@yahoo.com

## உலகத் தமிழ் நூலாசிரியர்கள் ஒன்றியம்

மலேசியாவில் திசம்பர் திங்களில் நடைபெற வுள்ள முதலாவது உலகத் தமிழ் வாசகர்கள் மாநாட்டின் ஓர் அங்கமாக, உலகத் தமிழ் நூலாசிரியர்கள் ஒன்றியம் அமைக்கப்படவுள்ளது.

மாநாட்டுக் கருப்பொருளான ‘‘வாசிப்போம்! நேசிப்போம்!!’’ என்பதற்கேற்ப நூலாசிரியர்களின் படைப்புகளை மாநாட்டில் அறிமுகப்படுத்துவதோடு நூல்களை விநியோகம் செய்வதும் ஒழுங்குபடுத்தப் படவுள்ளது. மேலும் நூலாசிரியர்கள் மட்டும் பங்கு கொள்ளும் இலக்கிய அரங்கும் நிகழ்கிறது.

தேங்கிக் கிடக்கும் நூல்கள் மக்கள் மத்தியில் போய்ச் சேர வேண்டும் எனும் வேட்கையில் திளைத் திருக்கும் நூலாசிரியர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் முதல் பதிப்பு தீர்ந்துவிட்டது அஃது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கண்டுள்ளதால் மீண்டும் மறுபதிப்பை அச்சிட வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தால் அதனை உலகத் தமிழ் நூலாசிரியர்கள் ஒன்றியம் ‘‘தேசியத் தமிழ்ப் புத்தக வங்கி’’ உதவியுடன் மறுபதிப்பு செய்திட உதவும்.



தொடர்புக்கு:-
இராஜ மகா இலட்ச பிரபு
ஒருங்கிணைப்பாளர்
உலகத் தமிழ் நூலாசிரியர்கள் ஒன்றியம்
15, Jalan Suteva 1/2,
Taman Suteva suria,
08000 Sungai Petani,
Kedah, Malaysia.
017-6783247, 016-4356900

## யேர்மனியில் கலாநிதி கந்தவனம்

தனது ஆக்கங்கள் மூலம் மிக அழகாகக் கால் பதித்து ஈழத்து இலக்கிய வரலாற்றினை நகர்த்திச் சென்றவர்களுள் கலாநிதி வி. கந்தவனம் பெரும் பங்கு வகித்து வருகிறார்.

உலகப் பல்கலைக்கழகம் கலாநிதி என்ற மதிப் பார்ந்த பட்டத்தை இவருக்கு வழங்கியுள்ளது. இக் கவிஞர் 25 நூல்களுக்கு மேல் எழுதி உள்ளார். இன்றும் காலத்தால் அழியாத பல படைப்புகளைத் தந்து கொண டிருக்கிறார்.

இவர் யேர்மனியில் கலந்து கொண்ட தமிழ் நிகழ்ச்சிகளையும் அங்கு வெளிவரும் இதழ்கள் சஞ் சிகைகளில் எழுதிய கட்டுரைகள் கவிதைகள் பலவற்றை யும் தொகுத்து இந்நூலில் வழங்கியுள்ளார்.

# பிஞ்சுமுகம்

பாவலர் பொன்னரசு

வஞ்சமிலாப் பிஞ்சுமுகம் வாய்மணக்கும் மழலைச்சொல்
வற்றாத தேனருவி வாழ்வளிக்கும் எதிர்காலம்
நெஞ்சிருக்கும் மாந்தரெல்லாம் நினைக்கின்ற நிலாமுற்றம்
நெடுநாள் கனவுகளாம் நீள்கவிதை தொடர்நாவல்
வெஞ்சமரில் போர்புரிந்து திரும்பிவரும் வீரர்களும்
விரும்பிஅவர் நெஞ்சணைத்துக் கரும்பிதழைச் சுவைப்பாரே!
கொஞ்சுமொழி மாதருக்கோ கோடைமழை குளிர்தென்றல்
கோமக்கள் சிறுபிஞ்சே கோயில்கொண்ட தெய்வச்சிலை.

மாடிமுதல் குடிசைவரை மாண்புடைய இல்லமதில்
மழலையதன் இன்னிசையே தேவன்கோயில் மணிஓசை
கோடிப்பொருள் பெற்றிருந்தும் குழந்தைஒன்று இல்லையென்றால்
குப்பைமண் மேடென்பார் குடியிருக்கும் பேய்என்பார்
தேடிச்சிறு குடிசையிலும் சிறுபிஞ்சு முகம்கண்டால்
ஓடிவந்து எடுத்தணைத்து ஒருநூறு முத்தமீவார்
பிஞ்சுகளை நோகடிக்கும் பெற்றோர்கள் பலருண்டு
பள்ளியிலே சேர்க்காமல் பணிசெய்ய அனுப்பிடுவார்

கெஞ்சிப்பிறர் மனையிருத்திக் கேடுகெட்ட சிறுதொகைக்கு
அஞ்சிஅஞ்சி வெள்ளிநிலா வேலைசெய்யும் பெருங்கொடுமை
கொஞ்சமில்லை; கொஞ்சும்மொழி பேசுகின்ற பிஞ்சுமுகம்
கொந்தளித்து எதிர்த்தவரைப் பேசுதற்கும் சக்தியில்லை.
தஞ்சமவர் இருப்பதற்கும் தாங்கவொண்ணாத் துன்பத்திற்கும்
தடைசெய்து சட்டமதை இயற்றியதிவ் வரசுஇன்று

வஞ்சமிலாப் சிறுபிஞ்சை வாழ்விக்க வேண்டுமானால்
வளர்ந்தவர்கள் ஆளாகி வரலாறு படைப்பதற்கு
கொஞ்சுமொழி பிறந்தவுடன் கோடிப்பொருள் ஒதுக்கியதைக்
கல்விஅவர் கற்பதற்கே காப்புரிமை வழங்கவேண்டும்
பிஞ்சவர்கள் உண்ணுதற்கும் பீடுடனே உடுப்பதற்கும்
பாரில்அவர் வசிப்பதற்கும் பற்றுள்ள நல்வீடும்
தஞ்சமாகக் கேட்கவில்லை தரணியதன் கடமையாகும்
திருத்துங்கள் தவறவரின் சிறகுகளை நறுக்காதீர்!

# சத்தான தாய்ப்பால்!

- புலவர் வெற்றியழகன்

எடுப்பு

எத்தனை ஆயிரம் மொழியிருந்தாலும்
முத்தமிழ்க் கிணை யாகுமா - தமிழா
முத்தமிழ்க் கிணை யாகுமா?
- எத்தனை

உடனெடுப்பு

கத்து கடல்வளம் மொத்தமாய்க் கொண்டது
முத்தமிழ் மொழிதானடா - தமிழா
முத்தமிழ் மொழிதானடா!
- எத்தனை

தொடுப்புகள்

செத்துநீ போனாலுஞ்
சிறப்பாக வாழ்ந்தாலும்
வித்தகஞ் செய்தாலும்
வீணாக இருந்தாலும்
நித்தமும் நீபேசும்
நற்றமிழ் மறவாதே!
சத்தான தாய்ப்பாலாஞ்
செந்தமிழ் ஒன்றேதான்
- எத்தனை

கொத்து மலர்கோடி
காவில் மலர்ந்தென்ன?
முத்து மொழிமாதர்
மொய்குழல் படல்வேண்டும்!
மொத்த மொழிகோடி
மொய்த்தே இருந்தென்ன?
முத்துத் தமிழொன்றே
முன்னேறத் தரல்வேண்டும்!
- எத்தனை

# முதலாம் உலகத் தமிழ் வாசகர் மாநாடு வெல்லும்

பரத ஈழவாணன், கோலாலம்பூர்

பொருளினை விளக்கப் பொன்னெனப் பிறந்தப்
பொலிவுறு மொழிகளுக் கெல்லாம்
கருவெனத் திகழும் தமிழ்மொழிப் பேசுங்
கனிமகன் கண்டனன் கவிகள்
அறுபது நான்கு அகமுடன் புறமு
அணியுடன் அழகுறச் செய்தார்
அறுசுவை நாவில் நலச்சுவை வாழ்வில்
அரும்பிட இன்பமே கண்டார்.

வீரமுங் கோபம் வெறுப்புடன் அவலம்
வியப்பருந் நகையுடன் நடுவும்
பாரமாய் காயம் பயனில அச்சம்
பகர்ந்திடும் நலச்சுவை யாவும்
ஆரமாய் அங்க அறிவியல் பார்வை.
அகிலமும் அலர்ந்திடுங் வாசகர்
தீரமாய்ச் சொல்வேன் தினகரன் மொழியில்
திருதமிழ் உயர்ந்தது உலகில்.

தினகரன் மொழியில் திருதமிழ் உலகின்
திசையெலாம் மிளிர்ந்திடச் செய்ய
கனமுறு சாலை அமைவது வழியில்
கனிவுடன் அரும்பணி யாற்றும்
மணமுறு உலக வாசகர் மாநாடு
மலேசிய குழுவின ரெல்லாம்
குணநல மோடு சுதேன மரும்பக்
குவலய நாதனைத் துதித்தேன்.

# சமஷ்டிக்கு ஒப்பாத நிலை : தமிழீழம் தவிர வேறென்ன?

முனைவர் அரு. கோபாலன், ஆசிரியர் : எழுகதிர்

இலங்கைத் தமிழர் சிக்கலைப் பொறுத்தவரை அற (அகிம்சை) வழிப்போராட்டமாகவும், ஆயுதவழிப் போராட்டமாகவும் சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து உரிமை பெற 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தமிழர் மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

இங்கே இருவகைப் போராட்டங்களைப் பற்றியும் குறிப்பிடுவதற்குக் காரணம், ''தமிழர் தரப்பில் ஆயுதம் தூக்கப்பட்டதால் தான் அவர்களுடைய கோரிக்கை பயங்கரவாதமாகப் பார்க்கப் பட்டு, வெற்றி பெற முடியாத நிலைக்கு ஆளானது'' என்று சிலர் புரியும் வாதம் விதண்டாவாதம் என்பதை எடுத்துக்காட்டத்தான்.

## சமஷ்டி கட்சி

ஆம்; அற (அகிம்சை) வழிப்போராட்டத்தை முன்னெடுத்த தந்தை செல்வாவும், மற்றவர்களும் எடுத்த எடுப்பிலேயே தமிழ்த் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைக்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கையில் சிங்களருடன் கூடிவாழவே விரும்பி, இணைப் பாட்சிக் கோரிக்கையையே முதலில் முன்வைத்தனர். அதனால் தந்தை செல்வா தலைமையில் இயங்கிய அமைப்புக்கு 'தமிழரசுக் கட்சி' என்றே பெயர் இருந்தாலும், அது 'சமஷ்டி கட்சி' (Federal Party) என்றே நடைமுறையில் அழைக்கப்பட்டது. அந்த அளவுக்கு இலங்கையில் தமிழர்-சிங்களர் இணைப் பாட்சிக் கோரியே 1975 வரை ஈழத்தமிழ் மக்கள் அறவழியில் போராடி வந்தோம்.

1961 இல் தந்தை செல்வா தலைமையில் தமிழ்ப் பகுதியில் நடந்த சத்தியாக்கிரகத்தின்போது சிங்கள அரசாங்கம் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு, அஞ்சல் விநியோகம் உட்பட அரசுப் பணிகளை சத்தியாக்கிரகத் தொண்டர்களே ஆற்றும் நிலை ஏற்பட்ட போது கூட அவர்கள் ஒருதலைப் பட்சமாக சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொள்ளவில்லை.

## தமிழரின் பெருந்தன்மை

காரணம், சமஷ்டியாட்சிதான் அப்போது தமிழ் மக்களின் கோரிக்கையாக இருந்தது. இத்தனைக்கும் வெள்ளையரிடமிருந்து இலங்கைக்கு முதன்முதலில் விடுதலை கோரியவர்கள் தமிழர்களேயொழிய, சிங்களரல்லர். அந்த விடுதலை உரிமை பெரும்பான்மை மக்கள் என்ற முறையில் சிங்களத் தலைமையிடம் கையளிக்கப் பட்டதைக் கூடத் தமிழ்மக்கள் எதிர்க்கவில்லை.

உள்ளபடி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த போது தமிழ்த்தலைவர்கள் நினைத்திருந்தால், அது தங்கள் கைக்கு வருமாறு செய்திருக்க முடியும். ஏனென்றால், அப்போது முக்கிய பொறுப்புகளில் எல்லாம் அவர்களே இருந்தனர்.

ஆனால், சனநாயக உணர்வின் காரணமாகவும், சிங்கள மக்களுடன் சகவாழ்வு நடந்தவே விரும்பியதன் காரணமாகவும் தமிழ் மக்களில் யாருக்கும் அந்த எண்ணம் வரவில்லை.

## சிங்களப் பேரினவாதம்

அதேவேளை சுதந்திரம் கிடைத்த ஆறே மாதத்தில் இலங்கைத் தமிழினத்தின் ஒரு கூறாகிய மலையகத் தமிழர்களின் குடியுரிமை-வாக்குரிமைகளைப் பறித்து, அவர்களை நாடற்றோராக்கிய கொடுமையை எதிர்த்தும் சிங்களப் பேரினவாத ஆட்சி பொருட்படுத்தாதலேயே, தமிழ்ப் பகுதிகளின் சுயாட்சியைத் தக்கவைத்துக்கொள்ள சமஷ்டி ஆட்சி கோரிப் போராடப் புகுந்தனர்.

''ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு ரெட்டைத் தாழ்ப்பாள்'' என்பதுபோல ஈழத்தமிழரின் பாரம்பரியப் பகுதியான வடக்கு கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நடத்தி, 'எல்லாம் சிங்களப் பகுதியே' என்றாக்க முயன்றதாலேயே சமஷ்டி கோரிய தந்தை செல்வாவையே தமிழ்த் தனிநாடு கோர வைத்தது.

## ரணிலும்-மகிந்தவும்

''இன்றைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு'' என்று சர்வதேச சமுதாயமும் சொல்கிறது. இந்தியாவும் சொல்கிறது. ஏன்; தமிழினப்படுகொலையைத் தொடர்ந்து நடத்தி வரும் சிங்களப் பேரினவாத சிறீலங்கா ஆட்சியாளர்களும் சொல்கிறார்கள். ஆனால், ''ஒற்றையாட்சியின் (Unitary Government) கீழ்தான் தமிழரின் உரிமை பற்றிப் பேசலாம்'' என்கிறார்களே தவிர, இணைப்பாட்சி (Federal Setup) என்ற அளவுக்கு இறங்கி வரவே மறுக்கிறார்கள்.

முன்பு தமிழர் பிரச்சினை பற்றித் தந்தை செல்வாவுடன் போட்ட ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்த ஐக்கிய தேசியக்கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் இன்றைய தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, அதிபர் மகிந்தராஜபக்ச ஆகிய இருவரும் ''இனப்பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் இணைந்து நிற்கிறோம்'' என்று சொல்லுகின்ற இந்தக் காலகட்டத்தில்கூட ''ஒற்றையாட்சியை மாற்றி அமைப்போம்'' என்று அவர்கள் முன்வரவில்லையே!

## ஒரே தீர்வு...

மாறாக, 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக ஏற்பட்ட ஒரேயொரு நன்மையான ''வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரே தமிழ் மாகாணம்'' என்பதைக் கூட இலங்கை உச்சநீதிமன்றத் தீர்ப்பின்மூலம் ''செல்லாது'' என்று அறிவித்துள்ளனர்.

ஆகவே, ''இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தமிழீழம் தவிர வேறு எந்தத் தீர்வும் நிரந்தர நன்மையைத் தராது'' என்பது முடிந்த முடிபாகும். அதை முன்னிருத்தாத எந்த ஆதரவும் தமிழர்களுக்கு உண்மையான ஆதரவு ஆகமாட்டாது.

*

## I CAN READ IT! CAN YOU...?

I cdnuolt blveiee taht I cluod aulaclty uesdnatnrd waht I asw rdanieg.

Teh phaonmneal pweor fo hte hmuan mnid, aoccdrnig ot a rscheearch ta

Cmabrigde Uinervtisy, ti dseno't mtaetr ni waht oerdr hte ltteres ni a

wrod rae, hte olny iproamtnt tihng si taht hte frsit nad lsat ltteer eb

ni hte rghit pclae. hte rset acn eb a taotl mses nad ouy acn sitll raed

ti whotuit a pboerlm. Tihs si bcuseae teh huamn mnid deos not raed ervey lteter yb istlef, btu teh wrod sa awlohe. Azanmig huh? yaeh nad I awlyas

tghuhot slpeling was ipmorantt!

## KNOW YOUR NATURE

"When you're content,
when you're happy,
you actually become kind.
You are forgiving.

Contentment, peace, joy, and fulfillment—
when we feel those, ...
we actually react to things
very differently
than when something is amiss.

The whole world changes when we're happy.
The outlook is different.
Things are good.
The sun is shining,
even on a cloudy day.
Yet when something inside is not fulfilled,
any little thing can become intolerable.

If you concur even slightly with that,
what do you think you ought
to be doing in your life?
What should you try to do?
The keyword here is *try*.
What should you work on?
Of what should you be aware?
To me,
it's trying to make some effort
towards feeling peace and
contentment in one's existence.
There is a mine of peace within
that we only have to detect and witness,
Can we feel that peace that's already within?
The answer is yes.

What we're looking for is within us—that's good news.

## 10 most stupid questions people ask in obvious situations...

1. At the movies: When you meet acquaintances friends...
Stupid Question:- Hey, what are you doing here?
Answer:- Don't U know, I sell tickets in black over here..

2. In the bus: A heavy lady wearing pointed high-heeled shoes steps on your feet...
Stupid Question:- Sorry, did that hurt?
Answer:- No, not at all, I'm on local anesthesia.....why don't you try again.

3. At a funeral: One of the teary-eyed people ask...
Stupid Question:- Why, why him, of all people.
Answer:- Why? Would it rather have been you?

4. At a restaurant: When you ask the waiter
Stupid Question:- Is the "Butter Paneer Masala" dish good?
Answer:- No, its terrible and made of adulterated cement. We occassionaly also spit in it.

5. At a family get-together: When some distant aunt meets you after years...
Stupid Question:- Munna, Chickoo, you've become so big.
Answer:- Well you haven't particularly shrunk yourself.

6. When a friend announces her wedding, and you ask...
Stupid Question:- Is the guy you're marrying good?
Answer:- No,he's a miserable wife-beating , insensitive lout...it's just the money.

7. When you get woken up at midnight by a phone call...
Stupid Question:- Sorry. Were you sleeping?
Answer:- No. I was doing research on whether the Zulu tribes in Africa marry or not. You thought I was sleeping....you dumb witted moron.

8. When you see a friend/colleague with evidently shorter hair...
Stupid Question:- Hey have you had a haircut?
Answer:- No, its autumn and I'm shedding......

9. At the dentist when he's sticking pointed objects in your mouth...
Stupid Question:- Tell me if it hurts?
Answer:- No it wont. It will just bleed.

10. You are smoking a cigarette and a cute woman asks...
Stupid Question:- Oh, so you smoke.
Answer:- Gosh, it's a miracle .......it was a piece of chalk and now it's in flames!

**Timothy Mat Janggut**, Malaysia.

## கோலாலம்பூர் சிலாங்கூர் எழுத்தாளர் வாசகர் இயக்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

வாசிப்பதின் வழி நமக்கு நல்ல தகவல்கள் கிடைக்கின்றன. பல நூல்களைப் படிப்பதின் வழி நன்மைகள் அடைகிறோம்.

வளரும் பிள்ளைகளே! வீடடில் ஒரு நூலகத்தை அமைத்துக் கொள்ளுங்கள். ஓய்வு உள்ள போதெல்லாம் படியுங்கள். நீங்களும் கல்விமான்களாகவும் பட்டதாரிகளாகவும் ஆகலாம். ''ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்; வாசிப்பை ஒரு நாளும் மறக்க வேண்டாம்'' ''தடுக்கி விழுந்தாலும் புத்தகத்தின் மீது தடுக்கி விழு'' யானையின் பலம் தும்பிக்கையிலே; மனிதனின் பலம் நம்பிகையிலே; மாணவ மணிகளின் பலம் கல்வி கேள்வியிலே.''

இளையோர்களின் பலம் மன உறுதியிலே தன்னம்பிக்கையிலே தன்முனைப்பிலே; தேசத்தின் முன்னேற்றம் உழைப்பாளர்களின் கையிலே

**வாசிப்போம் நேசிப்போம்**
**வாசிப்பை நேசித்தால்**
**நெடுங்காலம் வாழலாம்**
**வாசிப்பை சுவாசிப்பேம்**
**வாசிப்பை சுவாசித்தால்**
**வலுவான வாழ்வு அமையும்**
**வாசிப்பை வளர்ப்போம்**

''ஒரு நாளாகினும் ஒரு நாழிகையாவது வாசி'' அதுவே உன் அறிவுப் பசிக்கு அறுசுவை விருந்து.

சுவாசிக்கவும் மறக்காதே வாசிக்கவும் மறக்காதே. தினமும் தினசரி பத்திரிக்கைகள் வாங்கி வாசி, வாரா வாரம் வார இதழ்களை வாங்கி வாசி, மாதா மாதம் மாத இதழ்களையும் உங்களுக்குத் தேவையான நூல்களையும் வாங்கி வாசியுங்கள்.

வாசி வாசி! நல்லதையே யோசி யோசி! நல்லெண்ணம், சொல், செயல், சிந்தனைகள் யாவும் மிகவும் நன்றாகவும் அருமையாகவும் அமையும். மன உளைச்சலின்றி இரட்டிப்பு மகிழ்ச்சியாக வாழலாம். வாழ்வில் உயரலாம், வாசிப்போம் நேசிப்போம். வாழ்நாளை நீட்டிப்போம்.

வாசிப்பை மையப்படுத்தி மலேசியாவில் நடைபெறும் முதலாவது உலகத் தமிழ் வாசகர் மாநாடு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

வாழ்க வளமுடன்

**அம்பாங் சுப்ரா**

தலைவர்,

கோலாலம்பூர் சிலாங்கூர் எழுத்தாளர்

வாசகர் இயக்கம், மலேசியா.

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளாக இயங்கத் தமக்குள் சில வேளைகளில் போரில் ஈடுபட்டிருந்த போதிலும் தான் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவரென்றும் தமிழ் இணைப்பாகவும் கருதி வந்தனர். பெருநிலமன்னரும் குறுநிலமன்னரும் தம் எல்லைகட்குள் அரசு செலுத்தி வந்தாலும் தம்மனைவரின் நாட்டையும் தமிழகமென்றும் பொதுமை கட்டிய மூவருலகமென்றும் அழைத்தனர். தமிழ் மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்தது. தமிழ் நாட்டின் எல்லைக்கப்பால் இருந்த நாடுகளை 'மொழிபெயர் தேயம்' என்று அழைத்தனர். புறநானூறும் சிலப்பதிகார மும் இவ்வாற்றலைப் புலப்படுத்தும் இடங்கள் பல. கனகவிஜயர் தமிழர் வீரத்தை ஏளனம் செய்தகாலை. 'தென்தமிழாற்றல் அறிந்திலராங்கு' கூறிச் சேரர் வட நாட்டின் மீது படையெடுத்தனர். தமிழ் மக்களுக்குத் தம் சொந்த அரசின் பற்றோடு தமிழ்நாட்டுப்பற்று என்று எல்லாத் தமிழர்களையும் அடக்கிய பற்று இயல் பாக அமைந்திருந்தது. தமிழ்ப் பாணரும் புலவரும் குறுநில மன்னரிடமும் பெருநில மன்னரிடமும் சென்று அன்னாரை வாழ்த்திப் பரிசில் பெற்றனர்.

**அருட்திரு தனிநாயக அடிகளார்.**

### பெரியாரின் பெருந்தொண்டர்

### மானமிகு பொன். கோவிந்தசாமி காலமானார்

தமிழகத்தில் 25-04-1930 அன்று பிறந்த பொன். கோவிந்தசாமி, 6 வயதில் மலேசியாவுக்குத் தன் தந்தையாருடன் வந்து, பேராக் சித்தியவானில் வாழ்ந்து பின் தமது வாலிப வயதில் கூலிம் பட்டணத்திற்கு வந்து பால்மரம் வெட்டும் தொழிலாளியாகப் பணிபுரிந்தார்.

இளம் பிராயத்திலிருந்தே மலேசியத் திராவிடர் கழகத்தில் தீவிர ஈடுபாடு உடையவராக விளங்கிய இவர் பெரியாரின் கொள்கைகளில் அளவற்ற ஈடுபாடு கொண்டு தமது இறுதி மூச்சுவரை ம.தி.க.வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கூலிம் ம.தி.க.வின் பொருளாளராகவே உயிர் நீத்தார். ம.தி.க. வுக்காக இவர் ஆற்றிய சேவையினை, தொண்டினைப் பாராட்டிக் கடந்த 2003ஆம் ஆண்டு தலைநகரில் இவருக்குப் ''பெரியாரின் பெருந்தொண்டர்'' எனும் பட்டம் அளிக்கப் பெற்றுச் சிறப்பிக்கப் பெற்றார்.

செர்டாங் ஜிம் கூன் தோட்டம், கூலிம் சிபூ யோங் தோட்டம் ஆகிய தோட்டங்களில் தேசியத் தோட்டத் தொழிற்சங்கக் காங்கிரசின் செயலாளராக நீண்ட காலம் கடமையாற்றினார். இவரின் அரிய முயற்சியால் சிபூ யோங் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை வாராந்திர விடுமுறை வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1994 ஆம் ஆண்டு தம் துணைவியார் இறந்து அடக்கம் செய்யப்பட்டபோது அங்கேயே, அப்போதே தனக்கொரு சவக்குழியைப் பணம் தந்து பதிவு செய்து கொண்டவர்.

கடந்த 10-10-2006 அன்று இரவு பத்து மணிக்குப் பொன். கோவிந்தசாமி இயற்கை எய்தினார்.

# 10 ஆயிரம் ஆணிகள் கொண்ட மேடையில் ஆடும் நங்கை!

செபஸ்தியர் கலைக்கூடம் இதுவரை மூன்று மலேசிய கின்னஸ் சாதனைகளை ச் செய்துள்ள வேளையில் இளையோர்களுக்கும் வழிகாட்டுவதில் கலைக்கூடம் இதுபோன்ற சாதனைகள் செய்ய ஊக்கு வித்து வருகிறது.

அதன் அடிப்படையில் குமாரி மாதவி இந்த முயற்சியில் வெற்றி பெறுவதற்கு அனைத்து நட வடிக்கைகளையும் கலைக்கூடம் எடுத்து வருகிறது.

இளையோர்கள் சாதனைகளைப் படைக்க முன் வரவேண்டும் என்ற முன்னாள் பிரதமர் தன் மகாதீர் முகமட் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப இதுபோன்ற முயற்சிகளைச் செய்வதில் ஆர்வம் காட்டி வருவதாகக் கூறினார்.

ஆணி மீது பரதம் ஆடும் இச்சாதனைப் படைப்பு நிகழ்வில் 'சிறந்த அன்னையர்' ஒருவர் சிறப்பிக்கப் பட்டுள்ளார் என்று கூறினார்.

ஈப்போ டத்தோ பண்டார், கங்கை சட்டமன்ற உறுப்பினர் டத்தோ ஆர். கணேசன் ஆகியோர் சிறப்பு வருகை தருவர் என்று கூறினார்.

## புதிய சாதனை படைக்கத் திட்டம்

10 ஆயிரம் ஆணிகள் பதித்த மேடையில் ஏறி நின்று பரதம் ஆடுவதன் மூலம் புதிய சாதனை ஒன்றைப் படைக்கத் தயாராகி விட்டார் இளம் நாட்டியத் தாரகை குமாரி மாதவி.

ஈப்போ செபஸ்தியர் கலைக் கூடம், ஈப்போ பாராட் ம.இ.கா. ஏற்பாட்டில் நடைபெற உள்ள 'அன்னையர் தின விழா' நிகழ்ச்சியில் இவர் இச் சாதனையைப் படைக்கவிருக்கிறார்.

பரதக் கலையை ஈப்போ திருமதி வேணுகோபாலிடம் முறையாகப் பயின்ற பிறகு தமிழ் நாடு கும்பகோணத்தில் கலைமாமணி விஜய மாலதியிட மும் கற்றுத் தேர்ந்தவர். தற்போது நாட்டியாஞ்சலி நடனப்பள்ளி நடத்திவரும் குமாரி மாதவி, இந்தச் சாதனையைச் செய்வதற்கு ஈப்போ செபஸ்தியர் கலைக் கூடம் ஊக்கம் கொடுத்துள்ளது என்று கூறினார்.

10 ஆயிரம் ஆணிகள் மீது சுமார் 30 நிமிடங்கள் இடைவிடாது நடனமாடிச் சாதனை செய்வதற்கு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறினார்.

இம்முயற்சிக்கு நான் தயாராகிய வேளையில் முதல் மூன்று நாள்கள் பயிற்சி செய்தபோது கால் பாதங்களில் ஆணிகள் பதம் பார்த்தன என்ற போதிலும் தொடர்ந்து பயிற்சிகள் மேற்கொண்டதன் பயனாக இந்தச் சாதனையைச் செய்ய முடியும் என்ற முழு நம்பிக்கை யுடன் இருப்பதாகக் கூறினார்.

என்னுடைய இந்த முயற்சி நடனக் கலை மீது இளையோர்கள் மத்தியில் ஆர்வத்தை அதிகரிக்கச் செய் வதாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன்.

இம்முயற்சியில் வெற்றி பெற அன்றாடம் பயிற்சிகள் செய்து வருகிறேன்.

சுடுமணல், சுடுநீர் ஆகியவற்றில் நடனம் ஆடுவது மற்றும் சிந்தனையை ஒரு நிலைப்படுத்துவது போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன்.

இதற்கு முன்பு இதுபோன்ற முயற்சிகளில் நான் ஈடுபட்டது இல்லை. எனினும், இந்தச் சாதனையைச் செய்வதற்கு என்னுள் ஆர்வம் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

ஆணி மீது பரதம் ஆடும் இம்முயற்சியை மலேசிய கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோடு வெளிநாட்டு ஒளிபரப்புக் கழகத்திற்கு இந்தச் சாதனையை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று செபஸ்தியர் கலைக்கூடத்தின் இயக்குநர் திரு. செபஸ்தி யன் இருதயம் கூறினார். *

சந்திரகுப்தன்

## 'வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்'

தமிழர் தம் வரலாற்று ஆவணங்களைத் தனது எழுத்தின் வழி இவ்வுலகிற்கு வழங்கி வரும் மாத்தளை சோமு எழுதி வந்துள்ள 'வியக்க வைக்கும்' தமிழர் அறிவியல் நூலின் அறிமுக விழா அண்மையில் கிள்ளானில் நடைபெற்றது.



மலேசியத் தமிழ் நெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற, இந்த நூல் அறிமுக விழாவில் திருவாளர்கள் மதியழகன், பரத ஈழவாணன், தொழிலதிபர் இளம்செழியன், மாரியப்பனார், எழுத்தாளர் மாத்தளை சோமு ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# தமிழ் மொழியின் உயர் பெரும் சிறப்பு

பேராசிரியை கு. மஞ்சுளா, வேலூர், தமிழ்நாடு

**த**மிழ் மொழியின் தொன்மையைப் பற்றி,

*''திங்களொடும் செழும்பரிதி தன்னொடும்*
*விண்ணொடும் உடுக்க ளோடும்*
*மங்குல்கடல் இவற்றுடன் பிறந்த தமிழ்''*

என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்! ''என்றுமுள தென் தமிழ்'' என்பதும் இதே கருத்தையே தருகிறது. தமிழ் இல்லாத காலம் இத்தரணியில் இல்லை என்பதே சான்றோர்களின் துணிவு. உலகின் முதல் மொழியாக அல்லது உலகில் முதலில் தோன்றிய சில மொழிகளில் ஒரு மொழியாக உயர்ந்த மொழியாகத் தமிழ் விளங்குகிறது. தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலைவாணர்களும் என்று பிறந்தவள் என்றுணர முடியாத இயல்பை, ஏற்றத்தைப் பெற்றவள், தமிழ்த் தாய், இத்தமிழ்த் தாயின் உயர்வும், சிறப்பும், பெருமையும் அளவிடற்கு அரியது.

## உயர்வு

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை, அமிழ்தம், நீர்மை, ஒப்புரவு என்பது பொருளாகும். தரணியின் மூத்த மொழியாம் தமிழ் மொழி பிற மொழிகளைக் காட்டிலும் உயர்வு சிறப்புடையது. உலகத்தின் எல்லா மொழிகளும் எழுத்து, சொல், யாப்பு, அணி என்பவற்றுக்கு மட்டுமே இலக்கணம் கண்டன, இவற்றை வழங்கும் மனிதனின் வாழ்க்கைக்கு இலக்கணம் கண்ட மொழி தமிழன்றி வேறில்லை.

*''தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே''* - *இனிமை*

*''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரளவின்றே சாரல்''* - *அன்பு*

*''இரப்போர் ஏந்துகை நிறைய! புரப்போர்*
*புலம்புஇல் உள்ளமொடு புதுவ தந்து உவக்கும்*
*அரும் பொருள் வேட்டல்''* - *ஈகை*

*''மனத்துக்கண் மாசு இல்லாமல் இருப்பதே அறம்''*
*''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்''* - *அறம்*

*''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்''* -*உயிர்க்கொலை தீது*

*''தமக்கென முயலா பிறர்க்கென முயல்பவர்''*
*''யாம்அம் இரப்பவை* -*சுயநலமற்ற உள்ளம்*

*பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்*
*அருளும் அன்பும் அறனும்''* -
*பொதுநலம் - தூய்மையான பக்தி உள்ளம்*

*''சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்''* -*நடுநிலைமை*

*''என்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை''* -*பழிச்செயலுக்கு அஞ்சுதல்*

*''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
*''அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு''* - *தீமையற்ற நல்உள்ளம்*

*''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*''உயிர்நீப்பர் மானம் வரின்''* - *மான உணர்ச்சி*

*''ஓரினெய்தல் கரங்கள் ஓர் இல்''*
-*நிலையாமைமிக்க வாழ்க்கை*

*''யாதும் ஊரே யாவரும் கேளிர்''* -*ஒருமைப்பாடு*

*''ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்*
*ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை''*
-*தீமையற்ற நல் உள்ளம்*

*''சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்*
*பிறப்புப் பிறிதி ஆகுவது ஆயின்*
*மறக்குவேன் கொல்லெனக் காதலன் எனவே''*
- *கற்பின் திண்மை*

என அமைந்த தமிழ் இலக்கியப் பாடல்கள் மக்களின் வாழ்க்கைக்குரிய பண்பாட்டு நாகரிகச் சிறப்பை எடுத்து உரைப்பன ஆகும். மக்கள் வாழ்க்கைக்குரிய நன்னெறிகளைக் கூறும் பைந்தமிழின் பின்னே பச்சைப் பசுங் கொண்டலான திருமால் சென்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

## பெருமை

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் திருமழிசை ஆழ்வார். இவர் சொல்லாய், பொருளாய், சொல்ல முடியாத சோதியாய், எல்லாமாய் இருக்கும் திருமாலின் மீது அளவில்லாத பக்தி கொண்டவர். இதனால் பக்திசாரர் என்று அழைக்கப்பட்டவர். இவருக்குக் கணி கண்ணன் என்னும் ஒரு சீடன் இருந்தான். ஒரு முறை திருமழிசை யாழ்வார் ஒரு கிழவியைக் குமரியாக மாற்றினார். அதையறிந்த அந்நாட்டு மன்னன் தன் முதுமையை மாற்றி இளமையளிக்குமாறு வேண்டினான். ஆழ்வார் மறுக்க, அவரை ஊரைவிட்டே வெளியேறும்படி பணித்தான் அரசன், உடனே கணிகண்ணன், திருமாலிடம் சென்று,

*''கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி*
*மணிவண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய*
*செந்நாப் புலவன்யான் சொல்கின்றேன் நீயும்உன்றன்*
*பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''*

என்று பாட, திருமால் பாம்புப் பாயைச் சுருட்டிக் கொண்டு புறப்பட்டார். அரசன் தன் தவற்றை உணர்ந்து அழைக்க, ஆழ்வார், சீடன், ஆண்டவன் ஆகிய மூவரும் காஞ்சிக்குத் திரும்பினர். இச்செயலால் பைந்தமிழ்ப் பாட்டுக்குப் பணிந்து நடந்த திருமால், ''சொன்ன வண்ணம் செய்த பெருமாள்'' என வழங்கப்பட்டார் என்னும் செய்தி தமிழின் பெருமைக்குச் சான்று பகர்வதாகும்.

## சிறப்பு

''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல இனிதாவது - எங்கும் காணோம்'' என்றார் பாரதியார். இத்தகைய, தமிழின் சுவைக்காக மன்னன் ஒருவன் தன் உயிரையே அர்ப்பணித்தான் என்ற செய்தி தமிழின் சிறப்புக்கு மற்றொரு எடுத்துக்காட்டு ஆகும். கலம்பக நூல்களில் மிகப் பழைமையானது நந்திக் கலம்பகம், ஒரு வரலாற்று நூலாகத் திகழும் தனிச் சிறப்புப் பெற்றது. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என வழங்கப்பெறும் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பட்ட நூல் இது. மூன்றாம் நந்திவர்மன் கி.பி. 825 முதல் 850 வரை ஆண்டவன்.

நந்திக் கலம்பகத்தின் பாடல் ஒன்றைத் தற்செய லாய்க் கேட்ட நந்திவர்மன், நூல் முழுவதையும் கேட்க விரும்பினான். நூல் முழுவதையும் கேட்டால் அவன் உடல் எரிந்து இறப்பான் என்பதை அறிந்தும் தமிழ்ப் பாடல் கேட்கும் தணியாத ஆவலுக்குத் தன்னையே பலியாகக் கொடுக்க முன் வந்தான், நூல் முழுவதையும் கேட்ட மன்னன் இறந்தான், தரணியாளும் மன்னன், தமிழுக்காகத் தமிழ்ப் பாடலுக்காகத் தன் உயிரையே உவந்தளித்தான் என்பது உலக வரலாற்றில் வேறெங் கும் காண முடியாத நிகழ்ச்சியாகும்.

கலம்பகத்தைக் கேட்டு உயிர்விட்டான் நந்தி வர்மன், அவன் இறந்ததாகக் கொண்டு ''கையறு நிலை'' யாகப் பாடிய பாடல் நந்தியின் சிறப்பையும், புலவரின் கவித் திறத்தையும் ஒருசேர விளக்கும் உயரிய பாடலாகும்.

*''வானுறு மதியை அடைந்ததுன் வதனம்*
*மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி*
*கானுறு புலியை அடைந்ததுன் வீரம்*
*கற்பகம் அடைந்ததுன் கரங்கள்*
*தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்*
*செந்தழல் அடைந்ததுன் தேகம்*
*நானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்*
*நந்தியே நந்தயா பரனே''*

சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்க இக்கலம்பகத்தின் எல்லாப் பாடல்களும் உள்ளத்தைக் கொள்ளை கொள்பவையே. நந்திக் கலம்பகத்தின் ஆசிரியர் இன்னார் என்பது உறுதியாகக் கூற முடிய வில்லை நந்திவர்மனின் மாற்றாந் தாய் மக்கள் நால்வருள் ஒருவன், இவனைக் கொல்வதற்காகவே வசை வைத்து இந்நூலைப் பாடினான் என்றும் பாடிய வனின் பெயர் காடவன் என்பதாக இருக்கலாம் என்றும் கருதுவர்.

திருவரங்கநாதனிடம் காதல் கொண்ட நிலையில் நாச்சியார் பாடும் பாடல் தமிழின் சுவைக்கு மற்றொரு சான்றாகும். திருமாலின் வாயில் உள்ள பாஞ்ச சன்யம் என்னும் சங்கினை நோக்கி மாதவன் தன் வாயின் சுவையும், நாற்றமும், எத்தகையது என வினவும் பாடல் குறிப்பிடத்தக்கது.

*''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ*
*திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ*
*மருப்பொசிந்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்*
*விரும்புற்றுக் கேட்கிறேன் சொல்லாழி வெண்சங்கே.'*

என்னும் பாடலில் ஒலிப்பது தெய்விகத் தமிழ் அன்றோ! இத்தகைய தமிழின் சொற்சுவையிலும், பொருட் சிறப்பிலும், தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் போப்பு அய்யர் (ஜி.யு. போப்பு) ஆவார். அய்ரோப்பியராக இருந்தாலும் தம் கல்லறையில் ''நான் ஒரு தமிழ் மாணவன்'' என்று பொறிக்கச் செய்து பெருமை அடைந்த பெருந்தகையர். இவர் தமிழின் பெருமையை விளக்கும் வகையில் கட்டுரைகள் எழுதியும், சொற் பொழிவுகள் செய்தும், வெளிநாட்டில் தமிழ் அன்னை யின் சிறப்பைப் பரப்பியவர். இவ்வாறு தமிழின் சொற் பொருள் சிறப்பிக்காத தமிழ் அறிஞர்கள் மட்டுமின்றி, மேலைநாட்டினரும் தமிழுக்காக அருந்தொண்டாற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய தமிழின் சிறப்பை என்னென்று கூறுவது பொதுவாக எல்லா மொழிகளிலும் எழுத்திற் கும் சொல்லிற்கும் இலக்கணம் கூறுகின்றன. ஆனால், எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டு மின்றி மக்கள் எத்தகைய ஒழுக்க நெறியோடு வாழ வேண்டும் எனப் பொருள் இலக்கணம் கூறுகின்ற மொழி தமிழ் மொழியாகும். தம் மொழிக்காக இறைவன் தமிழ் மொழியின் பின்னே சென்றதும், மன்னன் உயிர் நீத்ததும், வெளிநாட்டவரும் தமிழுக்காக அரும்பணி செய்திருப்பதும் பெருமைக்குரிய செய லாகும். தமிழ் மொழி தமிழர்களின் அகப்புற வாழ்க்கைக்கு இலக்கணம் கூறியிருப்பது தமிழுக்கே உரிய உயர் பெரும் சிறப்பாகும். *

---

## யாழ்ப்பாணச் சரித்திரம்

யாழ்ப்பாணம் யாழில் வல்ல ஒரு பாண ருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டமையாயின் யாழ்ப் பாணம் எனப்படுதலாயிற்று. யாழ்ப்பாணம் உலக வரை படத்தில் கடுகளவு, ஆனால் அதன் சரித்திரம் பெரிய நாடுகளின் சரித்திரங்களோடு வைத்து நோக்கத்தக்க பெருமையுடையது.

யாழ்ப்பாணம் ஏறக்குறைய 5,000 ஆண்டுக் கால வரலாறுடையது. நாகரும், இயக்கரும் தமிழரே. இலங்கையில் புத்த சமயிகளாக மாறியோர் முதலில் இயக்கர், பின்னர் நாகர். இலங்கையின் ஆதிகுடிகள் தமிழரே.

இலங்கையின் வன்னிப்பகுதியில் அடங்காப் பற்றில் ஆட்சி செய்த தமிழ் அரசன் பண்டார வன்னியன். ஆங்கிலேயரிடம் 1811 ஆம் ஆண்டு போரில் தோற்கும் வரை தொடர்ச்சியாகத் தமிழ் அரசரின் ஆட்சி இலங்கையில் நடைபெற்று வந்தது. அந்த நீண்ட வரலாற்றை அறிந்துகொள்ள விழை வோர் இந்த நூலையும் கட்டாயம் படிக்க வேண்டும்.

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம. வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

## உங்கள் இலட்சியத்தை உருவாக்கச் சில வழிகள் :

'இலட்சியம்' உள்ளவர்களுக்கு அதனைச் சரி பார்த்துக் கொள்ளவும் இன்னும் முடிவெடுக்காதவர் களுக்கு உதவியாகவும் இருக்கக்கூடிய சில வழிகளை இப்பொழுது பார்ப்போம்.

கீழ்க்காண்பனவற்றுக்குப் பதில்காண முயலுங்கள். புத்தகத்தை மூடி வைத்துவிட்டு ஆழமாக யோசியுங்கள். யோசித்த பின்பு பென்சிலால் எழுதுங்கள்.

1. உங்களை ஈர்க்கும் விஷயங்கள் எவை?
2. எவற்றைச் செய்யும்பொழுது உங்கள் மனது மகிழ்வு கொள்கிறது?
3. நீங்கள் மதிக்கும்/வியக்கும் மனிதர்கள் எவர்? அவர்தம் சாதனைகள் என்ன?
4. இன்னும் 2 ஆண்டுகளில், 10 ஆண்டுகளில், நீங்கள் உங்களை எங்கே நிறுத்திப் பார்க்க விரும்புகிறீர்கள்?
5. எந்த விஷயம் உங்கள் திறமையை முழுமையாக வெளியுலகிற்கு உணர்த்தும் என நினைக்கிறீர்கள்?
6. உங்களைச் சோர்வின்றி/அலுப்பின்றிச் செய்யத் தூண்டும் விஷயங்கள் எவை?

மேற்சொன்னவற்றைச் செய்ய (self talk) எனப்படும் 'தன்னோடு பேசுவது' ஆகிய சுயபேச்சு அவசியம்.

இதனைச் செய்திருக்கிறீர்களா? செய்திருப்பீர் கள். நாம் தனியாக இருக்கும் பொழுது, தனியாக நடக்கும்பொழுது, பிரயாணத்தின்பொழுது இது நிகழலாம். நாம் நம்மோடு பேசுவோம். உரையாடல் போலக்கூட இருக்கும். ஓசையற்ற உள்மன உரையாடல். இதுபோல எப்பொழுதோ, அதுவாக நிகழ்வதைவிட, நாம் முயன்று, by design என்று சொல்வார்களே அதுபோலத் 'தன்னோடு பேசும்' நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும்.

வாரம் ஒருமுறை அல்லது இருமுறை ஒரு மணி நேரம் இப்படிச் செய்யலாம். ஒவ்வொரு மனிதனும் 'தன்னோடு' தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

இன்றைய சூழலில் Loss of touch with self ஏற்பட்டு வருகிறது. டி.வி., பத்திரிகைகள், அலுவலகம், பிரயாணம் என நம்மைப் பற்றிய சுய சிந்தனைகளைச் சிந்திக்க விடாத கட்டாயங்களில் மாட்டிக்கொண்டு விடுகிறோம்.

அதன்மூலம் ஒரு மேம்போக்கான, அடுத்தவர் தீர்மானிக்கும் விஷயங்களில் ஈடுபடுகிறோம். பொழுது காணாமல் போய்விடுகிறது. சில சமயம் வாழ்க்கையும் கூட!

நாம் நம்மோடு பேசுகையில் நம்மைப் புரிகிறது. நிதானம் வருகிறது. மீண்டும் அந்தக் கேள்விகளுக்குச் சரியான விடை காண முயலுங்கள். உங்களுக்கு உங்களைப் புரியும். அது இலட்சியத்தை/இலக்கை உருவாக்கிக் கொள்ள உதவும்.

## மற்றவர்களோடு பேசுங்கள்

நம்மைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காக நம்மோடு பேசுவது மட்டுமல்ல இன்னும் ஒரு படிமேலே போய், நம் நலம் விரும்பிகளிடம், விவரம் தெரிந்தவர்களிடம் வெளிப்படையாகவே நம்மைப்பற்றிக் கேட்கலாம். ஆனால், முடிவு நிச்சயம் நம்முடையதாகவே இருக்க வேண்டும். ஆயினும், Perspective எனப்படும் பார் வையை அகலப் படுத்த மற்றவர்/விவரம் தெரிந்தவர்/ நம்மைத் தெரிந்தவர் களின் உதவியை நாடுவது நல்லது.

சத்ரபதி சிவாஜிக்கு உணவுடன், அவர் தாய் ஊட்டிய வீர உணர்வு செய்த விந்தைகள்தாம் அவர் கனவு கண்டு நிறுவிய பெரிய சாம்ராஜ்யம். மகாத்மா காந்திக்கு அரிச்சந்திரா நாடகம் ஏற்படுத்திய தாக்கமே அவருடைய பல நல்ல இலட்சியங்களுக்கு விதையாக அமைந்தது.

ஆகவே, நம் குழந்தைகளுக்கும் நாம் நல்ல சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தால், அறிமுகப் படுத்தினால் அவர்களுக்கும் உயர்ந்த இலட்சியங்களை அமைத்துக்கொள்ளும் ஆர்வமும் ஊக்கமும் பிறக்கும்.

இலக்கு அல்லது இலட்சியம் எப்படி இருக்க வேண்டும்?

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையை வாழ் வதன் மூலம் மகிழ்வுற வேண்டும். அந்த மகிழ்ச்சி வெற்றி பெறுவதன் மூலம் கிடைக்கிறது. வெற்றி தன் இலக்குகளை அடைவதன் மூலம் கிடைக்கிறது. அத்தகைய இலக்குகள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அவை மனிதனுக்கு மனிதன் மாறுபடும். ஒரே மனிதனுக்கே பல்வேறு காலச் சூழ்நிலைகளில் இலக்குகள் மாறுபடும்.

பள்ளி இறுதித் தேர்வில் குறிப்பிட்ட சதவிகித மதிப்பெண், கல்லூரியில் குறிப்பிட்ட பாடத்தில் சேரும் வாய்ப்பு, இன்ன நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பதவி நிலை என ஒருவருடைய இலட்சியங்களைத் தொடர்ந்து மாறுபட்டுக்கொண்டேயும் இருக்கலாம். அது ஒரு நீண்ட கால வாழ்க்கை முழுவதற்குமான ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.

## இலக்குகளின் வகைகள் (Types of Goals)

இலக்குகள் பெரும்பாலும் கால அளவினைப் பொறுத்து வேறுபடுகின்றன.

1. வாழ்க்கை இலட்சியம் அல்லது இலட்சியங்கள்
2. தொலைதூர இலக்கு (Long term goal)
3. குறுகிய கால இலக்கு (Short term goal)
4. மாறிக்கொண்டே இருக்கும் திட்டம் (Rolling Plan)
5. மேலும் ஒரு குறிப்பிட்ட இலக்கினை அடையும் ஸ்ட்ராடெஜிக் ப்ளான் எனவும் இலக்குகள் பல் வகைப்படும்.

திட்டம்/இலக்கு/இலட்சியம் எதுவாக இருந்தாலும் நாம் இங்குக் காணும் விஷயங்கள் அவற்றிற்குப் பொருந்தும்.

## இலக்கின் இலக்கணங்கள்

1. இலக்கு முன்னமேயே முடிவு செய்யப்பட வேண்டும்.

ஒரு விஷயத்தை அடைந்த பிறகு, பின்னாளில் அதனை இலக்காகக் கொள்ள இயலாது. உதாரணமாக,

- சென்னையில் மட்டும் ஆறு உணவுவிடுதிகள் கட்டி நடத்த வேண்டும் என்று 1980-இல் முடிவெடுத்து, அதனை இலட்சியமாக்கி நடத்துதல்.
- வாடிக்கையாளர் ஒவ்வொருவரின் குறைகளையும் இரண்டே நாள்களில் தீர்ப்பது என்ற குறியீடு.
- பஞ்சாபு மாநிலத்தில் தீவிரவாதத்தை அறவே ஒழிப்பது.

என அவை எந்த விதத்திலும் இருக்கலாம். ஆனால், அதை முன்கூட்டியே முடிவுசெய்து, அதை நோக்கிச் செயற்பட்டு, அடைதலுக்குப் பெயர்தான் இலக்கினை அடைதல் (Achieving a Goal) என்பதாகும்.

நாம் முன்பு சொன்னதுபோல, ஏதோ ஒரு பேருந்தில் ஏறி அது நின்ற இடத்தில் இறங்கி, அந்த ஊருக்கு வந்ததைப் பற்றி ஒரு விசேஷமும் இல்லை. அடுத்த வருடம் காசிக்குப் போக வேண்டும் எனத் திட்டமிட்டு, இலக்கு நிர்ணயித்து, அதற்கான விவரங்கள் தேடி, விடுப்புக்குத் திட்டமிட்டு, மற்ற வேலைகள் முடித்து, அனுமதி பெற்று, குடும்பத்தினரின் ஒத்துழைப் போடு, பொருளாதாரச் சிக்கலின்றி அதிக விசேஷ நாளில், சிரமமின்றிக் காசி சென்று வந்தால் குறுகிய காலத் திட்டமான காசி போய் சுவாமி தரிசனம் செய்து வருதலை முழுமையாக அடைந்ததாகச் சொல்லலாம்.

2. இலக்கு தனக்கோ மற்றவர்க்கோ பலனுள்ளதாக அமைதல் வேண்டும்.

சில சமயங்களில் கின்னஸ் உலக சாதனை செய்கின்றவர்களைப் பற்றிய செய்திகளைக் கேட்கிறோம். பல அரிய விஷயங்களுக்காக அவர்கள் பெயர்கள் சாதனை செய்தவர்களின் பட்டியலில் இடம் பெறுகின்றன.

சிலரோ, தங்கள் பெயர் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற வேண்டுமென்பதையே தங்கள் 'இலக்காக'க் கொண்டு முயன்று அதனைச் செய்தும் விடுகின்றனர்.

அவர்களுடைய செயல்திறனையும், விடா முயற்சியையும் பாராட்டத் தோன்றுகிறது.

அதே சமயம், அவர்களில் சிலர் 'சாதனை'கள் செய்ய எடுத்துக் கொள்ளும் விஷயங்கள்தாம் கொஞ்சம் நெருடுகின்றன.

24 மணிநேரம் விடாது கைதட்டுதல், 'எச்சிலை மிக அதிக தூரம் எட்டித் துப்புதல்' போன்றவை கூடச் சாதனைகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றனவே! இதற்காக ஒரு மனிதன் வாழ்நாளில் எவ்வளவு காலம் செலவு செய்கிறான்.

நாம் வெற்றிபெற எடுத்துக்கொள்ளும் விஷயங்கள் உன்னதமானவையாக, தனக்கோ தன் குடும்பத்திற்கோ, சமுதாயத்திற்கோ, உலகிற்கோ நன்மை பயப்பதாகவும் இருத்தல் அவசியம்.

## இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன குட்டிக் கதை

ஓர் ஊரில் அண்ணன் தம்பி இருவர் இருந்தனர். அண்ணன் துறவறம் பூண்டு சாமியாராகிக் காட்டுக்குள் சென்றுவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பின் அண்ணன் ஊருக்குத் திரும்பினார். அவரைப் பார்த்துத் தம்பி ஆவலுடன் கேட்டார், ''ஏதாவது கிடைச்சுதா?'' சாமியாரான அண்ணன் சொன்னார். ''ஓ நிறைய கிடைச்சுதே'' என்று அவர் தம்பியை ஓர் ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றார்.

'உன்னால் இந்த ஆற்றின் மீது நடந்து எதிர்க்கரையை அடைய முடியுமா?'' என்று அண்ணன் கேட்டார். தன்னால் முடியாது என்பதைத் தம்பி ஒப்புக் கொண்டார். அதன் பிறகு அண்ணன் தண்ணீரின் மீது நடக்க தன்னால் முடியும் என்பதைக் காட்ட தண்ணீரின் மீது நடந்தார். அவர் நடப்பதையே அதிசயமாகப் பார்த்தபடி இருந்த தம்பி, அண்ணன் திரும்பி வரக் காத்திருந்தார்.

அண்ணன் முகத்தில் பெருமைபொங்கத் திரும்பி வந்து 'எப்படி என் திறமை'' என்று கேட்டார். ''அற்புதம்'' என்று சொல்லிய தம்பி, ''இந்தக் கலையைக் கற்றுக்கொள்ள உங்களுக்கு எவ்வளவு காலம் பிடித்தது?''

''சுமார் 15 வருடங்கள்'' என்றார் அண்ணன், மிகப் பெரிய கர்வத்துடன், ''அதோ தெரிகிறானே ஓடக்காரன், அந்தக் கரைக்கு ஓடத்தில் இட்டுச் செல்ல அவன் எவ்வளவு காசு கேட்பான்?''

''அரையணா'' என்றார் அண்ணன் வெகு அலட்சியமாக. ''அரையணாவில் முடியக்கூடிய ஒரு தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள 15 ஆண்டுகளை வீணடித்து விட்டீரே'' என்றாராம் தம்பி.

ஆக, நாம் எடுத்துக்கொள்ளும் இலட்சியம்/இலக்கு உண்மையில் பலனுள்ளதாக இருக்கவேண்டும். ஏன் எனில் அதை அடைய நாம் பல விஷயங்களைத் தியாகம் செய்கிறோம். ✱

*(தொடரும்)*

சிவமயம்

**PERSATUAN PENGANUT SRI KARUMARIAMMAN PAYA BESAR, LUNAS, KEDAH,**

NO. 227, LOT 852, Paya Besr, 09600, Lunas, Kedah Darulaman, Malaysia

(No. Pendaftaran 1183/93)



# ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயம்!

**பாயா பெசார், லுனாஸ், கெடா டாருலாமன், மலேசியா**

(அரசாங்கப் பதிவு எண். 1183/93)

# மொழியும், சமயமும் நமது இரு கண்கள்!

அனைவருக்கும் வணக்கங்கள் உரித்தாகுக!

நம்முடைய பாயா பெசார், லூனாஸ் அருள்மிகு கருமாரியம்மன் ஆலயம், ஆலய நிலத்தினை வாங்கும் முயற்சியில் அதிக சிரத்தை எடுத்து ஆலய நிருவாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

இதற்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக ''அம்மனுக்குக் காணி நிலம் வேண்டும்'' என்கிற நிகழ்வின் வாயிலாக நிதி திரட்டும் நிகழ்வுகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இதுவரை கிட்டதட்ட 4 இலட்சம் மலேசிய வெள்ளி ஆலய நிலத்திற்காகச் சேமிக்கப்பட்டு வங்கி யில் உள்ளது. இந்த நிதி ஆலய நிலத்தை வாங்கு வதற்குப் போதுமானதாக இல்லை. 5½ (ஐந்தரை) ஏக்கர் நிலத்தினை வாங்கி நிலத்தின் ஒரு பகுதியை ஆலயத் திற்கும், நிலத்தின் இன்னொரு பகுதியைத் தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றினை அரசாங்கத்தின் முழு அனுமதி யோடு கட்டுவதற்கு ஆலய நிருவாகமும், ஆலய அங்கத்தினர்களும் வட்டாரத்தில் செயற்படும் அரசியல் மற்றும் தொண்டூழிய இயக்கங்களும், தமிழ் இந்துப் பெருமக்களும் இணைந்து தங்களின் தார்மீக ஆதர வினை நல்ல முறையில் நல்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தின் செயல்நடவடிக்கைகளைப் பாராட்டி உலக அம்மன் திருக்கோயில் ஒன்றியத்திலும் இணைக்கப்பட்டு மலேசிய யுனேஸ்கோ மன்றத்தின் நற்சான்றிதழும் கடந்த 30-09-2006இல் வழங்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே, சமயத்தின் மீதும் தமிழ்மொழியின் மீதும் நாடு மற்றும் உலகளாவிய நிலையில் எத்தனையோ நல்ல கொடையுள்ளம் படைத்த பல செல்வர்கள் இருக்கின்றார்கள். அக்கறையுள்ள தமிழ்த் தலைவர்கள், சமயத் தலைவர்கள், சமய இயக்கங்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்க் கவிஞர் பெருமக்கள், தமிழ் வணிகப் பெருமகனார்கள், தொழிலதிபர்கள், அரசியல்/அரசியல் சார்பற்ற இயக்கங்கள், தமிழ் இந்துப் பெருமக்கள் இருக்கவே செய்கின்றார்கள்.

ஆகவே, அப்படிப்பட்ட இதய மலர்களின் அன்பான உதவியை ஆலய நிருவாகம் பணிவன்புடன் நாடு கின்றது.

அம்மனுக்குக் காணி நிலம் வேண்டும்!

தங்களால் இயன்ற சிறிய நன்கொடையினை வழங்கினால் எதிர்காலம் உங்களை வாழ்த்தி வணங்கும்!

Public Bank Saving Account No. 4199-3958-29

தொடர்புக்கு : 04-4841903


019-4623435

013-4590172

012-5726199

019-4489072

012-5834818



நன்றிகள் உரித்தாகுக!

என்றும் அன்புடன்,

ஆலய நிருவாகத்தின்

சார்பில்,

சி.ம. சத்தியசீலன், ஆலய

கௌரவச் செயலாளர்.

## ஈழம் தந்த இனிய தமிழ்க்கொடை

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு வளர்த்த மண் தமிழீழ மண். ஈழத்துச் சான்றோர்கள் தமிழுக்கு ஆற்றிய அரும்பணியை நினைவு கூரும் நூல். இச்சான் றோர்கள் வாழ்ந்த காலத்தையும் செய்த தமிழ்த் தொண்டையும் இந்த நூலாசிரியர் இளங்குமரனார் பதிவு செய்து உள்ளார். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் தமிழ் நாட்டில் செய்த தமிழ்ப் பணியையும் சைவப்பணி யையும் நாம் அறிகின்றோம். மொழிபெயர்ப்புக் கலையிலே ஈழத்தவர் தலைசிறந்தவர் என்னும் பெரும் புகழை விவிலிய மொழிபெயர்ப்பின் மூலம் ஈழத்தவருக்குத் தேடிக் கொடுத்தவர் ஆறுமுக நாவலர்.

பதிப்புத் துறைக்கு முன்னோடியாக இருந்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. தமிழ்ச் சங்கம் நிறுவியவர் த. கயிலாய பிள்ளை. தற்பொழுது உலகத் தமிழ் ஆர்வலருடைய தமிழ் உள்ளங்களில் எல்லாம் வீற்றிருப்பவர் கவிஞர் காசி ஆனந்தன். ஈழம் தந்த இனிய தமிழ்க்கொடை நூல் மூலம் ஈழத்துச் சான்றோர்களின் இனிய தமிழ்ப் பற்றையும் அறிய முடிகிறது.

# DEEPA OLI VIZHAA
# (Deepavali)

Peace is within You.
Peace is within your family.
Peace is within the community.
Peace is within the society.
Peace is within the nation.
Peace is within this Universe.
Peace is within Every living and Non living thing.
Peace is everyone.
Peace in everything.
Peace is everywhere.
Peace is anything.
Peace is nothing.
Within that nothingness is everything.
Om Santhi... Santhi... Santhi...

Tuan Timothy Mat Janggut
Unesco Mandram, Tamil World

---

## List of Temples affiliated to Ulaga Amman Thirukovilgal

1) Arulmigu Annai Dhurgai Amman Thirukkovil
Taman Medan, Petaling Jaya, Selangor, Peninsular Malaysia.
2) Arumigu Annai Meenaatchi Amman Aalayam
Sg.Serai, Kuang, Selangor, Peninsular Malaysia.
3) Arulmigu Annai Mariamman Aalayam
Sree Muda, Selangor, Peninsular Malaysia.
4) Arulmigu Annai Nageswari Amman Aalayam
Bangsar, KL City, Peninsular Malaysia.
5) Arulmigu Siva Subramaniar Aalayam
Ulu Yang Baru, Batang Kali, Selangor, Peninsular Malaysia.
Note: Only One Murugan Temple
6) Arulmigu Annai Maha Mariamman Aalayam
Kepong Garden, Kuala Lumpur, Peninsular Malaysia.
7) Paya Besar Arulmigu Annai Karumariamman Aalayam
Lunas, Kulim, Kadaram Kondan, Peninsular Malaysia
8) Arulmigu Dhurgai Amman Aalayam
Desa Tun Razak, Kuala Lumpur, Peninsular Malaysia.
9) Arulmigu Annai Raja Mariamman Aalayam
Sungai Buloh New Town, Selangor, Peninsular Malaysia.
10) Arulmigu Annai Kaliamman Aalayam
Johore Bahru City, Johore, Peninsular Malaysia.


## "கடாரம் கொண்டான்" தேசத்தில்
# தமிழ்த் தேச ஆய்வுக்குழு

யுனெஸ்கோ மன்றத்தின் கீழ் இயங்கும் தமிழ் தேச ஆய்வுக்குழு (Tamil World Rescur 247) இராஜ இராஜ சோழனின் வழித்தோன்றலான இராஜேந்திர சோழன் ஆண்ட கடாரம் கொண்டான் தேசத்து நினைவிடமான புஜங்சனா பள்ளத்தாக்குக்கு வருகைதந்து ஆய்வை மேற்கொண்டது.

15ஆம் நூற்றாண்டில் 1404ஆம் ஆண்டுக்கு முன்னதாக இந்து சைவ ஆகம ஆட்சியைக் கொண்டதாகவே "குமரிக் கண்டம்" திகழ்ந்தது. குமரிக்கண்டப் பிராந்தியங்களான துமாசிக், கமலம், பாலம்பாம், பாலி, சயாம் (சுவர்ண பூமி), இந்தோ சைனா, சாவா, சுமத்திரம், பர்மியம், திராவிடம், சுலாவாசி, போர்னியோ, பாபுவா நியூகினி, இலங்கைப் போன்று மற்றப் பிற பகுதிகளான மாலைத் தீவு ஆகியவற்றை உள்ளடக்கியதே குமரிக் கண்டம்.

குமரிக் கண்டத்தின் ஒரு பகுதிதான் "கடாரம் கொண்டான்" நிலப்பரப்புப் பிராந்தியமும். முதலில் கோவில் கட்டுவது அதில் ஜோதி வழிபாடு வழியாகத் தியானமும் யோகாசனமும் உள்ளடக்கி ஆட்சி முறையை நடைமுறைப்படுத்துவது என்பதைத் தமிழர் பாரம்பரிய மரபாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளதாகத் தெரிகிறது.

தமிழ் பேசும் மக்களின் பலவீனத் தன்மைகளைப் பயன்படுத்தி அந்நியர்கள் தமிழரை வீழ்த்தி விட்டதை இங்குக் கண்கூடாகக் காண முடிகிறது.



"கடாரம் கொண்டான்" ஆய்வுக் குழுவில் செஞ்சொல் தமிழ்மிகு ஈழ வேங்கையனார் தலைமையில் வர்த்தகர் டத்தோ எம். பசுபதி, சமயமிகு சத்திய சீலன், சமய கு. சுப்பிரமணியம், வர்த்தகர் ரமேஷ் நலாசலம் ஆகியோர் கொண்ட குழுவினர் இடம் பெற்றிருந்தனர்.

"கடாரம் கொண்டான்" பெயர் மீண்டும் இடம் பெறவும், உலகத் தமிழர் பழஞ்சுவடிக் காப்பகத்தில் 'கடாரம் கொண்டான்' பற்றி இடம் பெறச் செய்ய வேண்டிய பணிகளை மேற்கொள்ளவும் முடிவு செய்து உள்ளனர் இக்குழுவினர்.

தகவல், செய்தி, படம்
Timothy Mat Janggut, Malaysia

# உழைப்பில் நின்ற வல்லிக்கண்ணன்

பழ. அதியமான்

தன் 86 ஆம் வயதில் ரா.சு. கிருஷ்ணசாமி என்ற இயற்பெயர் கொண்ட வல்லிக்கண்ணன், சென்னையில் காலமானார்.

வல்லிக்கண்ணனின் லௌகீக வாழ்க்கை ஏற்றத் தாழ்வற்ற, வளமற்ற வாழ்க்கை. ஆனால் இலக்கிய வாழ்க்கை அப்படி அல்ல. 'கோயில்களை மூடுங்கள்!', 'அடியுங்கள் சாவு மணி', 'எப்படி உருப்படும்?', 'கொடு கல்தா?'... இதெல்லாம் கோபம் பொங்க, 'கோரநாதன்' என்ற புனைபெயரில் அவர் எழுதிய இளம்வயது நூல்கள். 'நையாண்டி பாரதி' என்ற புனைப்பெயரும் அவருக்குண்டு. 'கல்யாணத்துக்குப் பிறகு காதல் புரியலாமா?' 'கல்யாணம் இன்பம் கொடுப்பதா? இன்பத்தைக் கெடுப்பதா?' என்ற பட்டிமன்றப் பாணி நூல்களும், 'செவ்வானம்', 'விடிவெள்ளி' என்ற தலைப்பில் நூல்களும் அவர் வாழ்க்கையில் நடுப் பாகத்தில் எழுதியவை. சிறுகதை, நாவல், கவிதை எனத் தொடர்ந்து இவ்விடைக்கால எழுத்து வாழ்க்கை.

பின்னால் இறுதிக் கால வாழ்க்கை திறனாய்வு, சிறுபத்திரிகை, புதுக்கவிதை வரலாறு என்ற நிலையை அடைந்தது. கோபம் பொங்கிய காலம் அவர் துறையூரில் கிராம ஊழியனில் பணிபுரிந்த காலம் (1948 வரை). பின்னர்ச் சென்னைக்கு வந்து, ஹனுமானில் பணியாற்றத் தொடங்கியது முதல் சென்னைக்கும் ராஜவல்லிபுரத்துக்கும் நாடாறு மாதம் காடாறு மாதமாக வாழ்ந்த காலப்பகுதி, (1979 வரை) அவரது இடைக் காலம். அதாவது ஏறக்குறைய 60 வயது வரை; பிறகு சென்னையிலேயே தங்கிவிட்ட சாகித்திய அகாதெமி விருதுக்குப் பின்னான இறுதிக் காலம்.

கோபம் பொங்கி எழும் எழுத்தாளனாக உருவாகத் தொடங்கி, படைப்பியக்கத்தின் வளர்ச்சியில் நிதானத்துக்கு வந்த படைப்பாளியாக வளர்ந்து இறுதிக் கட்டத்தில் ஒரு விமர்சகனாகியது வல்லிக்கண்ணனின் இலக்கியப் பரிணாமம்.

முதல்கட்டமான 'துறையூர்' காலத்திலேயே 30 வயதிற்குள் ஏறக்குறைய 25 நூல்கள் வெளிவந்து விட்டன. 26 ஆம் வயதிலும் 28 ஆம் வயதிலும் மட்டும் ஐந்து நூல்கள் (1946, 1948) வெளியாயின. இடைக்கால, சென்னை இராஜவல்லிபுரம் (60 வயதிற்குள்) வாழ்வில் மேலும் 20 நூல்கள் பதிப்பைக் கண்டிருக்கின்றன. மீதி 30 நூல்கள் அவரது இறுதி, சென்னை வாழ்வில் வந்தவை. 1991 இல் மட்டும் ஏழு நூல்கள், மொத்தம் 75 நூல்களைத் தம் 86 வயதுக் காலத்தில் அவர் எழுதியுள்ளார். இதில் இரண்டு நூல்கள் தன் வாழ்க்கை வரலாற்று நூல்கள்.

60 ஆண்டுக் காலம் (40கள் முதல்) சிறு பத்திரிகைகளுடனும் சிறு பத்திரிகை எழுத்தாளர்களுடனும் தொடர்பில் இருந்தார். சிறு பத்திரிகைகளின் வரலாற்றை அவற்றின் உள் விவகாரங்களோடு அறிந்தவர் அவர், வாசகர்கள், வளரும் எழுத்தாளர்கள் ஆகியோருக்குத் தொடர்ந்து கடிதம் எழுதும் வழக்கத்தைக் கைக்கொண்டவர். கடும் உழைப்பைச் செலுத்தக் கூடியவர். தன்னை முன்னிறுத்திக் கொள்ளாதவர். இலக்கியச் சர்ச்சைகளில் மௌனம் காப்பவர். அதிர்ந்து பேசாதவர், புதுமைப் பித்தனின் மேதைமையை உணர்ந்து, அவருக்கு 'ஏகலைவ'னாகத் தன் நூல் ஒன்றை (குஞ்சாலாடு, 1946) அர்ப்பணித்தவர்.

எண்ணிக்கையில் 75 நூல்களை எழுதியிருந்தாலும் 'பாரதிதாசனின் உவமை நயம்' (1946), 'புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' (1977), 'சரஸ்வதி காலம்' (1986), 'பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை' (1981) ஆகியவை வல்லிக்கண்ணனின் வலிமைமிக்க அடையாளங்கள்.

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை என்று தமிழ் இலக்கியத்தின் எல்லா வகைமைகளிலும் முயன்று பார்த்திருக்கிறார்.

ஆசிரியராகச் சில சிறு பத்திரிகைகளில் இருந்து பார்த்திருக்கிறார். திருமணம் என்ற பந்தத்தை ஏற்காத தன் மூலம் குடும்பம் என்னும் கவலை தரும் பிரச்சினையிலிருந்து தப்பித்துவிடலாம் என்று நினைத்தார். ஆனால் தனக்கு முன் இறந்த அண்ணனின் பெரிய குடும்பத்தைத் தன் கடைசிக் காலத்தில் அவர் காப்பாற்ற வேண்டிவந்தது.

வல்லிக்கண்ணன் எழுதுவதுபோலவே பேசுவார். இலக்கிய நடை, வாக்கிய முடிப்பு, ஒருமை, பன்மை மயக்கமற்ற எழுத்து முறையே அவரது பேச்சு முறை. உணர்ச்சியை மறந்தும் கலந்துவிடாத வைராக்கியம் வல்லிக்கண்ணனுக்கு உண்டு.

வரகவிகள், 'வர நூலாசிரியர்'கள் மறுக்காமல் முன்னுரை தரும் ஒரு முன்னுரைத் திலகத்தை இழந்துவிட்டார்கள். இலக்கியக் கூட்டங்கள் தமக்குத் தலைமை வகிக்கும் ஒருவரை இழந்துவிட்டன. தியாகம், அர்ப்பணிப்பு என்று பேசுபவர்கள், பொருத்தமான வாழும் உதாரணம் ஒன்றை இழந்துவிட்டார்கள். நவீன தமிழ் உலகம் உழைப்பில் நின்ற ஒருவரை இழந்துவிட்டது. ❋

*நன்றி : காலச் சுவடு*

# கதை நேரம் - 5 நீங்களும் இளைப்பாறலாம்

தி.க. சந்திரசேகரன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

ஒரு காட்டில் ஒரு முயல் இருந்தது. எப்போதும் காட்டினுள் ஓடி, ஆடி அலைவதே அதன் வேலையாக இருந்தது. தன் உணவுக்காகவும், தன்னுடைய துணைவர் களைத் தேடியும், தன்னைப் பகைவர்களிடமிருந்து பாது காத்துக் கொள்ளவும் அது எப்போதும் ஓடிக்கொண்டே இருந்தது.

ஒரு நாள் அந்த முயல், காட்டில் ஒரு மரத்தின் மேல் ஒரு காகம் உட்கார்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தது. காகம் பாதிக் கணகளை மூடியபடி, தென்றலை அனுபவித்தபடி மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்தது.

அன்று முயல் அதே மரத்தைப் பலமுறை கடந்து ஓடியது. ஒவ்வொரு முறை மரத்தைக் கடக்கும் போதும், மரத்தின் உச்சியில் காகம் மகிழ்ச்சியாக இருந்ததைப் பார்த்த உடன், அதன் உள்ளத்தில் பொறாமை பிறந்தது. பின்னர்க் காகத்தைப் பார்த்து முயல் கேட்டது. ''என்ன காக்கை அண்ணாச்சி, நான் பார்க்கும்போதெல்லாம், மகிழ்ச்சியாக மரத்தில் உட்கார்ந்துகொண்டு, கண்களை மூடியபடி, குளுமையான தென்றல் காற்றை அனு பவித்துக்கொண்டிருக்கிறீர்களே, இது எந்த வகையில் நியாயம்? என்னைப் பாருங்கள்! நான் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிறேன். உணவுக்காக ஓடுகிறேன்; என்னைக் கொல்லவரும் எதிரிகளிடமிருந்து தப்பிப் பதற்காக ஓடுகிறேன்! ஓடி, ஓடிச் சலித்துவிட்டேன்! நான் மட்டும் ஓடி, ஓடி அலைய வேண்டும். நீங்கள் மட்டும் குளுகுளு காற்றை அனுபவிக்க வேண்டும்! இது நியாயமா? கடவுளுக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை? நீங்களே சொல்லுங்கள்.''

அதற்குக் காகம் பதிலளித்தது, ''என் அன்பு நண்பனே, நம் எல்லோருக்கும் முடிவு எடுக்கும் உரிமையைக் கடவுள் சமமாகக் கொடுத்திருக்கிறார். உண்மையில் கடவுள் மிகவும் அன்பானவர்! அவரைக் குறை சொல்லாதே! ஓய்வெடுக்க வேண்டும்; தென்றலின் குளுமையை அனுபவிக்க வேண்டும்!-என்ற முடிவை நான் எடுத்தேன். அனுபவிக்கிறேன்! உன்னை வேண்டா மென்று நானா தடுத்தேன்! இதோ, இந்த மரத்தடி யிலேயே உட்கார்ந்து நீயும் கண்களை மூடித் தென்றலை இரசிக்கலாமே!''

முயல் கூறியது, ''நன்றி காக்கை அண்ணாச்சி! முடிவெடுக்கும் உரிமையை நான் முழுவதாகப் பயன் படுத்திக்கொள்ளப் போகிறேன்! நானும் உங்களைப் போல் கண்களை மூடிக்கொண்டு காற்று வாங்கப் போகிறேன்!''

மரத்தின் அடியில் ஒரு வசதியான இடத்தை முயல் தேர்ந்தெடுத்து அங்கே உட்கார்ந்து, கண்களை மூடிக்கொண்டது. குளிர் தென்றல் அதன் மேனியை வருடிச் சென்றபோது மகிழ்ச்சியால் தன் உடலைச் சிலிர்த்துக்கொண்டது. ''ஆஹா! என்ன ஆனந்தம்!''.

இவ்வளவையும் புதரிலிருந்தபடி கவனித்துக் கொண்டிருந்த ஒரு நரி, முயல் கண்களை மூடிய அடுத்த நிமிடம், அதன்மீது பாய்ந்து, வாயால் கவ்வி, அதனைக் கொன்று தின்ன புதரை நோக்கி ஓடியது.

செத்துக் கொண்டிருந்த முயலைப் பார்த்து, மேலே இருந்த காகம் கூறியது, ''முயல் தம்பி, நீ கூட என்னைப் போல மகிழ்ச்சியாகக் காற்று வாங்கலாம்! எப்ப தெரியுமா? என்னைப் போல, ஒரு வசதியான, உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டால் தாராளமாக வாழ்க் கையை அனுபவிக்கலாம்!''

எப்போது அனுபவிப்பது?

நம் அனைவருக்குமே வாழ்க்கையில் இளைப் பாற வேண்டியது அவசியம்தான். ஆனால், ஓய்வு எடுப்பதற்கும், மகிழ்வாக இளைப்பாறுவதற்கும் உரிய நேரமிருக்கிறது. யார் கடுமையாகக் களைத்துப் போகும் அளவிற்கு உழைக்கிறார்களோ, அவர்களுக்குத் தான் ஓய்வெடுக்கும் உரிமையும் உள்ளது.

இருப்பினும் நம் நிஜ வாழ்க்கையில், எல்லா வசதிகளோடும் பிறந்துள்ள சிலரை நாம் பார்க் கின்றோம். எதற்கும் ஓடி, ஆடி வேலை செய்ய வேண்டிய நிலையில் அவர்கள் இருக்க மாட்டார்கள். அவர்களிடம் எல்லாமே இருக்கும். ஆகவே, அவர்கள் வாழ்க்கையை மகிழ்வாக அனுபவிப்பார்கள். அப்படித் தான் காகம் தன் கண்களை மூடியபடி, தென்றலை அனுபவித்துக்கொண்டிருந்தது.

ஆனால், சிலருடைய படைப்பு வேறு மாதிரி! அவர்கள் வாழ்க்கையில் போராடியே தீரவேண்டும்; பாடுபட்டேயாக வேண்டும். அவர்களுடைய உணவுக் காகவும், அன்றாடத் தேவைகளுக்காகவும் அவர்கள் உழைத்தேயாக வேண்டும். இது அவர்களுடைய தலைவிதி! ஆனால், இதற்காக நாம் கடவுளின் மீது பழி போட முடியாது.

அவர்கள் வாழ்க்கையை அப்படியே, அதன் எதார்த்த நிலையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். முயல் எப்போதும் ஓடிக் கொண்டுதான் இருக்க வேண்டும். அது அப்படித்தான் படைக்கப்பட்டது.

திடீரென்று காகத்தைப் பார்த்த முயலுக்குப் பொறாமை வந்தது. அதைப் போல ''நாமும் மகிழ்ச்சி யாக ஓய்வெடுக்க வேண்டும்'' என்ற எண்ணம் வந்தது. அந்த வேலையில் இறங்கியவுடன் தன் உயிரையே இழந்துவிட்டது.

இந்தக் கதை நமக்கு ஒரு செய்தியைத் தெளிவாகச் சொல்லுகின்றது. வாழ்க்கையில் ஒரு வசதி யான நிலையை அடையாத வரையில் நாம் ஓயக் கூடாது. ஓர் ஏழையோ, அல்லது நடுத்தர நிலையிலுள்ள வனோ, செல்வனைப் போல எண்ணினால், அவன் இருக்கின்ற வாழ்க்கையை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். இதுதான் முயலுக்கு ஏற்பட்டது!

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் இருப்பார்கள். வசதியான குடும்பத்தைச் சார்ந்த வேறு சில மாணவர்கள், புகைத்தும், குடித்தும், ஆடியும், கும்மாளமடிப்பதையும் பார்த்துவிட்டு, நாமும் ஏன் அப்படி வாழக்கூடாது என்று எண்ணலாம்! ஆனால், அப்படி இறங்கி விட்டால் தோல்வு என்கின்ற நரி அவர் களைத் தீர்த்துவிடும். அவர்களுடைய எதிர்காலம் அவ்வளவுதான்!

இதனால் ஏழைகள், ஏழைகளாகவே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை! கடுமையாக உழைத்துத் திட்டமிட்டு முன்னேறி, அவர்களும் தங்கள் வாழ்க் கையை உயர்த்திக் கொள்ளலாமே!

ஓர் உயர்ந்த நிலையை அடைய விரும்பும் போது, அதற்கேற்ற தகுதியை நாம் ஏன் உழைப்பால் அடைய முதலில் முயலக் கூடாது. *

(தொடரும்)



For
Exotic Holidays
in Sri Lanka

Ceylon Tourist Board Approved 3* Hotel

Tilko Tour Package
Business Centre
Conference / Function Hall
Modern Sri Lankan & Continental Restaurant

TILKO
Holidays
(Member of Tilko Group)

GLM
THE GUILD OF LETTING & MANAGEMENT

TILKO
ESTATES

SALES
LETTINGS
MORTGAGES


18
YEARS OF EXCELLENCE

Please call for any sales, letting or free mortgage advice enquiries in London

Tele phone: (+44) 07957400777

| East Ham | Stratford | Walthamstow |
|---|---|---|
| 213 High Street North | 1 Leyteestone Road | 252 Hoe Street |
| London E6 1JG | London E15 1JA | London E17 3AX |
| Tel: 020 8472 0029 | Tel: 020 8503 1999 | Tel: 020 8520 9968 |
| Fax: 020 8503 5996 | Fax: 020 8503 0999 | Fax: 020 8503 7661 |
| eastham@tilko.co.uk | stratford@tilko.co.uk | walthamstow@tilko.co.uk |

RESIDENTIAL & COMMERCIAL


Chennai Dosa
www.chennaidosa.com
....Probably
The Best Dosa Maker In Europe....
THE 6 FOOT DOSA!
HIGHEST NUMBER OF
DOSA & IDLI SELLERS IN UK
353 High Street North, Manor Park, London, E12 6PQ T: +44 (0)20 8586 7729 F: +44 (0)20 8586 8494
339 High Street North, Manor Park, London, E12 6PQ T: +44 (0)20 8470 6566 F: +44 (0)20 8821 9194
177 High Street North, East Ham, London E6 1JB T: +44 (0)20 8552 2430
239-241 London Road, West Croydon, Surrey CR0 2RL T: +44 (0)20 8665 9192 F: +44 (0)20 8665 1070
529 High Road, Wembley, Middlesex HA0 2DH T: +44 (0)20 8782 2222 F: +44 (0)20 8782 8822
3 Ealing Road, Wembley, Middlesex HA0 2AA T: +44 (0)20 8782 8822
We are a part of Chennai Dosa Group,
Please Look for our Logo, Do not be misled by similar Sounding names
Chennai Dosa